# நல்லைக்குமரன் மலர்

இதழ் – 28




PUBLIC LIBRARY
JAFFNA

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற

சைவசமய விவகாரக்குழு

**2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 28

## 2020

PUBLIC LIBRARY
JAFFNA

PUBLIC LIBRARY
JAFFNA

பதிப்பு

மலர்க்குழு

9906(P)
PL

**சைவசமய விவகாரக் குழு**

**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
# சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் - 2020

| | | |
|---|---|---|
| போசகர் | : | **கௌரவ இம்மானுவல் ஆனல்ட்**<br>முதல்வர், யாழ்ப்பாண மாநகரசபை |
| தலைவர் | : | **திரு இ.த.ஜெயசீலன்**<br>மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். |
| செயலாளர் | : | **திரு பு. ஆறுமுகதாசன்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகர சபை. |
| பொருளாளர் | : | **செல்வி பொ. புஸ்பலதா**<br>கருவியறைப் பாதுகாவலர், யா.மா.சபை |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | **திரு அ.சீராளன்**<br>செயலாளர், யா.மா.சபை |
| | | **திரு க.ஜெயானந்தன்**<br>நிர்வாக உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | **திரு ச.சற்குணமூர்த்தி**<br>வருமான மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | **திரு சோ.கணேசநாதன்**<br>மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | **திரு கு. விஜயகுமார்**<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | **திரு செ. பன்னீர்ச்செல்வம்**<br>றோணியோ இயந்திர இயக்குநர், யா.மா.சபை |
| | | **திரு க. கேதீஸ்வரன்**<br>நீர்வேலைப்பகுதி, யா.மா.சபை |
| | | **திருமதி சு.சதாசிவமூர்த்தி**<br>பிரதம நூலகர், யா.மா.சபை |
| | | **திருமதி தி.சக்தி**<br>அபிவிருத்தி உத்தியோகத்தர், யா.மா.சபை |
| விளம்பர முகவர் | : | **திரு த.கனகசபை**<br>இளைப்பாறிய பிரதம காசாளர், யாழ். மாநகர சபை. |
| பதிப்பு | : | **மலர்க் குழு** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

ஈழத்தமிழ் மக்களின் தனிப்பெரும் கடவுளாக நல்லைப்பதியில் வீற்றிருந்து எமையெல்லாம் ஆளும் நல்லைக்கந்தப் பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படும் 28 ஆவது மலர் இது.

28 ஆண்டுகள் தொடர்ச்சியாக நல்லைக்குமரன் மலர் வெளிவருகிறதெனில் அதற்கு நல்லூர் கந்தவேற்பெருமானின் பெருங் கருணையே மூலகாரணமாகும்.

ஈழத்தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்த போதெல்லாம் நல்லூரில் வீற்றிருக்கும் ஆறுமுகப்பெருமானைத் தஞ்சமெனக் கொண்டே தமது துன்ப துயரங்களைக் கடந்து தங்களின் வாழ்வியலைச் செழுமை குன்றாமல் நகர்த்தி வந்தனர்.

இவ் வருடம் உலகையே உலுக்கும் கொடிய நோயின் தாக்கத்தில் எமது நாடும் கொரோனாதொற்று நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் நடைபெறும் நல்லூர் மகோற்சவத்தினை முன்னிட்டு 1993ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையினது சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலரின் 28வது மலர் தற்போதைய சூழ்நிலையிலும் வெளியிடப்படுகிறது.

காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்களும் மாறுதல்களும் சிக்கல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இம்முறை வந்துள்ள சிக்கல் மிகவும் வித்தியாச மானது. கண்ணுக்குத் தெரியாத கிருமியுடனான யுத்தம் இன்று நிகழ்வது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள சுகாதார நடைமுறையின் கீழ் வழமையான உற்சவகால வழிபாடுகள், கலகலப்புகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட முடியாத நிலை தோன்றியுள்ளது. இந்நிலையிலும் யாழ் மாநகரசபையின் சைவசமய விவகாரகுழு நல்லைக்குமரன் மலரை மட்டுப்படுத்திய அளவில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றியேனும் வெளியீடு செய்தே ஆகவேண்டும் என்ற நோக்கில் இம்முறையும் 28வது மலரை வெளியிட்டுள்ளது.

இம்மலர் சிறக்க எல்லாம் வல்ல நல்லைக் கந்தப்பெருமானின் பெருங் கருணையை வேண்டிப் பணிகிறோம்.

ஓம் சரவணபவ

**சைவசமய விவகாரக்குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**மலர்க்குழு**
**நல்லைக்குமரன் மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

**சமர்ப்பணம்**

**ஆசிச்செய்தி**

**வாழ்த்துச் செய்தி**

**இன்றும் நீ காப்பாய் எழுந்து** 01

இ.த.ஜெயசீலன்

**"தென்றலிலும் வீசிவரும் நல்லூர் வாசம்"** 02

கவிஞர் சின்னப்பு தனபாலசிங்கம்

**அருள்புரிவாய்** 03

கலாபூஷணம் கீழ்கரை கி.குலசேகரன்

**நல்லையின் தொல்புகழைக் காப்பவனே...** 04

சின்னையா சிவபாலன்

**வள்ளி அறியாமல் ஓடிவந்தீரோ?** 07-11

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

**முருக வழிபாட்டில் விரதங்கள்** 12-13

கீர்த்தனா ஆறுமுகதாசன்

**குமார தந்த்ரம்** (कुमार तन्त्रम्) **- ஓர் பார்வை** 14-27

தி.மனோக்ஷன்

**ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் கைதடி (இனுவில்)**

**சச்சிதானந்த சுவாமிகள் சச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி** 28-30

இனுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்.

**இந்து ஆலயங்களும் வழிபாடும் ஒரு சமூகநோக்கு** 31-36

கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்

**இந்துக்களின் ஒழுக்கவியல்** 37-39

ஆரணி விஜயகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமய, சமூக ஒருமைப்பாடு : திருமந்திரத்தினூடான ஒரு வாசிப்பு** **40-44**

தி.செல்வமனோகரன்

**முருகும் முருகனும்** **45-52**

– கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்

**“மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம்” என்ற மணிவாசகரின்**

**திருவாசக அடியினை முன்னிறுத்திய உரையாடல்** **53-58**

கலாநிதி S.முகுந்தன்

**சிலப்பதிகாரத்தில் சிகிவாகனன்** **59-62**

த.அபிநாத்

**நால் வகை வாழ்க்கை நிலை (ஆச்சிரம தர்மம்)** **63-65**

சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்

**இந்துமதத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்தி நிற்கும்**

**யோகக்கலையின் சிறப்புகள்** **66-69**

ஸ்ரீ. நதிபரன்

**சமயங்களே சட்டங்களின் விளைநிலங்கள்** **70-74**

பா. பிரசாந்தனன்,

**உணவு உட்கொள்ளும் முறை - சித்தமருத்துவம்** **75-77**

சித்த மருத்துவர் தி.சுதர்மன்

**தவத்திரு நல்லூர் சடையம்மா சுவாமிகள்** **78**

**2020இல் யாழ் விருதினைப் பெறும்**

**கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் அவர்கள்** **79-80**

பு.ஆறுமுகதாசன்

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லைக்குமரன் மலர்
# 2020

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்


- நல்லை ஆதீன முதல்வர்

  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்

- இராமகிருஷ்ண மிஷன்

  சுவாமி சர்வரூபானந்த

- வீணாகான குருபீடதிபதி

  வித்யாலாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்

- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

  செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்

- அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர்

  திரு.மா.தவயோகராஜா

- யாழ் மாநகர முதல்வர்

  கௌரவ இம்மானுவல் ஆனல்ட்

- யாழ் மாநகர பதில் முதல்வர்

  கௌரவ து.ஈசன்

- யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

  திரு.க.மகேசன்

- யாழ் மாநகர ஆணையாளர்

  திரு.இ.த.ஜெயசீலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222870

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**


# நல்லை ஆதீன முதல்வரின்
# அருளாசிச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு ஆண்டு தோறும் வெளியிடும் நல்லைக்குமரன் மலர் 28வது மலராக மலர இருப்பதையிட்டு பெரும் மனமகிழ்ச்சியடைகின்றோம். உலக நாயகனாம் நல்லைக்கந்தன் அழகே வடிவானவன் அவனை அழகு செய்யும் வகையில் 27 மலர்கள் மலர்ந்து உலகம் வாழ் அனைத்து மக்களையும் தன்வசப்படுத்தியது. இவ்வருடமும் பல தகவல்களுடன் மலர இருப்பது மன மகிழ்ச்சியை தருகின்றது இம் மலரை வெளியிடும் ஆசிரியர்களுக்கும் குழுவினர்களுக்கும் வாழ்த்துக்கள்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு".**

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழுவினர் ஆண்டு தோறும் நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் நமது மதத்தின் பெருமைகளை சமூகத்திலுள்ளவர்களுக்கு முக்கியமாக, இளைய தலை முறையினருக்கு தெரிவிப்பதற்கு இயைபாக 'நல்லைக்குமரன்' என்ற பெயரில் ஒரு மலரை வெளியிட்டு வருகின்றனர். கடந்த 1993ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வெளியிடப்படும் இம்மலர் இவ்வாண்டு 28ஆவது மலராக மலர இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் அடியவர்களுக்கு அருள் பாலிப்பதற்காக ஆலயங்களில் உருவச் சிலை மூலம் வெளிப்படுகின்றான் ஆலயங்களின் நோக்கமே அதுதான்.

பசு மாட்டில் பால் எங்கும் பரந்திருந்தாலும் அது கிடைப்பது
மாட்டின் மடியில் தான் அதேபோல கோவில்களில்
இறைவனது வெளிப்பாடு கூடுதலாக இருக்கும்

என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியிருக்கிறார். அதிலும் விசேட திருவிழாக்கள் நடைபெறும்போது இறைவனது வெளிப்பாடு சிறப்பாக அமைவது எல்லோருக்கும் தெரிந்ததே.

விழாச் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும் நல்லைக்குமரன் சிறப்பு மலர் பலருக்கும் பிரயோனமாக இருக்கும். நமது பண்பாட்டையும் சமயச்சிறப்பையும் வருங்காலத் தலைமுறையினருக்குத் தெரியவைப்பதற்கு மலர் உதவியாகும். மேலும் இம்மலர் பல நூல் நிலையங்களிலும் வைக்கப்பட வேண்டியதாகும். அதன் மூலம் இன்னும்பலர் வாசித்துப்பயன் பெறுவர். தன்னலம் கருதாது பிறர் நலனையே கருதிச் சேவை செய்துவரும் சைவ சமய விவகாரக்குழுவின் இம்முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. மலர் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய வேண்டும் என்று நல்லைக்குமரனைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்

சுவாமி அக்ஷராத்மானந்த (கையொப்பம்)

**இராமகிருஷ்ண மிஷன்**
**கொழும்பு.**

**சுவாமி அக்ஷராத்மானந்த**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வீணாகான குருபீடம்
# VEENAGANA GURUPEEDAM

இந்து கலாசார வேத, ஆகம சாஸ்திர சடங்கு சம்பிரதாய ஆலோசனைக்கானதும்,
சமய சமூக நற்பணிகளுக்குமான குருமார் சந்நிதானம்

வண.சந்நிதாச்சாரியார்,
சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்,
அமைப்பாளர்,
குருமார் சந்நிதானம்,
சித்தன்கேணி,
யாழ்ப்பாணம்.

Mobile : 0777397926

Rev.Sannithachariyar
Sivasri.Saba.Vasudevakkurukkal
Organizer,
Veenakana Gurupeedam,
Gurumar Sannithanam,
Sithankerney, Jaffna.

# வீணாகான குருபீடாதிபதியின்
# ஆசிச்செய்தி

யாழ் மாநகராட்சிமன்ற சைவ சமய விவகாரக் குழு நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தினை முன்னிட்டு வருடம்தோறும் வெளியிட்டுவரும் நல்லைக்குமரன் மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். இவ்வருடம் 28ஆவது மலராகும். காலத்தின் வழிப்படுத்தலை நினைவுபடுத்தும் எண்ணிக்கையை காட்டும் ஆண்டாக அமைந்துள்ளது. 28 என்பது சைவத்தின் சட்டநூலாகக் கருதப்படும் ஆகம நூல்களின் எண்ணிக்கையாகும். ஆலயங்களை ஸ்தாபிப்பது முதலாக நாம் வழிபடும் முறைகளையும் அவற்றோடு சைவ பாரம்பரீய வாழ்கை முறைகளையும் தருகின்ற சட்ட நூல் ஆகமங்கள் ஆகும். வியக்கவைக்கும் கணிதம், சோதிடம், விஞ்ஞானம் மருத்துவம் என அனைத்து துறைகளுக்கும் முதல் நூலாக அமைந்து மனித ஆராய்சிக்கே முதற் புள்ளியாகவும் விந்தையாகவும் அதிசயமாகவும் ஆகமங்கள் காணப்படுகின்றன.

ஆகமங்களின் அறிவும் தெளிவும் இன்று எம்மவர்க்கு அதிகமாக தேவைப்படுகின்றது. ஆலயங்கள் சார்பான வழக்குகள் இன்று அதிகரித்து வருவதற்கும் ஆகமங்கள் சார்பான அறிவு போதாமையும் ஒரு காரணமாகும். மக்களுக்கு ஆகமம் சார்ந்த தெளிவு போதாமை சமய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கையற்றுப் போவதற்கும் காரணமாகவும் அமைகின்றது. இயற்கையினாலும் செயற்கையினா லும் எம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு ஆகமங்கள் பல வழிமுறைகளை எடுத்துக் காட்டுகின்றது. அவற்றினை நாம் சரிவர பின்பற்றுவதன் மூலம் நாம் அழிவில் இருந்து தப்பித்துக் கொள்ளமுடியும். ஆகமங்கள் சார்பான விடயங்களை குரு மார்களும், சைவப் பிரசங்கிமார்களும், அறிஞர்களும் மற்றும் பெரியவர்களும் பல வடிவங்களில் வெளிப்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் சைவசமயம் சார்பான பல நல்ல விடயங்களை ஆகமங்களின் சாரமாக அமைந்தது போல் தற்காலத்தில் மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் நல்லைக்குமரன் மலர் அற்புதமாக வருடம் தோறும் தந்துகொண்டிருக்கின்றது. சைவத்தினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழையும் வளர்ப்பதற்கு நல்லைக்குமரன் மலர் நன்கு வழிவகுத்து வருகின்றது. தலைமுறை தொடர்புகளை இணைப்பதற்கு பாலமாக நல்லைக்குமரன் மலர் வெளிவருகின்றது. முன்னவர்களது அனுபவத்தினை இளைய தலை முறையினருடைய வாழ்விற்கு முதலாக நல்லைக் குமரன் இடுகின்றது. காலம் தவறாது பணிகளை ஆற்றிவரும் யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு சைவத்தமிழ் மக்கள் சார்பான நன்றிகளும் பாராட்டுக்களும். இளையவர் மத்தியில் சமய நம்பிக்கையூட்டும் வகையில் பல பணிகளை ஆற்றி வருகின் மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக்குழுவின் பணிகள் மகத்தானது. அதில் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது நல்லைக்குமரன் மலர் வெளியீடும் விருது வழங்கலுமாகும்.

28 நல்லைக்குமரன் மலர்களும் சைவாகமங்கள் 28 ஆக போற்றப்பட வேண்டியவையாகும். ஒவ்வொரு மலரினதும் மலராசிரியரின் கருத்து காலத்தின் அறிவுரையாக அமைந்தவையாகும். இன்று உலகை அச்சுறுத்தும் தொற்று நோய்க்கே எமது சைவசமய வாழ்வியல் முறை சவாலாக அமைந்தது எனலாம். ஆகமம் காட்டும் வழிகளைப் பின்பற்றுவோம். சைவமாக, சிவனாக, தமிழாக திகழும் நல்லைக்குமரன் வாழ்க. மலர் குழுவினதும் சைவசமய விவகாரக் குழுவினரதும் பணிகளுக்கும் வாழ்த்துக்கள். அனைவரும் நல்லூரான் துணைநிற்க வாழ்த்தி ஆசீர்வதித்து நிறைவு செய்கின்றேன்.

**குரு முதல்வர்** **சந்நிதாச்சாரியார்**

**வீணாகானகுருபீடம்** **சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்**

**(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் திருக்கோவில், சண்டிலிப்பாய்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

T.P No : 021 - 3213151

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com

திகதி: 02/06/2018

Fax:- 021 2241909

தலைவர்:

செஞ்சொற் செல்வர்

கலாநிதி. ஆறு திருமுருகன்

Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511


## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின்
## <u>ஆசிச் செய்தி</u>

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி – கிளியே!
இரவுபகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி – கிளியே !
நல்லூரான் தஞ்சமெடி

.... யோகசுவாமிகள்

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு வருடந்தோறும் யாழ் மாநகர சபை சைவ விவகாரக்குழு வெளியிடும் நல்லைக்குமரன் மலர் சிறக்க ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். ஈழத்தமிழர்களின் வரலாற்று அரணாக விளங்குவது நல்லூர் கந்தசாமி கோவில். இத்திருக்கோவில் திருவிழா என்பது சைவத் தமிழர்களின் பண்பாட்டு விழா இப்பெருமையை உணர்த்தும் ஆவண மலராக, கடந்த இருபத்தியாறு ஆண்டுகளாக நல்லைக்குமரன் மலர் வெளி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

யாழ் மாநகரசபை ஆற்றும் அரிய பணிகள் மறக்கமுடியாதவை. நல்லூர்த் திருவிழாக் காலத்தில் இரவு பகலாக நல்லூரான் சூழலைத் தெய்வீகமாகக் காக்கும் பெரும்பணி என்றும் நன்றிக்குரியது. அத்தகைய தொண்டுப் பணிகளுக்கு மத்தியில் சைவத்தமிழ் ஆராய்ச்சி நூலாக இவ்வரிய நூலை வெளியிடுவது என்பது மகத்தான காரியம். எங்கள் காரியம். எங்கள் சமயத்தின் மேன்மையை, வரலாற்றுத் தடயங் களை ஆவணப்படுத்தும் அரிய முயற்சி தொடர்வது எம் தவப்பயனே. இப்பணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயராது உழைக்கும் சைவசமய விவகாரக்குழுவுக்கு சைவ உலகம் என்றும் நன்றிக் கடனுடையது.

நல்லூர் கந்தனை அடிப்படையாகக் கொண்டு தமிழர் பாரம்பரியம் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் அறிவுலகம் மேற்கொண்டுள்ளது. எனினும் நல்லூர் சூழல்பற்றிய ஆய்வுகள் முற்றுப்பெறவில்லை. எதிர்காலத்தில் நல்லூர் கந்தனை அடிப்படையாகக்கொண்டு நல்லூர் ராஜதானி மற்றும், பாரம்பரிய மற்றும் மரபுகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு நல்லைக்குமரன் மலர் களமாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

ஆவணப்பணியான இவ் அறிவுப்பணி சூரிய சந்திரர் உள்ளவரை தொடர நல்லைக்கந்தனைப் பிரார்த்தித்து ஆசியுரையை நிறைவு செய்கிறேன்.

**தலைவர்**
**சிவபூமி அறக்கட்டளை**
**உபதலைவர்**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அகில இலங்கை இந்துமாமன்றம்

(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

**(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)**


தலைவர்
**President:**
மாணிக்கம் தவயோகராஜா
*Manikkam Thavayogarajah*
*Phone: 2695120 (Res)*
*Mobile: 0777786686*
*mthavam@gmail.com*

பொதுச் செயலாளர்
**Hony. General Secretary:**
வேலுப்பிள்ளை கந்தசாமி
*Velupillai Kandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*

பொருளாளர்
**Hony. Treasurer:**
அ.கயிலாசபிள்ளை
*Abirami Kailasapillai*
*Phone: 2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*


## அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைவாழ் இந்துக்களின் ஒரு அடையாளமாக, வள்ளி தெய்வானை தேவியர் சமேதராக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் நல்லூர்க் கந்தசுவாமியின் வருடாந்தப் பெருந்திருவிழாவினை முன்னிட்டு, யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினரால் வருடந்தோறும் வெளியிட்டு வைக்கப்பட்டுவருகின்ற, இருபத்தெட்டாவது "நல்லைக்குமரன்" மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இயற்கையை மனிதன் வெற்றிகொள்ள தீவிர முயற்சிசெய்யும் ஒவ்வொரு தடவையும், எவ்வகையிலும் இயற்கையை மனிதனால் வெற்றிகொள்ள முடியாது என்பதை நினைவூட்டும் விதத்தில் இயற்கை மனிதனைத் தண்டித்த வண்ணமே உள்ளது. இதனை மனிதன் உண்மையில் உணரவில்லை என்பதனையே அவனது அடுத்தடுத்த செயற்பாடுகள் காட்டுகின்றன.

அந்த இயற்கையினை ஒவ்வொரு காரண - காரிய நிமித்தம் ஒவ்வொரு பெயரிட்டு வழிபட்டுவரும் வாழ்க்கை நெறியே இந்து சமயம் என்ற பெயருடன் பல ஆயிரம் வருடங்களுக்கு மேலாக நின்று, நிலைத்து நம்மை வழிப்படுத்துகின்றது.

இலங்கை இந்துமன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமாகத் திகழும் **அகில இலங்கை இந்து மாமன்றம், தனது குறிக்கோள்களில் ஒன்றாக "இந்து தர்ம அறிவினையும் சாதனையையும் விருத்தி செய்வதுடன் சமயக் கல்வியையும் கலாசாரத்தையும் அபிவிருத்தி செய்தல்" என்பதைக் கொண்டுள்ளது.**

அவ்வாறான எமது நோக்கங்களுக்கு, யாழ். மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவின் "நல்லைக்குமரன் மலர்" வெளியீட்டு உந்து சக்தியாக விளங்குமென்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாக 200 ஆண்டுகளுக்கு மேல் அந்நிய ஆக்கிரமிப்பாலும் அந்நிய மத திணிப்பாலும் புரையோடிச் சிதைந்துபோயுள்ள நமது யாழ் மண்ணின் பாரம்பரியம் மீட்டெடுக்கப்பட்டு அதன் தனித்துவமும் பழமையும் காக்கப்பட வேண்டும். கந்தபுராண கலாசாரத்தைக் கொண்டதெனப் போற்றப்படும் யாழ். மண்ணில் இந்து சமயமும் தமிழும் சில புறக்காரணிகளால் மெதுவாக வலுவிழக்கச் செய்யப்பட்டு வருகின்றது. மேலைத்தேயத்து சிந்தனைகள் மற்றும் மேலைத்தேய சமய விசுவாசிகளால் எமது மண்ணில் இன்றும் தமது ஆதிக்கத்தை செலுத்தும் வகையில் இந்த மண்ணின் சுதேச மக்களின் அடையாளமான தமிழ் மொழி மீதும் இந்து சமயத்தின் மீதும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டுக்கொண்டே வருகின்றது. இதனை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு விழிப்படைய வேண்டும்.

அதேவேளை, இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் சமூகப் பொறுப்புணர்வுடன், தேவையுடைய மாணவர்களை, குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றவேண்டும். பணம் பதவி புகழ் என்பன நிலையற்றவை என்பதை மனதிற்கொண்டு மக்களின் உண்மையான முன்னேற்றத்தினைக் கருதி ஒவ்வொருவரும் தன்னலம் கருதாது தொண்டாற்ற வேண்டும்.

யாழ். மாநகர மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் வருடந்தோறும் வெளியிடப்படும் “நல்லைக் குமரன்” மலரும் இளம் தலைமுறையினரிடையே சமய அறிவினையும் இறைபக்தியையும் ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

இவ்வாண்டு வெளிவருகின்ற மலர் சிறப்புறவும், அதன் மூலம் தங்கள் குறிக்கோள் நிறைவுறவும் அகில இலங்கை இந்து மாமன்றம் உறுதுணையாக இருக்குமென்பதுடன் தங்களின் இந் நற்பணி மேலோங்க சகலசெல்வங்களும் அருளும் சண்முகப்பெருமான் பாதக்கமலங்கள் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**இல 91/1 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர்மாவத்தை,**
**கொழும்பு 02.**

**மா. தவயோகராஜா**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහ නගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். ජෙදුරුතුඩුව පාර, යාපනය. Point-Pedro Road, Jaffna.

அலுவலகம் / කාර්යාලය / Office } 021 222 2275
தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 222 2334
இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet } www.jaffna.mc.gov.lk

# யாழ் மாநகர முதல்வரின்
# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய குழுவினர் இம்முறை 28ஆவது நல்லைக்குமரன் மலரை வெளியிட எடுத்துக்கொண்ட அரும்பெரும் முயற்சி வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரிய சாதனையாகும்.

உலகெங்கும் கொரோனாவின் கொடிய தாக்கம் வியாபித்திருக்கும் இவ் வேளையிலும் நல்லூர் கந்தனின் புகழை எடுத்தியம்ப தவறவில்லை. என்றென்றும் இவர்களின் இம் முயற்சி ஈடேற வேண்டும் என நல்லூர் முருகனை வேண்டி நிற்கின்றேன். இவர்களின் முயற்சியை வாழ்த்துகிறேன்.

உலகெங்கும் நிலவும் கொரோனாவின் கொடூரத்தால் நல்லூரானின் உயர் திருவிழாவில் மக்கள் சுதந்திரமாய் வழிபாடு செய்ய முடியாமைக்கு மனம் வருந்துகிறோம். எது என்னவானாலும் நல்லூரானின் கிருபாகடாட்சம் எமக்கு குறைவில்லா நிறைவாக எப்பொழுதும் இருந்தேயாகும் என்ற நம்பிக்கையுடன் எதிர் காலம் சீரும் சிறப்புமாக இருக்கவேண்டும் என எல்லாம் வல்ல முருகனை வாழ்த்தி துன்பம் அற்ற இன்ப வாழ்வு அனைவருக்கும் கிட்ட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"

இவ்வண்ணம்

இம்மானுவல் ஆனல்ட்.
முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

**மாநகராட்சி மன்றம்**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ துரைராசா ஈசன்
பிரதி முதல்வர்
**Hon. Thurairajah Eesan**
**Deputy Mayor**
ගරු.තුරෛරාජා ඊසන්
නියෝජ්‍ය නගරාධිපති
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
MUNICIPAL COUNCIL, JAFFNA.
මහ නගර සභාව, යාපනය.

தொலைபேசி இல :
Telephone No : 0779174936
දුරකථන අංකය : 0774999126

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Point-Pedro Road, Nallur, Jaffna.
පේද්‍රුරු තුඩුව පාර, නල්ලූර්, යාපනය.

# யாழ் மாநகர பதில் முதல்வரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற சைவ சமய குழுவினால் நல்லைக் கந்தனின் மகோற்சவ காலத்தில் 1993ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் தற்போதைய சூழ்நிலையிலும் வெளியிடப்படும் 28வது மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைவதோடு மலர் சிறப்பாக வெளிவர இறையருளை வேண்டுகின்றேன்.

1993ம் ஆண்டு தொடக்கம் சைவத்தின் தொன்மை பெருமைகளை உலகறியச் செய்யும் ஆன்மீகம் சார்ந்த இந்துசமய வரலாறுகள் சார்ந்த பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்களிற்கு பெரிதும் பயன் தரவல்ல ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் நல்லைக் குமரன் மலரின் 28வது மலர் சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் சைவசமய விவகாரக் குழுவின் இப் பணி தொடர நல்லைக்கந்தனின் அருள் ஆசி கிடைக்கப்பெறுவதாக.

'மேன்மை கொள் சைவ நீதி'
விளங்குக உலக மெல்லாம்

து.ஈசன்,
பதில் முதல்வர்,
யாழ் மாநகரசபை.



Digitized by Noolaham Foundation.

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය / தொலைபேசி / Telephone 021-222 2235
ෆැක්ස් / பக்ஸ் / Fax 021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. Message from GA
ඔබේ අංකය / உமது எண் / Your No.
දිනය / திகதி / Date

# யாழ்ப்பாண அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நல்லைக் கந்தனது மகோற்சவத்தை முன்னிட்டு வெளிவரும் நல்லைக்குமரன் 28வது மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இளைய தலைமுறையினரிடையே சைவ சமய அறிவினையும் இறை பக்தியையும் ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் நோக்கோடு கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பணியாற்றிவரும் யாழ் மாநகராட்சி மன்றத்தின் பணி பாராட்டிற்குரியது.

நல்லைக் கந்தனின் சிறப்புக்களும், ஆன்மீக இறை அனுபவங்களும் கட்டுரைகளாக நல்லைக்குமரன் மலரில் வெளிவருவது ஆன்மீக தேடலுக்கு அருமருந்தாக அமைவதோடு நல்லைக்குமரனின் அருள் வெளிப்பாட்டின் அனுபவங்களையும் பதிவு செய்யும் ஆவணமாகவும் நல்லைக்குமரன் மலரினை நோக்கமுடியும்.

இவ் அரிய முயற்சியில் இடைவிடாது தொடர்ச்சியாக செயற்படும் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகார குழுவினருக்கும், ஆக்கங்களை வழங்கிய கட்டுரையாளர்களுக்கும் நல்லைக் குமரனின் அருள் கிடைக்க வேண்டுவதுடன் இறை பணி தொடர என் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் மலரும் நல்லைக் குமரன் 28ஆவது மலர் சிறப்புடன் இதழ் விரிக்கவும், எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானின் பாதங்களை பணிந்து வேண்டுகின்றேன்.

நன்றி.

**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**க.மகேசன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ் மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

பன்னிரு விழிகளால் நம்மையெல்லாம் பரிபாலித்து அருள்பொழியும் நல்லைக் கந்தனின் பெருமைகளும் சிறப்புக்களும் தாய்த்தமிழ்த்தேச மக்கள் மட்டுமன்றி உலகத் தமிழர்களே போற்றும் அளவிற்கு காலாதிகாலமாக பெருகிவருவது கண்கூடு. இந்நிலையில் இன்றைய சமகாலத்தில் பல மாதங்களாக உலக ஒழுங்கே ஒரு அசாதாரண சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டு தடுமாறி நிற்கின்றது. இப்படியான ஒரு சூழலில்தான் நல்லைக்கந்தனின் மகோற்சவமானது வழமை போல சுகாதார நடைமுறைகளின் கீழ் இடம்பெறுகின்றது. கால சூழல்கள் மாறுபட்டாலும் எவ்விடர் நேர்ந்தாலும் நல்லைக்கந்தனின் உற்சவம் சிறப்புற நடைபெறும். அவ் உற்சவ காலத்தில் வெளிவரும் நல்லைக்குமரன் மலர் சீராக இடையறாது வெளிவந்துகொண்டிருக்கும். இவை நல்லைக் கந்தனின் பேரருளேயின்றி வேறொன்றுமில்லை.

கடந்தகாலத்தில் மிகவும் இடர்சூழ்ந்த வலிகாம இடம்பெயர்வின் பின்னர் மீள்குடியேறிய 1996ம் ஆண்டிலும் இடைவிடாது இம்மலர் மலர்ந்தமை இம்மலர் வெளியீட்டின் நேர்த்திக்கு தக்க ஒரு சான்றாகும். அந்தவகையில் இவ்வருடமும் நல்லை முருகப் பெருமானின் பெருந்திருவிழாக் காலத்தில் 28வது மலர் வெளிவருகிறது. அதாவது 27 திருவிழா தினங்களுக்கும் ஒரு மலர் என்ற ரீதியில் ஒரு முழுமையான சுற்று பூர்த்தி செய்யப்பட்டு அடுத்த சுற்றின் முதல் மலராக இம்மலர் வெளிவருவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நல்லைக்குமரன் மலர் என்பது ஒரு ஒப்புக்கு வெளியிடுகின்ற நூலல்ல. இம் மலருக்கூடாக எங்கள் மதம்சார், மொழி சார், இனம்சார் பண்பாட்டுக் கட்டமைப்புக்கள், சமய விழுமியங்கள் தொடர்ச்சியாக இளைய தலை முறையினரிடையே முன்மொழியப்பட்டு அவற்றின் இருப்புகள் இளையவர் களுக்கும் கடத்தப்படுகிறது. அந்தவகையில் இவ் இக்கட்டான கால கட்டத்தில் இம்மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டு மலர்குழுவினரால் தொகுக்கப்பட்டு நல்லைக்குமரன் மலராக வெளி வருவது சைவ சமய விவகாரக் குழுவின் அரும்பெரும் பணி என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுடன் நின்றுவிடாது சமய மற்றும் சமூகப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றுபவர்களுக்கு "யாழ்" விருது வழங்கிக் கௌரவிக்கும் பாரம்பரியமானது இம்முறையும் தொடர்வது ஆரோக்கியமானதொரு விடயமாகும். இம்முறை நாடறிந்த தமிழ், ஆங்கில அறிஞரும் ஈழத்தின் தலைசிறந்த மூத்த கவிஞர்களில் ஒருவரும், சமய சமூகப் பணிகளில் தனது 82வது வயதில் இன்றும் ஈடுபடுபவருமான கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களுக்கு வழங்கப் படுவது மிகுந்த மகிழ்வைத் தருகின்றது.


இவ்வாண்டு வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் சிறக்க வாழ்த்துவதுடன் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டுவிழா சிறக்கவும் சைவசமய விவகாரக் குழுவின் பணிகள் மேலும் செழித்து தழைத்தோங்கவும் நல்லூர்க் கந்தனைப்பிரார்த்தித்து நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துப் பணிகிறேன்.

**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குபேர வாசல் இராஜகோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்
# 2020
## கவிதைகள்

- இன்றும் நீ காப்பாய் எழுந்து
- "தென்றலிலும் வீசிவரும் நல்லூர் வாசம்"
- அருள்புரிவாய்
- நல்லையின் தொல்புகழைக் காப்பவனே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் நீ காப்பாய் எழுந்து

த.ஜெயசீலன்

என்னோடு துணை நிற்பாய்; ஏதும் தீமை
எனைத்தீண்டா துன்வேலால் தடுத்தாட் கொள்வாய்;
என் உடலில் என் மூச்சில் ஏதும் நோய்கள்
இறங்காமல் கண் ஒளியால் தொற்று நீக்கி
என்னை என் அயலை இடரணுகா தோட்டி
இதயத்துள் வைத்திருப்பாய்; உலகை விட்டித்
துன்பத்தை சாய்த்து எல்லோரும் விரைவாய்த் தேறத்
துணை செய்வாய்; நான் அவரைப் பாட வைப்பாய்!

நான் நடந்த பாதை எல்லாம் நிழலாய் நின்ற
நாயகனே! வெயில் மழையும் புயலும் காற்றும்
தீண்டாமல் பார்த்தவனே! போரின் பார்வைத்
தீ அருகே சீண்டாமல் தடுத்து மீட்ட
ஆண்டவனே! இன்றெமது கண்ணுள் சிக்கா(து)
ஆட்டுகிற கிருமியெமை அணுகா துந்தன்
சேனைகளால் காத்து அணை தேவே.. வந்து
தீண்டி நிதம் தொற்று நீக்கு நீறால் நீயே !

என் நன்மை தீமை என் வெற்றி தோல்வி
என் விருப்பு வெறுப்பெல்லாம் உனதே என்றேன்!
என் மீது விழும் புகழும் உனதே என்பேன்.
என் மீது விழும் பழியும் உனதே என்பேன்.
என் உடலை உயிரை இந்தச் சூழலோடு
என்றென்றும் மீட்டு என் களங்கம் சாய்த்து
என் பெருமை குன்றாது பார்த்துக் கொள்வாய்.
எனைச் சூழ்ந்து நீ நிழலாய் கவிந்து காப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றலிலும் வீசிவரும் நல்லூர் வாசம்"

கவிஞர் சின்னப்பு தனபாலசிங்கம்
புலோலி

அள்ளி வரும் தென்றலிலும் நல்லூர் வாசம்
அரோஹரா பேரொலியே பக்தரின் கோசம்
வெள்ளையுள்ள மனதுடனே அருள்பெறும் வேகம்
வெற்றிவடி வேல் பணிவோம் கரம் கூப்பி நாளும்

ஆண்டுகள் பல நூறின் முன் தோன்றிய கோவில்
அயில் கரத்தோன் ஆசிநல்கும் நல்லூர்
கோவில்
மீண்டும் மீண்டும் வரவழைக்கும்
யாழ்ப்பாணக் கோவில்
மின்னும் ஒளி தங்கம் கலந்த அழகனின் கோவில்

கண்கள் வேண்டும் கோடி அவன் கால்கள் காண - எமக்கு
கால்கள் வேண்டும் தினம் நல்லூர் தலத்தை நாட
பண் இசைத்துப் பாட வேண்டும் மனமும் மகிழ - நல்ல
பாய்க்கியம் நாம் பெற வேண்டும் நல்லூர் இடத்தைக் காண

தலைநகராம் யாழ் நகரில் குடி கொண்ட கோவில்
தங்கரதப் பவனி உலா வருகின்ற கோவில்
அலை ஆடும் கடல் சூழ்ந்த இலங்கை நாடு - அதன்
தலை மேவும் அழகான யாழ்ப்பாண நல்லூர் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்புரிவாய்

**கலாபூஷணம் கீழ்கரை கி.குலசேகரன்**
ஒய்வுநிலை பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி.

**பல்லவி**

வினை தீர்க்க விரைந்தோடி வாருமையா ! – நல்லை
நகர் வாழும் நாயகனே ! வேல் முருகையா ! ....... (வினை)

**அனுபல்லவி**

உனைத்தானே நிதம் பாடி உருகுகின்றேன் !
உன் திருகப் புகழ் பாடி தொழுது நின்றேன் ! ..... (வினை)

**சரணம்**

கருணை முகம் கண்டு கண் குளிர்வேன் ! .....
கடைக் கண் பார்வையிலே களிப்படைவேன் !
வருந் துயர் எதுவெனினும் தீர்த்து வைப்பாய் !
வண்ண மயில் மீது வந்து காட்சி கொடுப்பாய் !... (வினை)

வேழ முகத்தவனின் சோதரனே ! – வாழ்வில்
வெற்றிகள் தரும் உமை பாலகனே !
வாழ வழி காட்டும் வள்ளி மணாளனே !
வணங்கிடும் அடியவர்க்கு வரம் தருவாய் ! குகனே!... (வினை)

ஆயிரமாய் பக்தர்கள் அண்டி வந்து தொழுதேத்த – அந்த
அருணகிரியின் திருப் புகழின் ஒலி கேட்க
தாயினைப் போல் வந்து தயையை புரிவாய் ! செந்
தமிழாலே நினைப்பாட அருள் புரிவாய்..... (வினை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லையின் தொல்புகழைக் காப்பவனே...

ஆக்கம் : சின்னையா சிவபாலன்
கோண்டாவில்.

வல்லவினை போக்குவாய் தொல்லைகளை நீக்குவாய்
அல்லும்பகல் அடிபணியும் - அடியார்க்கு
வெல்லுமொரு வேலினாற் கொல்லவரும் பகையினை
இல்லையென ஆக்குவாய் - வடிவேலா
கல்வியற்ற மூடரின் கல்மனதுங் கசிந்திட
நல்லநிலை ஊட்டிநீ - அருள்வாயே
தில்லைநட ராசரின் செல்லமகன் ஆன நீ
வல்லகுரு வாகினாய் - அரனார்க்கே
முல்லைமலர் போலவே வெள்ளைநகை உதிர்த்து நீ
கொள்ளையிட்ட அன்பருளம் - பலகோடி
சொல்வதில் எழுத்தினோ செல்வதுடன் எழிலினைச்
சொல்லியதை முடிப்பதோ - முடியாதே
எல்லைபல தாண்டியே பல்லினத்தார் நாட்டனர்
வள்ளலுனைத் தேடிவந்து - வியந்தேத்த
நல்லைநகர்க் கோயிலில் நல்லதெய்வம் ஆகியே
தொல்புகழைக் காக்கும்தோகை - மயிலூரா!

வந்தனை புரிந்திடின் வந்தருள் பொழிந்திடும்
விந்தைவேல் வந்திடுங் - கந்தவேளே
முந்தையொரு நாளிலே தென்பொதிகை மீதிலே
பைந்தமிழைக் கும்பமுனிக் - கோதினாயே
வெந்திடும் மனத்துடன் நொந்துடல் பதைத்திட
இந்தநிலம் மீதில்நான் - வாழ்வதாமோ
சிந்தையில் இருத்தியுன் செந்நிறப் பதந்தொழும்
எந்தனிடர் போக்குவதும் - எந்தநாளே
மந்தமதி யால்மயங்கி மந்தையினைப் போலலையும்
அந்தநிலை நீயெனக்குத் - தந்திடாதே
அந்தகனும் ஆனஅவன் தன்னெருமை மீதினிலே
வந்தெனையும் மாய்த்திடமுன் - வந்திடாயோ
சந்ததமும் அடிபணியும் அன்பரலை ஓடிவந்து
சங்கமிக்கும் யாழ்ப்பாணம் - நல்லைமண்ணிற்
சந்தப்புகழ்ப் பாமணக்குஞ் செந்தமிழர் பூமியிலே
வந்தமர்ந்து கோயில்கொண்ட - எம்பிரானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் 2020
## கட்டுரைகள்


- வள்ளி அறியாமல் ஓடிவந்தீரோ?
- முருக வழிபாட்டில் விரதங்கள்
- குமார தந்த்ரம் (कुमार तन्त्रम्) - ஓர் பார்வை
- ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் கைதடி (இணுவில்) சச்சிதானந்த சுவாமிகள் சச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி
- இந்து ஆலயங்களும் வழிபாடும் ஒரு சமூகநோக்கு
- இந்துக்களின் ஒழுக்கவியல்
- சமய, சமூக ஒருமைப்பாடு : திருமந்திரத்தினூடான ஒரு வாசிப்பு
- முருகும் முருகனும்
- "மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம்" என்ற மணிவாசகரின் திருவாசக அடியினை முன்னிறுத்திய உரையாடல்
- சிலப்பதிகாரத்தில் சிகிவாகனன்
- நால் வகை வாழ்க்கை நிலை (ஆச்சிரம தர்மம்)
- இந்து மதத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்தி நிற்கும் யோகக்கலையின் சிறப்புகள்
- சமயங்களே சட்டங்களின் விளைநிலங்கள்
- உணவு உட்கொள்ளும் முறை - சித்தமருத்துவம்
- தவத்திரு நல்லூர் சடையம்மா சுவாமிகள்
- 2020இல் யாழ் விருதினைப் பெறும் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளி அறியாமல் ஓடிவந்தீரோ?

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

கோவில் திருவிழாக்கள் நடைபெறும் போது ஊரில் ஓர் ஆனந்தம் பரவி விடுவது வழமை. அதிலும் நல்லூர் முருகனின் பெருந்திருவிழா என்றால் குடாநாடு முழுவதுமே கந்தனைத் தரிசிக்கப் புறப்பட்டு விடும். திருவிழாக்களுள்ளும் விசேஷமான திருவிழாவைப் பார்ப்பதற்கு திரளும் பக்தர் கூட்டம் பற்றிக் கூறவே தேவையில்லை. இத்தகைய திருவிழாக்களுள் ஒன்று ஆறுமுகனின் திருக்கல்யாணம். முருகனின் திருக் கல்யாணத்தைக் கண்டு மகிழவென பல மணித்தியாலங்களுக்கு முன்னரேயே பக்தர் கூட்டம் சென்று மணவறையின் முன் அமர்ந்து விடுவது வழமை. இப்படி இருந்து விடுவதால் கோவிலின் உள்ளே நடைபெறும் அரிய காட்சிகளை பலரும் காணத் தவறி விடுவர். தினைப்புனத்திலிருந்த வள்ளியை மணம் செய்து அழைத்து வந்து தெய்வ நாயகியை சமாதானப்படுத்தும் நிகழ்வு நடைபெற்ற பின்னரே திருக்கல்யாணம் நடைபெறும்.

எல்லாக் கோவில்களுமே புராணங்கள் சொல்லும் கதைகளை திருவிழாவாக நடத்துவதை வழமையாகக் கொண்டுள்ளன. சில கோவில்களுக்கு அவை பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் இருக்கும். அவற்றைப் பாவனை செய்து திருவிழாவை நடத்துவார்கள். வள்ளி திருமணம் கந்த சுவாமி கோவில்களுக்கு உரிய கதையாகும். இது அனைவரும் அறிந்த ஒன்றே. இவ்வாறு கதைகள் கூறுவதற்கும் காரணமுள்ளது.

பரம்பொருள் அதீதமான சக்தி. எங்கும் பரந்து விரிந்து உருவமற்று ஆதார சக்தியாக இருக்கும் அதற்கு உருவம் இல்லை என்பதை மக்களின் மனங்களில் பதிய வைப்பதற்கும் புராணக் கதைகள் உள்ளன. உதாரணமாக அடிமுடி தேடிய கதையைக் கூறலாம். இவ்வாறு இந்துமதம் கதைகள் ஊடாக பல தத்துவங்களை விளக்கியும் பக்தியை வளர்த்தும் வருகிறது. இதனை மக்கள் விளங்கிக் கொள்ளாது தவறான அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதுமுண்டு. முருகனது கையிலுள்ள வேல் ஞான சக்தியையும் இருபுறமும் அமர்ந்திருக்கும் தேவியருள் தெய்வநாயகி கிரியா சக்தியையும் வள்ளிநாயகி இச்சாசக்தியையும் குறிப்பிடுவதே தத்துவக் கருத்தாகும். கிரியை செயற்பாடு. இயக்கம் எனக் கொள்ளலாம். இச்சை கிரியைக்கு தேவையானது. இவை இரண்டும் ஞான சக்திக்கு அவசியம். இவ்வாறு இத்தத்துவ விளக்கம் நீண்டு செல்லும். அதற்கென தனியான ஒரு கட்டுரை தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமத உருவ வழிபாடு, மதந் தொடர்பான கதைகள், சமயச் சடங்குகள், வழிபாட்டு முறைகள் முதலானவை தொடர்பான ஆய்வுகளும் விளக்கங்களும் எம் முன்னே கொட்டிக்கிடக்கின்றன. அவை ஒரே வகையானவையுமல்ல. அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து வெளியிட்ட முடிவுகள், தத்துவப்பொருளைத் தேடிக் கண்டடைந்த கருத்துக் குவியல்கள், சாதாரண மக்களிடையே நடைமுறையிலுள்ள வழக்கங்கள், தொடர்பான விளக்கங்களும் ஆராய்வுகளினால் கிடைத்த தகவல்களும் முதலிய பல்வேறுபட்டவற்றை அவற்றுள் காணலாம். உதாரணமாக முருகனின் திருமணத்தையே எடுத்துக் கொள்வோம்.

மேற்கூறிய மூன்று சக்திகள் பற்றிய விளக்கம் தத்துவ விளக்கமாகும். அதே வேளையில் பாரததேசத்தின் வடபகுதியில் சுப்பிரமணியன் வணங்கப்பட்டதாகவும் தென் பகுதியில் குறிஞ்சித் தெய்வமாக உருவான குமரன் சுப்பிரமணியனுடன் பிற்காலத்தில் இணைக்கப்பட்டான் என்றும் ஆய்வாளர்களின் முடிவுகள் தெரிவிக்கின்றன. வட பாலிருந்து தெய்வநாயகியும் தென்புறத்திலிருந்து வள்ளியம்மையும் வந்தபோது அவர்களை இணைத்து வைத்தும் ஒரு கதை உருவாகியிருக்கிறது.

கதைகள் தத்துவ விளக்கங்களாக மட்டுமன்றி மக்கள் மனங்களில் பக்தியை ஏற்படுத்தி அவர்களை இறை வழிபாட்டில் ஈடுபடுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளன. நாம் செய்யும் தீவினைகளின் பயனை சுலபமாக தவிர்த்துவிட முடியாது என்பது பல கதைகளில் விளக்கப்பட்டுள்ளது. ஆனால் விரதமிருந்து வழிபட்டால் நாம் செய்த குற்றங்களின் பலன் இல்லாது போகும் என்று அந்த அந்த விரத மகிமையை விளக்கி கதை சொல்கையில் கூறி விடுகிறார்கள். அக்கதையைக் கேட்டு விரதமிருக்க ஆரம்பிப்பவர்கள் படிப்படியாக இறை வழிபாட்டில் ஈடுபட்டு பக்தர்களாக மாறுவதற்கு வழிசமைக்கப்படுகிறது. இறைவனை அடைவதற்கு பக்தி மார்க்கம் ஏனைய மார்க்கங் களைவிட இலகுவானதாகும். தத்துவம், சடங்கு, சம்பிரதாயங்களை எல்லாம் கேட்டறிந்து விளங்கி பரப்பிரமத்தை அடைய முற்படுவதைவிட அவனே கதி என்று முழுமையான அன்பு செலுத்தி இறைவனின் பதங்களை அடைய பக்திமார்க்கம் வழி செய்கிறது.

கிராமிய மக்களை வழிப்படுத்த பக்தியை அவர்களிடையே ஏற்படுத்துவது சிறந்ததெனக் கருதி பெரியோர் அதற்கேற்ற கதைகளை கூறி அவர்களை நெறிப்படுத்தி யுள்ளனர். பக்திமயப்பட்டவர்கள் இறைவனை மனித உருவிலேயே கண்டு அன்பு செய்யத் தொடங்குவர். ஒரு குழந்தை தான் விரும்பும் பொம்மையை உயிருள்ளதாகவே கருதி அதற்கு நீராட்டி உடை அணிவித்து உணவு கொடுத்து அதனுடன் ஒன்றிவிடுவது போன்று பக்தர்கள் கடவுளை தாம் விரும்பும் உருவில் கண்டு அன்பு செலுத்துவர். இதனாலேயே குழந்தையாகக் கண்டு தாலாட்டி உணவு ஊட்டி திருமணம் செய்து வைத்து பார்த்து மனிதர் வாழ்வில் நடைபெறும் சகலதும் இறைவனுக்கும் நடைபெறுவதாகப் பாவனை செய்து வழிபாடாற்றுகின்றனர். பக்தி செய்து முக்தி பெறும் இந்த வழியையும் இந்து மதம் தன்னுள் உள்வாங்கிக் கொண்டது.

ஆகமவிதிப்படி நடைபெறும் வழிபாட்டில் இத்தகைய முறைகளும் சேர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



திருப்பதுடன் கிராமிய வழிபாட்டிலும் இவை கலந்துள்ளன. விதிமுறைப்படி கோவில்கள் அமைத்து நித்திய நைமித்திய பூசைகள் செய்து வணங்குவதைவிட மரங்களின் கீழேயும் சிறு கொட்டில்களிலும் கற்களையோ மரங்களையோ கடவுளாகப் பாவனை செய்து தாங்களே பொங்கல், படையல்களிட்டு வழிபடுகையில் தம்மைப் போன்றே கடவுளும் வாழ்வதாகக் கருதி சடங்குகளையும் செய்வார்கள். ஏற்கனவே திருமணமானவன் மற்றொரு பெண்ணையும் விவாகம் செய்து அழைத்து வந்தால் வீட்டில் பெரும் சச்சரவு ஏற்படும். அதே நிலை முருகனின் இல்லத்திலும் ஏற்பட்டிருக்கும் என்று கற்பனை செய்து அதனை பாவனை செய்யும் விழாவை நிகழ்த்தி மகிழ்கின்றனர்

இவ்வாறு இறைவன் மேல் ஏற்படும் அன்பு படிப்படியாக அதிகமாகி பக்திமிகுந்த நிலையில் அவன் பதம் அடையும் பேறு கிட்டும். அதற்கேற்ற பக்குவம் அடையாத ஆன்மாக்கள் இறைவனைத் தம்மை ஒத்தவனாகக் கருதிவிடுவது வழமை. அதனால் இவை சிலவேளைகளில் தெய்வீகத் தன்மையை இழந்துவிட்டதோ என்று ஐயுற வைக்கும் நிலையும் ஏற்படுவதுண்டு.

அசுரர்களை வென்றுவந்த கந்தப் பெருமானுக்கு தெய்வயானையைத் திருமணம் செய்து கொடுத்தனர். அதன் பின்னர் நிகழும் வள்ளி திருமணம் ஒரு நீண்ட கதை. நல்லூரில் இது சுருக்கமாகவே நடைபெறுகிறது. தினைப்புனத்தில் அதனைக் காவல் செய்துகொண்டிருந்த வள்ளியை தன் அண்ணன் விநாயகனுடன் சென்று விவாகஞ் செய்து மூவருமாக வரும்போது தெய்வநாயகி அம்மன் கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே இருப்பாள். அவளைச் சமாதானப் படுத்த முருகன் முற்படுவதிலிருந்து அதற்கான பாவனை ஆரம்பமாகும். தெய்வநாயகியம்மன் அமர்ந்திருக்கும் பக்கமிருந்து ஒருவர் அவளாகவும் கதவின் மறபுறமாக முருகன் வந்து நிற்கும் புறத்தில் மற்றொருவர் முரு கனாகவும் பாடல்களைப் பாடுவார்கள். இப் பாடல்கள் தெய்வயானை ஏசல் எனப்படுபவையாகும்.

தமிழிலக்கியத்தில் பல்வேறு வடிவ இலக்கியங்களுள்ளன. தாலாட்டு, ஊஞ்சல், குறவஞ்சி முதலியவற்றுள் “ஏசல்” எனப்படும் பாடல்களாக அவை அமைந்துள்ளன. இப்பாடல்கள் இசையுடன் பாடி ஆடக்கூடியவையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது கோவில்களில் விழாவை நிகழ்த்துவோர் அந்த அந்தக் கோவில்களுக்கென ஏசல் ஒன்றைப் புனைந்து பாடிவந்திருக்க வேண்டும். தெய்வயானை ஏசல், எனவும் தெய்வானை வள்ளி ஏசல் எனவும் வெவ்வேறு ஏசல்கள் காணப்படுகின்றன. எட்டுக்குடி ஏசல் பிரபல்யமானது.

இந்தியாவின் நாகபட்டினம் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டிக்கு அருகேயுள்ளது எட்டுக்குடி எனும் பிரசித்தி பெற்ற முருகன் தலம். இங்கு பாடப்பட்ட ஏசல் இதுவாகும். களத்தூர் தமிழ்ப்புலவர் வேதகிரி முதலியார் குமாரர் ஆறுமுகமுதலியாரால் பரிசோதித்து. தக்கோலம் நரசிம்முலு நாயகர் அவர்களது விவேகச் சந்திரோதய அச்சுக் கூடத்தில் பிரபவ வருடம் புரட்டாதி மாதம் இந்நூல் பதிப்பிக்கப்பட்டதாக முனைவர் மோ.கோ.கோவைமணி தனது “அச்சுக்குப் பின்னர் எழுந்த சுவடிகள்” எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பதிப்பிக்கப்பட்ட பின்னரும் அதனை சுவடியில் எழுதிப் படித்து வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



எட்டுக்குடியில் வள்ளி திருமணம் விரிவான விழாவாக நடைபெறுகிறது என செய்திகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. கந்தசஷ்டி முடிவில் சூரசங்காரம் நடைபெறும். மறுநாள் தெய்வ நாயகி திருமணம் இடம்பெறும். அதற்கு அடுத்த நாள் வள்ளி திருமணம். இவ்விழாவில் வள்ளி தினைப் புனத்தில் காவலிருக்கையில் வேலனை விவாகஞ் செய்யுமாறு கோரி நாரதர் அவளிடம் செல்வார். வள்ளி மறுதலிக்க விக்னேஸ்வரனின் உதவியை வேலன் வேண்டி நிற்பான். யானையாக வந்து விநாயகன் வள்ளியை விரட்ட விருத்தனாக வந்திருந்த முருகனிடம் பாதுகாப்புத் தேடுகிறாள் வள்ளி. வந்தவன் முருகனே என்றுணர்ந்து வள்ளி திருமணத்திற்கு உடன்பட விவாகம் நடைபெறுகின்றது. இந்த நிகழ்வுகள் எட்டுக் குடியில் முழுமையாக நிகழ்த்திக்காட்டப்படுகின்றன. அதன் தொடராக நடைபெறும் வள்ளியை அழைத்து வந்து தெய்வ நாயகியின் ஊடலை சமரசஞ் செய்து இருவரையும் இணைத்துக் கொள்ளும் நிகழ்விலேயே எட்டுக்குடி ஏசல் இடம்பெறுகிறது. சுவை மிகுந்த இதே நிகழ்வு நல்லூரிலும் இடம் பெறு கிறது. இந்த ஏசலின் சுவையான சில பகுதிகளைப் பார்ப்போம்.

முருகர் வருகின்ற சேதியறிந்த மாது கதவைச் சடக்கென்றடைத்தாள். அடைத்தது தெரியாமலே முருகேசர்

**தடதடவென்று விரைவினிலே வந்து**
**தட்டினார் கையினாற்றானே –கதவைத்**
**தட்டினார் கையினாற்றானே**

அவர் தட்டியதும் தெய்வயானை கோபத்துடன் கூறுவன இரசிக்கத் தக்கவை.

**செண்பகவதியடி கதவைத்தட்டித் தட்டி**
**திறவென்று சொன்னவராரோ–இந்த**
**தெருவினில் வந்தவராரோ**

என்ற வினாவிற்கு தான் யாரென்று கூறுகிறான் முருகன். அதற்கு அவளின் கேள்வி இப்படி வருகிறது.

**எட்டுக்குடியைவிட்டு விரைவினிலிரவிலே**
**எப்படிவந்தீர் சொல்லும் சுவாமி–நீர்**
**எப்படி வந்தீர் சொல்லும் சுவாமி**

இதற்குப் பதில் அவளைப் புகழ்வதாகவும் வசப்படுத்தும் விதமாகவும் அமைகிறது. உதாரணமாக

**கட்டழகியுன்னை மனதில் நினைந்த போதே**
**காதவழியு மரைநாழியே –யிரு**
**காதவழியு மரைநாழியே**

என்பதை எடுத்துக் காட்டலாம். தெய்வ நாயகியும் இலகுவில் இளகுவதாக இல்லை. அவள்

**அரைநாழியும் மைவிட்டுப் பிரியாளே**
**அந்தவள்ளி அறியாமலோடி வந்தீரோ – அவளுக்கு**
**தெரியாமலோடி வந்தீரோ**

என சுடச்சுடக்கேட்பாள். வள்ளியை விட்டு உந்தன் முகத்தைக் காண ஆசை கொண்டு வந்ததாக வேலவன் பதிலளிக்க

**காணவந்ததிலென்ன வாயிரமாகவே**
**கைப்பொருள் கொண்டுவந்தீரோ –சுவாமி**
**காணிக்கை கொண்டுவந்தீரோ**

என தெய்வயானை கேட்பதன் வழியாக உரையாடல் திசைதிருப்பப்படுகிறது. காணிக்கை கொடுத்து அவளை வசப்படுத்த முருகன் முற்படுகிறான். வேணுமென்றதையெல்லாம் நானிங்கே தருகிறேன் எனத் தொடங்க "சொல்லுவதுமில்லை. உமது பொருளும் வேண்டாம்" என அவள் மறுக்க கெஞ்சலும் மிஞ்சலுமாக சிறிது நேரம் உரையாடல் நீண்ட பின்

**குன்றக்குடியினில் இன்று காணிக்க வைத்த**
**கொலுசுகளிலி ருக்குது தாறேன் – பெண்ணே**
**கொலுசுகளிலிருக்குது தாறேன்**

என ஆசை காட்டுகிறான். ஆனால் பட்டென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சணைவள்ளியைக் கொஞ்சியிருந் தவள்**
**பாதத்திலிட்டு நீர்பாரும் நல்லசோதிப்**
**பிரபையதாகும்**

என வள்ளிக்கே அதைக் கொடுத்து அழகு பார்க்கச் சொல்லிவிடுகிறாள். அவளது கோபம் அப்படியே கொட்டப்படுகிறது. முருகனும் விடுவதாக இல்லை. தைப்பூச நாளில் காணிக்கையாகக் கிடைத்த தண்டைகளையும் சித்திராபூரணையில் சேர்ந்த செவ்வந்தி மாலைகளையும் தருவதாக மாறிமாறி சொல்லிப்பார்க்கிறான். அவளும் வள்ளியின் மேலுள்ள கோபத்தை தன் பதில்களில் காட்டுகின்றாள். இறுதியில் ஆறெழுத்து மந்திரம் கதவைத் திறந்துவிடுகிறது. சில பாடல்களே இங்கு உதாரணமாக தரப்பட்டுள்ளன. முழுமையாக ஏசலைப் படித்துப் பார்த்தால் அதன் சுவை விளங்கும்.

இதனை விட பல ஏசல்கள் தோன்றியுள்ளன. அவை அனைத்தும் ஒரே மாதிரியாக அமையவில்லை. சுப்பிரமணியர் சமாதானமென்னும் வள்ளி தெய்வயானை ஏசல் என்ற மற்றோர் ஏசலை மாதிரிக்கு எடுத்துக்கொள்வோம். இது வேறுபட்ட ஒன்றாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. முன்னையதில் தெய்வயானையும் முருகனும் மட்டுமே உரையாடுகிறார்கள். இதிலோ வள்ளியும் தெய்வயானையும் முதலிலே மோதிக்கொள்கிறார்கள். அவர்களிருவரும் உரையாடும் முறை மிகவும் தரக்குறைவாக அமைவதைக் காணலாம்.

**காவலர் பிடித்துதைக்கஞ் சாதியென் றிகழ்சிபேசும்**
**வேலையற்ற சக்களத்தி போடிபோ பெருஞ்**
**சாலமுற்ற விடபுலைச்சி வாடிவா**

என வள்ளி கூறுவதாக வரும் பாடலை இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம். இறுதியில் முருகன் பேசும் முறையும் இவ்வாறே அமைகிறது. கிராமியநடை முறைக்குப் படிப் படியாக மாறுகையில் இத்தகைய மாற்றம் ஏற்பட்டுவிடுகிறது. இது கூத்தாக நடைபெறும் போது அதன் சுவை வித்தியாசமானது.

முருகப்பெருமானின் திருக்கலியாணத்தில் நாம் உயர்ந்த தத்துவக் கருத்தையும் காணலாம். எங்கள் வாழ்க்கையின் நகலையும் தரிசிக்கலாம். எப்படி எடுத்துக்கொண்டாலும் எட்டுக்குடி ஏசல் படிக்கவும் நடிக்கவும் சுவை நல்கும் இலக்கியமாகும்.

9906 (P)

**நல்லைக்குமரன் 13வது மலர் (2005) தொடக்கம் 28வது மலர் (2020) ஈறாக நல்லூர் மதிகலர்ஸ் பிறிண்டர்ஸில் அச்சிடப்பட்டு வருகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாட்டில் விரதங்கள்

கீர்த்தனா ஆறுமுகதாசன்
நுண்கலைமாணி

எமது சமய வாழ்க்கை முறையிலேயே மனித வாழ்க்கை என்பது முழுவதும் இறைவழிபாட்டுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இவ்வுலகில் வாழுகின்ற காலத்தில் இக பர நன்மை கருதி ஆலயங்களிலும் வீட்டிலும் அனுஷ்டிக்கும் சடங்குகள் பல. இவை விரதங்களாகவும் விழாக்களாகவும் அமைகின்றன.

மனிதனாக பிறப்பது மட்டும் போதாது இந்தப் பிறவி என்னும் பெருங்கடலை நீந்திக்கடப்பதற்கு ஆலய வழிபாடும் விரதங்களும் வழி வகுக்கின்றன. மரணம் என்றால் என்ன? ஸ்ரீ பகவத்விஸ் மரணமேவ மரணம் அதாவது "பகவானை மறப்பதே மரணம்" அதனால் தான் எந்த நேரமும் பகவானை நினைக்க விரதங்களும் விழாக்களும் வழி வகுக்கின்றன. மனம், மொழி, மெய் மூன்றையும் கட்டுப்படுத்தி ஒன்று சேர்த்து இறை சிந்தனையோடு இருப்பது விரதம். விரதங்களை மேற்கொள்வதினால் தெய்வ நம்பிக்கை அதிகமாகின்றது. ஒழுக்கமும் கட்டுப்பாடும் ஏற்படுகின்றது. உடல் ஆரோக்கியமும் அடைகின்றது.

முருகன் மேல் பற்றுக்கொண்டவர்கள் எங்கும் முருகன் எதிலும் முருகன் என்று போற்றி அவன்திருவடிகளை இறுகப் பற்றிக் கொள்வார்கள். முருகன் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வமாகப் போற்றினாலும் அப்பெருமான் உலகம் முழுவதும் நிரப்பி இருக்கின்றான். இலங்கையில் முருக வழிபாடு மிகத் தொன்மையான காலம் முதல் நிலவி வருகின்றது.

கதிர்காமம், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் கந்தசுவாமி, நல்லூர் கந்தசுவாமி கோவில், மண்டூர் திருக்கோயில், கந்தரோடை முருகல், வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயில் என்று பல முருகன் கோயில்கள் உண்டு.

முருகப் பெருமானை பேரன்போடு வழிபடும் அடியார்களுக்காக மூன்று முத்தான விரதங்கள் விரதநூல்களில் சொல்லப் பட்டுள்ளது. வார விரதமாக சுக்கிரவாரம் அல்லது வெள்ளிக்கிழமை விரதம். திதி விரதமாக கந்தசஷ்டி விரதமும், நட்சத்திர விரதமாக கார்த்திகை விரதமும் சொல்லப் பட்டுள்ளது.

உயிர்கள் வேண்டுவது இகம், பரம் வீடுபேறு இந்த மூன்று இடங்களிலும் காத் தருளும் தெய்வம் முருகவேள். இக நலனை வள்ளி தேவியைக் கொண்டும் பர நலனை தெய்வானை அம்மையைக் கொண்டும் முக்தி நலனை வேலாயுதத்தைக் கொண்டும் நமக்கு அருள்புரிகின்றான் முருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் நிறைந்த கலியில் கலியுக வரதனை மெய்யன்போடும் பேரன்பு பக்தியோடும் வணங்கி இகம், பரம், வீடு என்ற மூன்றையும் அடையலாம். இனி முருக வழிபாடுகளை மேற்கொள்ளுவோம்.

**சுக்கிரவார விரதம்**

சுப்பிரமணியக் கடவுளை வேண்டி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அனுஷ்டிக் கப்படும் விரதமாகும். ஐப்பசி மாதம் முதல் வெள்ளியில் ஆரம்பிக்கப்படும் உபவாச மிருத்தல் உத்தமம் அது இயலாதவர்கள் பால் பழம் பலகாரம் இரவு ஒரு நேரம் உணவு உட்கொள்ளலாம். மூன்று வருடம் அனுட்டித் தல் சிறப்பானது.

**கார்த்திகை விரதம்**

கார்த்திகை மாத கார்த்திகை நட் சத்திரம் முதலாக (திருக்கார்த்திகை) மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத் தில் முருகப் பெருமானுக்காக மேற்கொள் ளும் விரதம் இது. பன்னிரண்டு வருடம் இவ் விரதம் அனுஷ்டிப்பது சிறப்பானது ஆகும். திருக்கார்த்திகை தீபம் ஏற்றி இத்தினத் தில் இறைவனை சோதி வடிவில் வழிபடுவார் கள். திருக்கார்த்திகை நாளில் குமாராலய தீபம் முருகன் ஆலயங்களில் ஏற்றப்படும்.

**நிலை தரும் கார்த்திகை தினத்து நெல்லியின்**
**இலை கொடு குகனடிக் கினரத்து ளே ரெலாஞ்"**

திருச்செந்தூர் புராணம் (11-36)

**ஸ்கந்தஷஷ்டி விரதம்**

சஷ்டி விரதம் ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின் அதாவது வளர்பிறை பிரதமை முதல் ஆரம்பித்து ஆறாம் நாளான சஷ்டி திதிவரையான ஆறு தினம் நோக்கும் முருகனுடைய சிறப்பான விரதம்.

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் காமம், கோபம், பேராசை, செருக்கு, மயக்கம், தற்பெருமை ஆகிய வற்றை அழித்து முற்றுணர்வு வரம் பிலாற் றல் தேவகுணம் நிலை நாட்டுவதால் "ஒப்பரும் விரதம்" என கந்த சஷ்டி விரத மகிமை பற்றிக் கந்தபுராணம் சிறப்பாக புகழ்ந்து கூறுகின்றது. அத்துடன் விரத முடிவு தின மான சஷ்டி திதியில் சூரன்போர் நடைபெறும்.

மாமரமாகத் தோன்றிய சூரனை இரண்டாகப் பிளந்து சங்காரம் செய்யும் காட்சியைக் கண்டு தரிசித்து கந்தப் பெரு மானின் திருவருளைப் பெறலாம். இவ்விரதம் ஆறுவருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும். உபவாசம் அல்லது ஒரு நேர உணவு நியதி ஆறு வருடமும் ஒரே மாதிரி யாக இருக்கவேண்டும். முறைப்படி சங்கல் பூர்வமாக ஆரம்பித்து ஆறாவது வருடப் விரதமுடிவில் விரதோத்யாபனம் செய்து பூர்த்தி செய்ய வேண்டும்.

இவ்வாறாக வெற்றிவேல் முருகனை நாமும் விரத அனுஷ்டானங்கள் மூலம் இறு கப்பற்றி இல் வாழ்விலும் சரி வீடு போற்றிலும் சரி அவனருளாலே அவன் தாழ் போற்றி எமைத் தொடர்ந்து இருக்கும் முருகனை பாடி ஆடி பரவசமாக வழிபடுவோம்.

**"அமரர் இடர் தீர அமரம் புரிந்த குமரன் அடி**
**நெஞ்சே குறி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமார தந்த்ரம் (कुमार तन्त्रम्) - ஓர் பார்வை

ஆக்கம்: தி.மனோகஷன்

உலகநாயகனான சிவபெருமான் சதாசிவ மூர்த்தியாக எழுந்தருளும் பொழுதில் பஞ்சவதனநாயகனாக திகழ்வார். இப்பஞ்சமுகங்களும் சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும் திருநாமங்களால் வணங்கப்படுகின்றன. இவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களையும் ஆற்றி, மூவுலகும் சமநிலையில் திகழ காரணமாய் உள்ளன. மேலும், இத்திருவதனங்கள் ஒவ்வொன்றும் ஆகமங்கள் என்ற சைவம் பற்றிய சகல அம்சங்களையும் விளம்பும் தனித்துவம் மிக்க புண்ணியநூல்களை பார்வதி தேவிக்கு உபதேசித்தருளின. சத்தியோஜாத முகமானது காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் ஆகிய ஐந்து ஆகமங்களையும் வாமதேவ முகமானது தீப்தம், சூக்ஷூமம், ஸஹஸ்ரம், அஞ்சுமான், சுப்ரபேதம் ஆகிய ஐந்து ஆகமங்களையும் அகோர முகமானது விஜயம், நிஸ்வாஸம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம் என்னும் ஐந்து ஆகமங்களையும் தத்புருஷமுகமானது ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகபிம்பம் முதலான ஐந்து ஆகமங்களையும் ஈசான முகமானது ப்ரோக் கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் முதலிய எட்டு ஆகமங்களையும் என 28 ஆகமங்களை ஸ்ரீசதாசிவ மூர்த்தியானவர் உமையவளுக்கு உபதேசித்து அருளினார். பின் அவை முறையே கௌசிகர், காசியப்பர், பரத்வாஜர், கௌதமர், அகஸ்தியர் ஆகிய முனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்டன. இவ்வாறு அனுக்கிரக மூர்த்தியான ஈசானமூர்த்தியால் அருளப்பட்ட ஆகமங்களில் ஸ்ரீமத் லலிதாகமமானது லலிதம், லலிதோத்ரம், கௌமாரம் என்ற மூன்று உபாகமங்களை உள்ளடக்கியுள்ளது. அவ்வாறு காணப்படுகின்ற கௌமாரமானது குமார தந்திரம் எனவும் அழைக்கப்படும்.

இக்குமார தந்திரமானது, ஸ்ரீசுப்ரமண்ணியேஷ்வர ஸ்வாமியைப் பற்றியதாகும். "குமார தந்திரம்" என்பதைப் பொருள்நோக்கினால், "குமார" என்பது, மன்மதனையே தன் அழகினால் தோற்கடித்தவர் எனப் பொருள்படும். "தந்திரம்" என்பது, இயக்கம் எனப்படும். ஒருசேர நோக்கின் குமார தந்திரம் என்பதன் பொருள், குமரக்கடவுளின் நிலைத்த மேலான இயக்க முறைகளை உணர்த்துவது எனவாகும்.

சூரனாதிகளின் ஆணவத்தை அடக்கி, அவர்தம் கொடுமைகளிலிருந்து வானோர்களை மீட்க செந்நிற மேனியுடைய ஸ்ரீசதாதிவ மூர்த்தியானவர், தன் பஞ்ச முகங்களோடு, அதோமுகம் என்னும் ஆறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது முகம் உடையவராய், ஷண்முகநாய கராக விளங்கி, சோதிப்பிளம்பான சுப்பிர மணியரை அவதரிக்கச் செய்தார். இவ்வாறு அவதரித்த கந்தவேள், தன் அவதார நோக்கை நிறைவேற்றி, பின் தன் பக்த கோடிகளுக்கு அருள்பாலித்தார். இவ்வாறு முருகன் திருச்செந்தூரில் சூரபத்மனின் ஆணவம் அடக்கி அவனை இருகூறாக்கி குக்குடத்துவஜமாக்கியும் மயூரவாகன மாக்கியும் அருள்பாலித்தவேளையில், திருமுருகப்பெருமான் செந்தில்நகரிலமைய பிரம்மனயனாதி தேவர்கள், கந்தனின் பூங் கழல்களைத் தொழுதேத்தினர். அச்சமயம், முருகவேள் தேவசிற்பியை நோக்கி, தான் ஈசனைத்தொழ ஓராலயம் அமைக்கப்பணித் தார். தேவசிற்பியும் கந்தனின் கட்டளைக் கமைய ஆலயம் அமைத்தனன். அவ்வால யமே திருச்செந்தூர் தலமாகும். இவ்வால யத்தில் வீற்றிருந்து அருள்பாலித்த சயந்தி நாதன், தன்னை குமார தந்திரம் கூறும் நடை முறையின்படி வழிபடுங்கள் என தேவர் களுக்கு உரைத்தருளினார். இவ்வாறு செந்திலாண்டவன் விரும்பியேற்ற குமார தந்திரமானது, முருகனைப் போற்றித் துதித்து வணங்கவும், குகதீட்சை முறை பற்றிய விளக்கத்தையும், குகன் குடிகொண்ட ஆலயத்தினது மூர்த்திப்பிரதிஷ்டை, யந்திரஸ்தாபனம், உற்சவ விதிமுறைகள், திருக்குடமுழுக்கு விதிமுறைகள் என் பவற்றையும் விபரித்துக் கூறுகின்றது.

முருகக்கடவுளை உளமுருகி எவர் வழிபட்டாலும், அவர்தம் சகல இன்னல்களும் கதிரவனைக் கண்ணுற்ற காலைப்பனி போல இருந்தவிடம் தெரியாமல் அகன்று விடும். ஆனால், இக்கலியுகத்தில் உலக நன்மைக்காக ஆலயத்தில் பரார்த்தமாக கந்தஸ்வாமியை வணங்குமிடத்து, ஆகம பூசைமுறைக் கலப்பின்றியே பூசைகள் நிகழ்த் தப்பட வேண்டுமென ஈஸ்வரன் கௌசிக முனிவரிடத்து உரைத்தருளியுள்ளார். அத்துடன், குமரக்கடவுளைத் தொழுதேத்து வதற்கான முறையையும் ஈசன், குமார தந்திரமூடு நல்கியுள்ளார்.

குமார தந்திரமானது, முருகப்பெரு மான் தொடர்பான பூசை முறைகளை எளி தில் விளங்கிக்கொள்வதற்காக அழகிய ஐம்பத்தியொரு படலங்கலாகப் பிரித்து உபதேசிக்கப்பட்டுள்ளது. இவ் ஐம்பத்தி யொரு படலங்களும் கந்தக்கடவுளின் நித் திய, நைமித்திய, காம்ய கிரியைகளை மிக விளக்கமாகவும் அற்புதமாகவும் இயம்பியுள் ளன. அவ் ஐம்பத்தியொரு படலங்களாவன, தந்த்ராவதார படலம், மந்திரோத்தார விதிப்படலம், சௌசாசமன விதிப்படலம், ஸ்நானானுஷ்டான விதிப்படலம், நித்ய பூஜா விதிப்படலம், நைவேத்திய விதிப்பட லம், அக்னிகார்ய விதிப்படலம், நித்தியோற் சவ விதிப்படலம், குண்ட லக்ஷண விதிப் பட லம், மண்டல விதிப்படலம், குகதீக்ஷா விதிப் படலம், ஸ்நபன விதிப்படலம், ஸ்கந்தோற் சவ விதிப்படலம், உற்சவ பிராயச்சித்த விதிப்படலம், ஜீர்ணோத்தாரண விதிப்பட லம், வாஸ்து ஹோம விதிப்படலம், சாந்தி ஹோம விதிப்படலம், திசா ஹோம விதிப்பட லம், மூர்த்தி ஹோம விதிப்படலம், பஞ்ச கவ்ய விதிப்படலம், பஞ்சாம்ருத விதிப்பட லம், பாலஸ் தாபன விதிப்படலம், ஸம்ப் ரோக்ஷண விதிப்படலம், ப்ரதிமா லக்ஷண விதிப்படலம், சூலஸ்தாபன விதிப்படலம், அசல ஸ்தாபன விதிப்படலம், சலபேர ப்ரதிக்ஷ்டா விதிப்படலம், சக்தியஸ்திர ஸ்தாபன விதிப் படலம், கர்பந்யாஸ விதிப் படலம், ஆத் யேக்ஷ்டிகா விதிப்படலம், ப்ராஸாத லக்ஷண விதிப்படலம், மூர்த்நேக்ஷ்டி கா விதிப்படலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகார லக்ஷண விதிப்படலம், பரிவார விதிப் படலம், கரண லக்ஷண விதிப்படலம், பாதுகா ப்ரோண விதிப்படலம், ஆத் மார்த்த யஜந விதிப்படலம், தைலாப்பி யாங்க விதிப்படலம், மாஸ பூஜா விதிப்படலம், அங்குரார்ப்பண விதிப்படலம், மஹாவள்ளி தேவசேனா ஸ்தாபன விதிப்படலம், ஸுமித்ர ஸ்தாபன விதிப்படலம், கஜ ஸ்தாபன விதிப் படலம், ரத பிரதிக்ஷ்டா விதிப்படலம், மஹா அபி க்ஷேக விதிப்படலம், ஸ்கந்தகலாந் யாஸ விதிப்படலம், மாத்ருகாந்யாஸ விதிப்பட லம், ஸுப்ரமண்ய கவச விதிப்படலம், பிரதக்ஷிண நமஸ்கார விதிப்படலம், ஆசார்ய லக்ஷண விதிப்படலம், ஸாயரக்ஷா விதிப்படலம் என்பனவாகும்.

**இப்படலங்கள் ஒவ்வொன்றும் பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு:**

முதலாவது படலமான தந்த்ராவ தார படலமானது, பின்வருமாறு அமைகின் றது. சப்தரிக்ஷிகளில் ஒருவரான கௌசிகர் ஒருமுறை தேவர், முனிவர், யர்க்ஷ, கந்தர்வர், தேவலோக ஸ்திரீகள் முதலானவர்களால் வணங்கப்படுகின்ற, தூயவெண்ணிற இடத் தில் அநேககோடி சூர்யப்பிரகாசம் உள்ள வராய்த்திகழும் பரமேஸ்வரனை நோக்கி பலவாறாகப் பணிந்தேத்தி, புகழ்ந்து, இரு கரம் கூப்பித்தொழுது, பின்பு குமார தந்திரம் என்னும் நூலைத் தனக்கு முழுமையாக விபரமாகக் கூறியருள்க என்று வினவ, சிவ னாரும் அத்தந்திரம் பற்றிய சிறப்பையும் பெருமையையும் கூறி, பின் அதன்பாலுள்ள படலங்களையும் கூறலானார். இவ்வாறு கௌ சிக முனிவரின் கேள்விக்கு சிவபெருமானின் படலமாக அமைவது முதலாவது படல மாகும். இப்படலத்திலுள்ள "குமார தந்த் ரோக்த மார்கேனைவ குஹம் யஜேத்" என்ற சிவனாரின் வாக்கிற்கிணங்க குமரனை இத்தந்திரத்தில் கூறியுள்ளவாறே வழிபட வேண்டும் என்பது உறுதியாகின்றது. மேலும், இத்தந்திரத்தில் கூறப்படாத கிரியை முறை களை ஏனைய சிவாகமங்களின்படி நிறை வேற்றுமாறும் ஈசன் உரைத்துள்ளார்.

இரண்டாவது படலமான மந்திரோத் தார விதிப்படலமானது சுப்பிரமணியரின் மந்திரங்களின் உற்பத்தி முறைபற்றி விளக் கிக் கூறுகின்றது. மந்திரம் என்பதன் பொருள் யாதெனில், ஊசல் போல பல லௌகீக சிந் தனைகளில் அலைபாயும் எம்மனதை சாந்த மடையச் செய்யவும், அவற்றிலிருந்து விடுபட வும் தோற்றுவிக்கப்பட்ட தெய்வீக ஒலி களின் தொகுப்பாகும். இவ்வாறு சிறப்புடைய மந்திரங்கள் சுப்பிரமணிய ஸ்வாமிக்கும் தனித்துவமாக உள்ளன. இம்மந்திரங்கள் மந்திரோத்தார விதிப்படலத்தில் கூறப்பட் டுள்ளன. இப்படலத்தில் ஸ்கந்த மூலமந்திரம், ஸ்கந்த பீஜமந்திரம், சுப்ரமண்ணிய மூல மந்திரம், குமார மந்திரம், குக மந்திரம், சரவணபவ மந்திரம், ஷண்முக மந்திரம், சத்தியோஜாத மந்திரம், வாமதேவ மந்திரம், அகோர மந்திரம், தத்புருக்ஷ மந்திரம், ஈசான மந்திரம், வள்ளிதேவசேனா மந்திரம், ஷண்மூர்த்தி மந்திரம், பரிவார தேவதா மந்திரங்கள், மயூரபீஜ மந்திரம், சக்திபீஜ மந்திரம், நவசக்தி மந்திரம், பஞ்சாயுத மந்திரம், அக்ஷ்டமூர்த்தி (கார்த்திகேயன், விசாகன், குகன், அசுராந்தகன், சேனானீ, ஷண்முகன், மயூர வாகனன், ஷக்திபாணி) மந்திரம், மயூரகாயத்திரி, கஜகாயத்திரி ஆகிய மந்திரங்களும், அவற்றின் உற்பத்தி முறை களும் கூறப்பட்டுள்ளன. மேலும், ஸ்ரீசுப்பிர மண்ணிய ஸ்ரீசக்கரம் வரையும் முறையும், 144 அட்சர மாலாமந்திர யந்திரம் வரையும் முறையும் மிகவழகாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. அத்துடன், யந்திரபூசையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி மேற்கொள்பவன் பெறும் பேறுகளும் கூறப்பட்டுள்ளது. பின்பு சோடச சுப்பிரமண்ணிய ரூபங்களின் தியான மந்திரங்கள் பதினாறு கூறப்பட்டுள்ளன. இவையொவ்வொன்றும் ஒவ்வொரு மூர்த்தங்களின் சிறப்பையும் அமைப்பையும் விளக்குகின்றன. இறுதியில் இச்சோடசமூர்த்தங்களின் வனப்பையும், அமைப்பையும், அவற்றை தாபிக்கக் கூடிய இடங்களையும் கூறி இப்படலம் நிறைவுறுகின்றது.

மூன்றாம் படலமான சௌசாசமன படலம், உடலை சுத்திசெய்யும் முறையை விளக்குகிறது. இறைவனைத் தொழுவதற்கு மனிதராகிய நாம் திரிகரணசுத்தியோடு விளங்கவேண்டும். அவ்வாறு இவ்வுடலானது இறைவனைத் தொழவும், அவன்தன் புகழ் பாடவும், அவனுக்குச் சேவை செய்யவும் ஆன்மாவுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கின்றது. எனவே, உடலைச் சுத்தம் செய்த பின்னரேயே நாம் இறைவனை வணங்க வேண்டும். மலசலம் கழித்து, பின் வாயை சுத்தம் செய்து, பின்பு ஆசமனம் செய்தல் வேண்டும். இவ்வாறு சௌசாசமன படலத்தில் மலசலம் கழித்து சுத்தஞ்செய்யும் முறை, வாயை சுத்தஞ்செய்யும் முறை என்பன தெளிவாகக் கூறப்பட்டு, ஆசமனம் செய்யும் முறையும் கூறப்பட்டு இப்படலம் நிறைவுவுறுகின்றது.

நான்காம் படலமான ஸ்நானானுகூஷ்டான படலம் தினம் குளிக்கும் முறையையும், தினவழிபாடு செய்யும் முறையையும் கூறுகின்றது. ஸ்நானம் தொடர்பான பகுதியில் ஸ்நானம் மேற்கொள்ள வேண்டிய இடங்கள், ஸ்நானத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் ஸ்நான கருமங்களையும் கூறுகின்றது. மேலும், அனுகூஷ்டானம் தொடர்பான பகுதியில், விபூதி குழைக்கும் முறை, விபூதி தரிக்கும் முறை மற்றும் நித்யஜப முறை என்பனவும் கூறப்பட்டுள்ளன.

அடுத்து, ஐந்தாம் படலமான நித்ய பூஜாவிதிப்படலமானது, கந்தனைத் தினமும் பூசனை செய்யும் முறைபற்றி விளம்புகின்றது. இதில், ஆத்மார்த்த மற்றும் பரார்த்த பூசை தொடர்பான விளக்கம் தரப்பட்டுள்ளது. மேலும், பரார்த்தபூசை (ஆலயங்களில் சிவத்விஜர்களால் உலக நன்மைக்காக நடாத்தப்படும் பூசை) நடாத்தப்பட வேண்டிய விதம், மேலும் அவ்வாறான பூசையால் கிராமம் பெறும் நன்மைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அத்துடன், இப்பூசைகள் ஒருநாளில் எத்தனை வேளைகள் நடாத்தப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவை பணக்குறைவின்றி, முறைப்படி, விஸ்தாரமாக நிகழ்த்தப்படல் வேண்டுமென கண்டிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

நைவேத்திய விதிப்படலமான ஆறாவது விதிப்படலமானது, கந்தப்பெருமானுக்குரிய நைவேத்தியம் செய்யும் முறை, அதனைக் கந்தனுக்கு சமர்ப்பிக்கும் முறை, நித்ய நைமித்திய, காம்ய நைமித்தியங் களின் பாகுபாடு என்பவற்றுடன், முருகனுக்கு விருப்பமான தானியங்கள், பருப்புகள், கிழங்குகள், காய்கள், பழங்கள் என்பவற்றையும் கூறுகின்றது.

ஏழாவது படலமான அக்னிகார்ய விதிப்படலத்தில், அக்னிகார்யம் எவ்வாறு செய்வது என விளக்கப்பட்டுள்ளது. அதாவது சுப்பிரமணியருக்குரிய ஒரு ஹோமத்தின் போது பின்பற்றவேண்டிய ஆகுதி முறைகள், மந்திர உச்சாடனங்கள் என்பன கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது படலமாக நித்தியோற்சவ விதிப்படலம் உள்ளது. இது கந்தன் ஆலயத்தில் தினமும் எவ்வாறு உற்சவம் செய்ய வேண்டும் என்ற முறையைக் கூறுகின்றது. அதாவது பலிதேவதா விக்ரகத்தின் அமைப்பு, பலிதேவதா அலங்கார முறை, உலாவரும் ஊர்தி, உலாவரும் முறை, இவ்வாறு நித்தியோற்சவம் செய்வதால் உண்டாகும் பலன் என்பன பற்றிக்கூறுகின்றது. இறுதியில் எவனொருவன் நித்தியோற்சவம் செய்கின்றானோ, அதன் பலனாக அவனுக்கு கௌமாரலோகப் பதவி கிட்டும் என்பதும் கூறப்பட்டுள்ளது.

யாகம் என்பது எம்மைக் காத்து இரட்சிக்கும் பரம்பொருளுக்கு அவருக்கு பிரியமுடைய புனித வஸ்த்துக்களை அக்னி தேவனூடாக சமர்ப்பித்தல் ஆகும். எனவே, யாகத்தின் முக்கியதேவன் அக்கினியாவார். இத்தகைய மேன்மையுடைய யாகாக்கினியைத் தாங்கும் வல்லமையுடையது குண்டங்கள் ஆகும். இக்குண்டங்களின் தனித்துவம்மிக்க வடிவங்களால்சுப்பிரமணியப் பெருமான் பக்தர்களுக்கு யாகத்தின் பலன்களை வழங்குவார். எனவே, கந்தப் பெருமானுடைய ஹோமங்களில் காணப்பட வேண்டிய குண்டங்களின் வடிவங்களையும் அவற்றின் அளவு பரிமாணங்களையும் ஒன்பதாவது படலமான குண்ட லக்ஷண விதிப் படலம் கூறுகின்றது.

பத்தாவது படலமான மண்டல விதிப் படலம், மண்டலம் அமைக்கும் முறைபற்றிக் கூறுகின்றது. தீட்சை, பிரதிக்ஷ்டை, பவித்ரோபண விழா, திருவிழா ஆகிய உற்சவங்களில் மண்டலம் அமைத்தே குமரக் கடவுளைப் பூசிக்க வேண்டுமென இப்படலம் விளக்குகின்றது. அதற்கு அமைவாக, மண்டலத்தை அமைத்து அதில் தேவியர் சமேத சண்முகப்பெருமானை எவ்வாறு ஆவாஹனம் செய்யவேண்டுமெனக் கூறுவதோடு அதன்படி அமைக்கப்பட்ட மண்டலம், ஸ்ரீபத்ர மண்டலம் என பெயர்பெறும் என்றுரைத்து நிற்கின்றது. அத்துடன், இறுதியாக ஸ்ரீபத்ர மண்டலப் பூசையின் நன்மைகள் கூறப்பட்டு இப்படலம் நிறைவு பெறுகின்றது.

பதினோராவது விதிப்படலமான குகதீக்ஷா விதிப்படலமனது குகதீக்ஷையைப் பெறும் முறைபற்றிக்கூறுகின்றது. தீக்ஷை என்பதன் பொருள் ஞான அறிவைப்புகட்டி, மந்தமாக மனதின்கண்ணுள்ள மலங்களை நீக்குதலாகும். குகதீக்ஷையினால் ஒருவன் சர்வபாவங்களையும், மலங்களையும் விடுத்து புண்ணியனாகின்றான். அத்தகைய குக தீக்ஷையை நால்வருணத்தவரும் எப்படி பெறவேண்டுமெனவும், குகதீக்ஷையை பெற்றவன் முருகனுக்கு பிரீதியுடையவனாகின்றான் எனவும் கூறி இப்படலம் நிறைவடைகின்றது.

பன்னிரெண்டாவது விதிப்படல மானது விசேக்ஷ தினங்களில் (செவ்வாய்க்கிழமை, க்ஷிக்ஷ்டி திதி, கார்த்திகை நட்சத்திரம், கிரகண காலங்கள், அமாவாசை, பௌர்ணமி, உற்சவ முடிவு, பிரதிக்ஷ்டை முடிவு) கந்தப் பெருமானுக்கு மஹாஸ்நானம் செய்யும் முறைபற்றி விளம்புகின்றது. இப்படலத்தில் கலசமண்டபம் அமைக்கும் முறை, கலசங்களை தேர்வு செய்யும் முறை, கலசத்தில் க்ஷல் சுற்றும் முறை, கலசத்தில் புண்ணிய வஸ்துக்களுடன் நீர் நிரப்பும் முறை, கூர்ச்சம் அமைக்கும் முறை, கலசஸ்தாபன முறை, கலசபூசை முறை, கலசாபிக்ஷேக முறை என்பன பற்றியும் வேறுபட்ட எண்ணிக்கைகளில் (9, 25, 49, 81, 108, 1008) தாபிக்கக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்நபன கலசங்களின் தாபன முறை, பூசை முறை பற்றியும் விளக்கமாக கூறப்பட்டுள் ளது. இவ்வாறு விதிப்படி கந்தப்பெரு மானுக்கு ஸ்நபனாபிஷேகம் செய்பவன் தன்விருப்பம் நிறைவேறி ஈற்றில் ஸ்கந்த லோகமடைவான்.

பதின்மூன்றாவது விதிப்படலம் ஸ்கந்தோற்சவ விதிப்படலமாகும். கந்தப் பெருமானின் திருவிழாவானது சகலபுவன மோக்ஷமளிப்பதுடன், சர்வஜீவன்களுக்கும் பாவமகற்றி புண்ணியம் சேர்க்கின்றது. உற்சவமானது பஞ்சகிருத்தியங்களை நிகழ்த்தவல்லது. சங்கரனார் நுதற்கண் மூலம் அவதரித்த ஆறுமுகச்சிவனான க்ஷண்முகனாரும் தனித்தே பஞ்சகிருத்தி யங்களை ஆற்றக்கூடியவராவார். ஆத லால், குமரோற்சவம் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழியேற்படுத்தும். இத்தகைய உற்சவ மானது 3 வகைப்படுத்தப்படுகின்றது. அவை மாசோற்சவம் (அமாவாசை, பௌர்ணமி தினங்களில் செய்வது), பக்தோற்சவம் (பக்தி சிரத்தையுடன் சுபநாளில் பக்தர் களால் செய்யப்படுவது), மஹோற்சவம் (3/ 5/ 7/ 9/ 12 நாட்கள் முறைப்படி செய்யப்படு வது) என்பனவாகும். கந்தனுக்குரிய மஹோற் சவம் பற்றிய விளக்கதை இப்படலம் கூறு கின்றது. இப்படலத்தில் மஹோற்சவத்தின் வகைகள், மஹோற்சவம் செய்யப்பட வேண் டிய காலங்கள், அங்குரார்ப்பண முறை, துவஜவஸ்திரம் வரையும் முறை, துவஜஸ் தம்பத்தினை தயாரிக்கும் முறை, பேரீதாட னம் செய்யும் முறை, பலிபோடும் முறை, துவஜாரோஹணம் செய்யும் முறை, துவஜஸ்தம்ப பூசை முறை, வாகனத் திருவிழா செய்யும் முறை, ரதோற்சவ முறை, சூர்ணோற்சவம் செய்யும் முறை, கிருக்ஷ்ண கந்தோற்சவம் செய்யும் முறை, துவஜாவ ரோஹணம் செய்யும் முறை ஆகியன குறிப் பிடப்பட்டுள்ளன. இவ்வாறு முறைப்படி நிறை வேற்றப்படும் மஹோற்சவத்தினால் மோக்ஷ மும், கௌமாரலோகப்பதவியும் கிட்டும்.

பதின்னான்காம் படலமான உற்சவ பிராயச்சித்த விதிப்படலமானது திருவிழா வின் உபயோகப்பொருட்கள், பூசைகள், மந்திரங்கள் என்பவற்றிலும், நைமித்திகக் கால பூசைகளிலும் ஏற்படக்கூடிய குறைபாடு களையும், அவை ஏற்படுத்தவல்ல தோக்ஷங் களையும், அவற்றுக்கான பரிகாரங்களை யும், அப்பரிகாரங்களை நிறைவேற்றும் முறைகளையும் விளக்கிக்கூறுகின்றது.

பதினைந்தாம் படலமானது ஜீர் ணோத்தாரண விதிப்படலமாகும். ஜீர்ணோத் தாரணம் என்பது ஜீர்ண உத்தாரணம் ஆகும். ஜீர்ணம் என்றால் இடிந்துபோனது அல்லது சிதைந்துபோனது எனவும், உத் தாரணம் என்றால் பிடுங்கி எறிதல் எனவும் பொருள்படும். ஆகவே ஜீர்ணோத் தாரண மாவது யாதெனில், ஆலய விக்கிரஹங்கள் அல்லது கட்டடங்கள் சிதைந்துபோனால் அவற்றை ஆகமமுறைப்படி நீக்கி புதிய வற்றை ஸ்தாபித்தலாகும். ஜீர்ணோத் தாரண விதிப்படலத்தில், கந்தசுவாமியாராலயத்தின் ஜீர்ண விக்கிரஹங்களினை அகற்றுதல், புதிய விக்கிரஹங்களினை உருவாக்கல் மற்றும் ஸ்தாபித்தல் என்பவற்றுக்கான கிரியானுக்ஷ்டானங்கள் தெரிவிக்கப்பட் டுள்ளன. ஜீர்ணோத்தாரணம் செய்யப்படா விட்டால் கிராமத்திற்கு நாசம் ஏற்படுமென வும், மாறாக செய்யப்பட்டால் புண்ணியகதி ஏற்படுமெனவும் கூறப்பட்டுள்ளது.

வாஸ்து ஹோம விதிப்படலமானது பதினாறாவது படலமாயுள்ளது. வாஸ்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோமம் திருவிழாக்களிலும், பிரதிக்ஷ்டை களிலும், பூமி பூஜை, கட்டட நிர்மாண சமயங் களிலும், யாக காரியங்களிலும் மந்திரமறிந் தோரால் வாஸ்து பகவானை நோக்கி செய்யப்படும் பூசையாகும். இப்பட லத்தில் வாஸ்து பகவானுக்குரிய பூசை முறைகள், வாஸ்து தேவர்களுக்குரிய பூசை முறைகள், சுப்பிரமணியர் ஆலயத்தில் வாஸ்து ஹோமம் செய்ய வேண்டிய முறைகள் என்பன விளக் கமாக அருளப்பட்டுள்ளன.

அடுத்து, பதினேழாவது படலமாக, சாந்தி ஹோம விதிப்படலத்தில் சாந்தி ஹோமத்துக்குரிய குண்டமுறை, கும்பமுறை என்பனவும், ஆகுதி முறைகளும் கூறப்பட் டுள்ளது. மேலும், இந்த சாந்தி ஹோம மானது சகல பிரயாச்சித்த விடயங்களிலும் செய்யப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டுள் ளது.

திசா ஹோம விதிப்படலமே பதினெட் டாவது விதிப்படலமாகும். இது கந்தன் ஆலயத்தின் நாற்திக்கு பாலகர்களுக்கும் உரிய ஹோமமுறையை விபரித்துக் கூறு கின்றது.

பத்தொன்பதாவது படலமாக மூர்த்தி ஹோம படலம் உள்ளது.

இருபதாவது படலமானது, பஞ்சகவ்ய விதிப்படலமாகும். பஞ்சகவ்யம் என்பது தெய்வாம்சமான பசுவிலிருந்து பெறப்படு கின்ற பால், தயிர், நெய், கோமயம், கோசலம் முதலான ஐந்து புண்ணியப் பொருட்களின் கலவையாகும். இந்த பஞ்சகவ்யம் என்பது எல்லா நோய்களையும் போக்கக்கூடிய மருந்தாக உள்ளது. இத்துணை சிறப்பு மிக்க பஞ்சகவ்யத்தினை கந்தரின் அபிஷே கத்தின் பொருட்டு எவ்வாறு தயார் செய்வது என்பதனை இப்படலம் கூறுகின்றது. ஈற்றில் ஸ்கந்தருக்குப் பஞ்சகவ்ய அபிஷேகம் செய்வதனால், சகல பாவங்களில் இருந்தும் விடுபடலாம் எனக் கூறப்படுகின்றது.

இருபத்தோராவது படலமான பஞ்சாமிர்த விதிப்படலமானது, பஞ்சாமிர்தம் என்னும் அபிஷேகத் திரவியத்தின் வகைகளையும் (ரஸ பஞ்சாமிர்தம், பல பஞ்சாமிர்தம்) அவற்றைத் தயார்படுத்தும் முறையையும் பஞ்சாமிர்தத்தால் கந்தப் பெருமானை அபிஷேகிக்கும் முறையையும் கூறுகின்றது. மேலும், பஞ்சாமிர்த அபிஷேக மானது கந்தனின் அருளால் பஞ்சமாபாதக தோக்ஷங்களை நிவர்த்தி செய்யக் கூடியது எனவும் கூறுகின்றது.

பாலஸ்தாபன விதிப்படலமானது, இருப்பதிரண்டாவது படலமாகும். பாலஸ் தாபனம் என்பது பழுதடைந்த கோயிலை திருப்பணி செய்வதற்காகவும், மீள விக் கிரகங்களைத் தயார் செய்யும் சமயத் திலும் வள்ளிதேவசேன சமேத கந்தப் பெருமானையும், ஏனைய பரிவார மூர்த்தங் களையும், பாலாலயம் எனப்படுகின்ற சிறிய ஆலயத்தில் தற்காலிகமாக முறைப்படி பிரதிக்ஷ்டை செய்தலாகும். இதுதொடர் பான கிரியை முறைகளை விளக்குவதே இப்படலமாகும். பாலஸ்தாபனம் செய்தால், சர்வபோகங்களும் கிடைக்கும் எனவும், மாறாக செய்யாவிட்டால் கிராமத்தில் பால கர்களுக்குத் தீங்கு நிகழும் எனவும் இப்படலம் கூறுகின்றது.

அடுத்து, ஸம்ப்ரோக்ஷண விதிப் படலமானும். அதாவது, முருகன் ஆலயக் கும்பாபிஷேகம் தொடர்பான நியதிகளைக் கூறும் படலமாகும். இப்படலத்தில் ஆவர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம், புனராவர்த்தம், அநாவர்த்தம் என மூன்று வகையான ப்ரோக்ஷண முறைகள் கூறப்பட்டுள்ளன. மேலும், அநாவர்த்தப் பிரதிக்ஷ்டை தொடர்பான கிரியை முறை களும் ஹோமவிதிகளும் ஆசார்யவிதி களும் கூறப்பட்டுள்ளன. ஸம்ப்ரோக்ஷணம் செய்பவன் கந்தனின் அருளால் நற்கதி அடைவான் என இப்படலம் கூறுகின்றது.

ஓர் ஆலயத்தில் கர்ப்பக்கிரகம் எனப்படும் மூலஸ்தானமே இறைசக்தி பல்கிப் பெருகி அடியவரிடம் அவ்வருட் சக்தியை வழங்கும் தானமாகும். இத்திரு வருட் சக்தியானது, மூலவரான முருகப்பெரு மானூடாகவே, அடியவரை அடையும். மூலாலயத்தில் வீற்றிருக்கும் சுப்பிரமண்யப் பெருமானை அமைக்கும் முறைபற்றியும், மூலவர் பிரதிமையின் அங்க ஆபரண இலட்சணங்களையும் இப்படலம் கூறிநிற் கின்றது.

அடுத்து, சூலஸ்தாபனவிதிப்பட லமாகும். இது இருபத்தைந்தாவது விதிப் படலமாகும். சூலம் எனப்படுவது, முச்சக்தி களான இச்சா, ஞானா, கிரியா சக்திகளின் ஒன்றிணைந்த தோற்றமாகும். மேலும், சூலமானது க்ஷேத்திரபாலரான வைரவப் பெருமானுடைய ஸ்வரூபமாக பண்டைய காலந்தொட்டு வணங்கப்படும் ஓர் ஆயுதமாகும். அத்தோடு இச்சூலாயுதமானது, க்ஷண்முகப் பெருமானுடைய பன்னிரு ஆயுதங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. இவ்வாறான சூலாயுதத்தை கந்தாலயத்தில் எவ்வாறான இலட்சணங்களுடன் அமைக்க வேண்டும் என அதாவது, சூலாயுதத்தை ஆக்கவல்ல மரங்கள், சூலத்தின் நீள அகலங்கள் மற்றும் சூலப்பிரதிக்ஷ்டை முறை என்பன பற்றி இப்படலம் குறிப்பிடுகின்றது.

ஆலயத்தில் மகோற்சவ காலங் களிலும் ஏனைய விசேக்ஷ காலங்களிலும் கந்தப்பெருமானின் அருட்பெருங்கருணை கிராமம் முழுவதும் பரவுவதற்காக பஞ்ச கிருத்தியங்களை ஆற்றுவதற்காக இறை வனின் திருவிக்கிரகத்தை தங்க, வைர ஆபரணங்களோடும், தூபதீப ஆராதனை களோடும், பூமாலை சாற்றியும், பட்டாடை கள் உடுத்தியும் வீதியுலா வரச்செய்வது வழக்கமானதொன்றாகும். இவ்வாறு எழுந் தருளும் முருகனுடைய திருவிக்கிரகமானது எவ்வாறு சர்வலட்சணங்களுடனும் அமைய வேண்டும் எனவும், அவ்விக்கிரகத்துக்குரிய பூசை முறைகள், ஸ்நபன முறைகள் பற்றியும் ஒவ்வொரு விதமான விக்கிரகங்களின் பலா பலன்களையும் இருபத்தாறாவது படலமான அசலஸ்தாபன விதிப்படலம் கூறுகின்றது. இப்படலவிதிப்படி உற்சவமூர்த்தியைப் பிரதிக்ஷ்டை செய்வதனால், ஈற்றில் ஸ்கந் தலோகப்பதவி கிட்டும்.

அடுத்து இருபத்தேழாவது படலமாக சலபேர பிரதிக்ஷ்டாவிதிப் விதிப்படலம் உள்ளது.

கந்தப்பெருமான் அவதார நோக்கை நிறைவேற்றுவதற்காக ஆதிசக்தியான உமையவள் கந்தவேளுக்கு இச்சா, ஞானா, கிரியா சக்தி ஸ்வரூபமான திரிபத்ரங்களை யுடைய சக்தியஸ்திரத்தை தன்னிலிருந்து தோற்றுவித்து வழங்கினாள். இவ்வஸ்திர மானது சூரனாதிகளின் ஆணவம், கன்மம், மாயை முதலிய மும்மலங்களையும் நீக்கி தேவரைக் காத்தருளியது. அத்தகைய சக்தியஸ்திரமே கந்தப்பெருமானுடைய ஸ்வரூபமாகவும் திகழ்கின்றது. இத்துணை அருள்பூத்த சக்தியஸ்திரத்தின் லட்சணங் களையும், அதன் பிரதிக்ஷ்டை முறையையும் இருபத்தெட்டாவது படலமான சக்தியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திர ஸ்தாபன விதிப்படலம் கூறுகின்றது. இச்சக்தியஸ்திர ஸ்தாபனத்தால் வெற்றி நிச்சயமாகும்.

கந்தவேளினாலயத்தில் கர்பக்கிரஹம் அமைக்கும் முறைபற்றி விளக்குவதே இருபத்தொன்பதாவது படலமான கர்பந்யாஸ விதிப்படலமாகும். கர்பக்கிரஹம் என்பது, ஆலயத்தில் ஸ்ரீசுப்பிரமண்ணிய மஹா யந்திரத்தின் மீது கந்தன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மூலாலயமாகும். அத்தகைய கர்பக்கிரஹத்தை சர்வலட்சணமுடைய தாய் எவ்வாறு அமைக்க வேண்டும் எனவும் அவற்றில் புண்ணிய வஸ்துக்களை சேர்க்க வேண்டிய முறைபற்றியுமே இப்படலம் கூறு கின்றது.

கருவறையின் மீது கல் வைக்கும் சடங்கே ஆத்யேக்ஷ்டிகா ஸ்தாபனமாகும். இது தொடர்பான விதிமுறைகளையும் கிராயானுக்ஷ்டானங்களையுமே முப்ப தாவது படலமான ஆத்தியேக்ஷ்டிகா விதிப் படலம் கூறுகின்றது.

உலகைக்காக்கும் சுப்பிரமணியப் பெருமான் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக் கும் பொருட்டு, அவற்றைத் தன்பால் லயப் படுத்த ஆலயம் என்ற தெய்வீகக் கட்டடத் தில் உறைகின்றான். அத்தகைய ஆலயங் களின் கோபுரங்கள், விமானங்கள், துவாரம் எனப்படும் வாயில்கள் என்பனவற்றை அமைக் கும் முறைகள், அவற்றின் அலங்கார முறைகள் பற்றி எடுத்தியம்புவதே முப்பத் தோராவது படலமான ப்ராஸாத லக்ஷண விதிப்படலமாகும்.

விமானத்தின் சிகரத்தில் இருக்க வல்லது மூர்த்நேக்ஷ்டிகா ஆகும். இந்த இக்ஷ்டிகையில் காணப்படும் வகைகள், அவற்றை உருவாக்கும் முறை, அவற்றைப் பூசிக்கும் முறை, பிரதிக்ஷ்டை செய்யும் முறை பற்றி முப்பத்தி இரண்டாவது படலமான மூர்த்நேக்ஷ்டிகா விதிப்படலம் கூறுகின்றது.

ஆலயத்தைப் பாதுகாக்கவும், அழ குறச் செய்யவும், கற்களாலோ அல்லது செங்கல்லாலோ ஆலயத்தைச்சூழ பிரகாரம் அமைக்கப்படும். இத்தகைய பிரகாரங்களை அமைக்கும் முறையையும் அப்பிரகாரத்தில் ஜனசாலை, புக்ஷ்ப மண்டபம், ஆயுதசாலை, வாகனசாலை, சயன மண்டபம், ஆஸ்தான மண்டபம், நெய்சேர்க்கும் இடம் முதலான தேவகார்ய மண்டபங்கள் எவ்வெவ் திக்கு களில் அமைக்கப்பட வேண்டுமெனவும் முப் பத்திமூன்றாவது படலமான ப்ரகார லக்ஷண விதிப்படலம் கூறுகின்றது.

அடுத்த படலமான பரிவார விதிப் படலமானது, முப்பத்து நான்காவது படல மாகும். இப்படலம் கந்தஸ்வாமியாராலயத் தில் அமைய வேண்டிய பரிவாரதெய்வங் களையும், அவர்களுக்கான பரிவாராலய லட்சணங்களையும், பிரதிக்ஷ்டா விதிமுறை களையும் விளம்புகின்றது. அத்துடன், சகல தேவர்களுள்ளும் உத்தமமான சிவன், விக்ஷ்ணு, பிரம்மா, விநாயகர், குகன் ஆகி யோர் பஞ்சபரிவார மூர்த்திகள் எனவும், மேலும் எட்டு, பன்னிரண்டு, பதினாறு, முப்பத் தியிரண்டு எண்ணிக்கையான பரிவார தேவ தைகளுக்கான ஆலயங்களும் பரிவாராலய மாக அமைக்கப்படலாம் என இப்படலத்தில் ஈசன் விஸ்வாமித்திரரிடம் கூறியுள்ளார்.

அடுத்ததாக அமைந்துள்ள முப்பத் தைந்தாவது படலமே கரண லக்ஷண விதிப் படலமாகும். கந்தஸ்வாமியார் ஆலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகசாலைக்கு உபயோகமாய் உள்ள அக்ஷ்ட மங்களம், தசாயுதம், க்ஷோடஸதீபம் ஆகிய தெய்வீக உருப்படிகளையும் ஏனைய அக்னிகார்ய வஸ்த்துக்களை அமைக்கும் முறை, அவற்றின் பிரமாணங்கள், அவற்றைப் பேணும் முறைகள் என்பவற்றை மிகவிரிவாக இப்படலம் கூறுகின்றது.

பாதுகா ப்ரோக்ஷண விதிப்படலமானது கந்தப்பெருமானது கமலம் போன்ற திருவடிகளைத் தாங்கும் பாதுகையின் லட்சணங்கள், அதற்குப் புனித நீராட்டும் முறை, அதற்கான பூசைகள் மற்றும் நைவேத்தியங்கள் பற்றி எடுத்துரைக்கின்றது. இது முப்பத்தாறாவது படலமாகும்.

சிவதீக்ஷையைத் தொடர்ந்து குஹதீக்ஷை பெற்றவர்கள் தம் நலனுக்காக வேண்டியும், தன்னைச்சார்ந்தோர் நலனுக்காக வேண்டியும் தமது இல்லங்களில் வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீசுப்பிரமண்யப் பெருமானை ஆத்மார்த்த வழிபாட்டின் பொருட்டு விக்கிரஹ ஸ்வரூபமாக எவ்வெவ் லட்சணங்களில் அமைக்கவேண்டுமெனவும், அவ்விக்கிரஹத்தை ஆகமமுறைப்படி பூசையறையில் ஸ்தாபிக்கும் முறை பற்றியும், அவ்வாறு ஸ்தாபித்த விக்கிரகத்தை தினம் பூசிக்கும் முறையையும் முப்பத் தேழாவது படலமான ஆத்மார்த்த யஜ்ந (வழிபாடு) விதிப்படலம் கூறுகின்றது. இவ்விதிப்படி ஆத்மார்த்த பூசையை நிறைவேற்றுபவன் ஸ்கநதலோகத்தில் சாமீப மோட்சமடைவான்.

அடுத்ததாயுள்ள முப்பத்தெட்டாவது படலமான தைலாபிஷேக விதிப்படலமானது, கந்தப்பெருமானின் அபிஷேகத்திற்குண்டான நறுமணத்தைலம் தயாரிக்கும் முறை, அதனை மந்திரபூர்வமாக சுத்தி செய்யும் முறை, அத்தைலம் கொண்டு கந்தனை அபிஷேகிக்கும் முறை என்பவற்றை சிறப்புற இயம்புகின்றது. இவ்வாறான தைலாபிஷேகத்தினை மேற்கொள்பவன் தன் சகல விருப்பங்களும் இனிதே நிறைவேறும்.

முப்பத்தொன்பதாவது படலமான மாஸ பூஜா விதிப்படலமானது, சித்திரை முதல் பங்குனி வரையான ஒவ்வொரு மாதங்களிலும் வருகின்ற விசேஷ காலங்களில் முருகவேளை எவ்வாறு பூசிக்க வேண்டுமெனவும், அக்காலங்களுக்குண்டான நவநைவேத்தியம் தயாரிக்கும் முறையையும் கூறுகின்றது. அதாவது, சித்திரை மாத பூரணைத்திதியுடனான சித்திரை நட்சத்திரத்தில் மருக்கொழுந்தாலும், வைகாசி மாத பூரணைத்திதியுடனான விசாக நட்சத்திரத்தில் மைசூர் சந்தனத்தாலும், ஆனி மாத பூரணைத்திதியுடனான மூல நட்சத்திரத்தில் நானாவித பழநைவேத்தியத்தாலும், ஆடி மாத பூர நட்சத்திரத்தில் பாலாபிஷேகத்தாலும், ஆவணி மாத அவிட்ட நட்சத்திரத்தில் சர்க்கரையபிஷேகத்தாலும், ஆவணி மாத பூராட நட்சத்திரத்துடன் பூரணைத்திதியும் வரும் சிறப்பு நாளில் தாழம்பூ அருச்சனை மற்றும் அதிரஸநைவேத்தியத்தாலும், ஐப்பசி மாத பூரணைத்திதியுடனான அச்சுவினி நட்சத்திரத்தில் அன்னநைவேத்தியத்தாலும், கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத் திரத்தில் யஜுர்வேத மந்திர அருச்சனை மற்றும் தேங்காய், பழங்கள், புக்ஷ்பங்கள் முதலியவற்றாலும், கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்திரத்தில் பூரணைத் திதியும் ரிக்ஷப லக்னமும் கூடிய சுபநாளில் நெய்த்தீபாலங்காரமும், மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்தில் சுத்த பசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்யாலும், தை மாத பூச நட்சத்திரத் தில் கிருமி தோக்ஷம் நீங்கப்பெற்ற தேனா பிக்ஷேகத்தாலும், மாசி மாத மக நட்சத் திரத்தில் உரோம குற்றம் நீங்கப்பெற நெய்யில் முறைப்படி நனைத்தெடுத்த ஆட் டுக் கம்பளத்தை அர்ப்பணித்தும், பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் தயிராபிக்ஷே கத்தாலும் ஆறுமுகப்பெருமானை பூசித்து வழிபட வேண்டுமெனவும், மேன்மை பொருந் திய மஹா சிவராத்திரியின் நான்கு சாமங் களில் ஆறுமுகச்சிவனான க்ஷண்முகனுக் குரிய அபிக்ஷேக, அலங்கார, அருச்சனை மற்றும் நைவேத்தியங்கள் எவ்வாறமைய வேண்டுமெனவும் கூறுவதோடு, நவநைவேத் தியம் செய்யும் முறைபற்றியும் கூறுகின்றது. எவனொருவன் நித்ய பூசையுடன் மாஸ பூசையையும் நிறைவேற்றுகின்றானோ, அவன் தனக்கு விரும்பியவற்றை வேற்பெரு மானருளால் பெறுவான்.

அங்குரார்ப்பண விதிப்படலமானது நாற்பதாவது படலமாகும். அங்குரம் என் றால் முளை எனப்படும். முளையிடுதல் எனப் படும் அங்குரார்ப்பணமானது சகல மங்கல காரியங்களிலும் இடம்பெறவேண்டும். அங்குரார்ப்பணமின்றி நிகழும் எக்காரிய மும் பலனேதும் தராது. கந்தசுவாமி யாராலயத்தில் அங்குரார்ப்பணம் செய்யும் முறைபற்றிக்கூறுவதே இப்படலமாகும். அதாவது, மிருத்சங்கிரணம் (மந்திரபூர்வ மாக மண் எடுத்தல்) செய்யும் முறை, முளை யிடும் பாத்திரத்தின் லட்சணங்கள், பாத் திரத்தில் மண் மற்றும் நவதானியம் இட்டு வணங்கி ஸ்தாபிக்கும் முறை என்பன கூறப் பட்டுள்ளன. முறைப்படி முளையிடுவதால் தானியவிருத்தியும் தானியலாபமும் ஏற்படும்.

ஈசனின் நெற்றிக்கண்ணிலிருந்து அவ தரித்த க்ஷண்முகனார் சர்வசக்தி ஸ்வ ரூபனாவார். அவருடைய திருக்கைவேல் ஞானசக்தி வடிவாயும், தேவியரான வள்ளி மற்றும் தேவசேனா ஆகியோர் முறையே இச்சா மற்றும் கிரியா சக்தி வடிவுடையோரா யும் உள்ளனர். அத்தகைய வள்ளி மற்றும் தேவசேனா ஆகியோரின் விக்கிரஹ லக்ஷண முறை, கந்தனுடன் தேவியரை திருக் கல்யாணம் செய்வித்து பிரதிக்ஷ்டை செய் யும் முறை மேலும் அவர்களுக்கான பூசை முறை என்பன பற்றிக்குறிப்பிடுவதே நாற் பத்தியோராவது படலமான மஹாவள்ளி, தேவசேனா ஸ்தாபன விதிப்படலமாகும்.

முன்னொருக்கால் புண்ணிய க்ஷேத் திரமான காசியில் வசிக்ஷ்ட கோத்திரத்தில் ஸ்வர்ணாக்ஷரன் என்பவருக்கு புத்திரனாக ஸுமித்திரன் என்பவர் பிறந்து தன்னுடைய மூன்று ஜென்மங்களும் சுப்பிரமண்ணியப் பெருமானையே முறைப்படி பூசித்து, ஈற்றில் கந்தபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு சண்டேஸ்வரப்பதவியுடன் கௌமார லோகத் தில் ஸுமித்திரசண்டர் எனும் திருநாமத் துடன் குககணங்களுள் ஒருவரானார். இத் தகைய பேறுபெற்ற ஸுமித்திரரை குகாலயத் தில் ஸ்தாபிக்கும் முறை பற்றி விளக்குவதே நாற்பத்தியிரண்டாவது படலமான ஸுமித்திர ஸ்தாபன விதிப்படலமாகும்.

அடுத்து, முருகப்பெருமானுடைய வாகனமான யானையை, மூலாலயத்தில் வீற்றிருக்கும் கந்தப்பெருமானுக்கு எதிதே அந்தராவரணத்தில் (உட்பிரகாரம்) பிரதிக்ஷ்டை செய்யும் முறையை நாற்பத்து மூன்றாவது கஜஸ்தாபன விதிப்படலம் விளம்பு கின்றது. அதாவது கஜத்தை எவ்வாறு உருவாக்குவது, அதன் வகைகள், பின் அதனை பிரதிக்ஷ்டை செய்யும் முறை என்பவற்றையும், அதன் ஸ்நபன முறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



யும் பிரதிக்ஷண முறையையும் இப்படலம் கூறுகின்றது. ஆனால், ஸ்கந்தரின் பிரதான ஊர்தி "சிக்கில்" எனப்படும் மயிலாகும். இத னாலேயே கந்தப்பெருமான், சிகி வாகனஸ் வாமி எனப் போற்றப்படுகின்றார். இவ்வாறு உள்ள மயிலை ஸ்தாபிக்கும் முறையானது இருபத்து நான்காவது படலமான ப்ரதிமா லக்ஷண விதிப்படலத்தின் இறுதியில் கூறப் பட்டுள்ளது.

ஆன்மாக்களின் மும்மல நீக்கம் பொருட்டு க்ஷண்முகனானவன், வள்ளிதேவ சேனா சமேதனாக ஞானச்சுடர் வடிவான இரதத்தில் ஆரோகணித்து உலாவருதல், மகோற்சவத்தில் தீர்த்தோற்சவத்திற்கு முதல் நாள் நிகழும். இவ்வாறு சண்முகப் பெருமான் எழுந்தருளும் இரதத்தை எம் மரங்கள் கொண்டு செய்யலாம் எனவும், அதன் அமைப்பு முறைகளையும், அளவுப் பிரமாணங் களையயும், அதில் செதுக்கப்படும் சிற்பங் கள் பற்றியும் நாற்பத்து நாலாவது படல மான ரத ப்ரதிக்ஷ்டா விதிப்படலம் கூறுவ தோடு, தயாரித்த இரதத்தை சண்முகனார் எழுந்தருளுவதற்கு ஏற்றாற்போல எவ்வாறு தயார்ப்படுத்த வேண்டும் என்பதற்குரிய கிரியைகளையும் இப்படலம் கூறுகின்றது. சகல கிரியைகளும் நிறைவுற்ற பின், முருகப் பெருமானை தேரில் எழுந்தருளச் செய்து, பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க, கிராம வலம் வரச் செய்யலாம். இதன் மூலம் ஆன் மாக்களின் மும்மலம் அகன்று முக்திப்பேறு கிட்டும்.

அடுத்து, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பேறுகளையும் அழிக் கவல்ல வேற்பெருமானது மகாபிக்ஷேக முறையானது, நாற்பத்தைந்தாவது படல மான மகாபிக்ஷேக விதிப்படலம் வாயிலாக உரைக்கப்பட்டுள்ளது. கந்தனுடைய மாகாபி க்ஷேகமானது, ஆயுள் விருத்தி, கல்வி விருத்தி, தன தானிய விருத்தி, வியாதி நாசம், சத்ரு நாசம், ராஜ்ய பலம் முதலிய நன்மைகளை அழிக்க வல்லது. இப்படலத்தில், மகாபிக்ஷே கத்துக்குரிய பாத்திர கலசங்கள் என்ப வற்றை சுத்தி செய்யும் முறை, அபிக்ஷேக ஜலம் தயாரிக்கும் முறை, ஸ்நபன மண்டபம் அமைக்கும் முறை, அபிடேகத் திரவியங் களை தயார் செய்து பேணும் முறை, அபி க்ஷேகத்தின் போது ஓதத்தக்க மந்திரங் கள் (ஸ்கந்த சூக்தம், குமார சூக்தம், ருத்ர சூக்தம், ஸ்ரீருத்ரம், சமகம், புருக்ஷ சூக்தம்), அபிக்ஷேகத்தின் பின்னரான அலங்காரம், ஹோமம் என்பற்றையும் எடுத்தியம்புகின்றது.

அடுத்து, நாற்பத்தாறாவது படல மாக ஸ்கந்தகலாந்யாஸ விதிப்படலம் அமைந்துள்ளது. முறைப்படி கலாந்யாஸம் செய்வதால் கந்தப்பெருமான் திருப்தியடை வதுடன், அக்கினிக்ஷ்டோம யாகம் செய்த பலனையும் அளிப்பார்.

நாற்பத்தேழாவது படலமாக மாத் ருக்காந்யாஸ விதிப்படலம் உள்ளது. இப் படலத்தில், இறைவிக்கிரகங்களின் அவய வங்களில் மந்திரபூர்வமாக அட்சரங்களை வைக்கும் முறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் இறைவிக்கிரஹம் பூரண சக்தி யுடையதாகும்.

தமிழில் அமைந்துள்ள முருக தோத் திரப்பாடல்களுள் பல்லாண்டு காலமாக தென்னாட்டவரால் போற்றித் துதிக்கப்படு வவற்றுள் கவசதோத்திரமான கந்தசட்டி கவசமும் ஒன்றாகும். தேவராய ஸ்வாமி களால் சென்னிமலைக் குமரவேளை நோக்கி துதித்து வணங்கி, பக்த கோடிகளை பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லெணாத் துயர்களிலிருந்து காத்தருளவேண்டி இது பாடப்பட்டுள்ளது. இக்கவசம் முருகனின் வேலானது, பக்தர்களின் அவயங்களைக் காக்குமாறு வேண்டிப் பாடப்பட்டுள்ளது. இதைப்போலவேயே குமாரதந்திரத்தின் நாற்பத்தெட்டாவது படலமானது சிவப்பரம்பொருளால் கௌசிக முனிவரிடத்து உரைக்கப்பட்டுள்ளது. இது சுப்பிரமணிய கவசவிதிப்படலமாகும். இப்படலத்தில் முருகப்பெருமானது பல்வேறு திருவடிவங்கள் பக்தனது ஒவ்வொரு அவயத்தையும் காக்கட்டும் எனக் கூறியருளப்பட்டுள்ளது. இக்கவசத்தை பக்தி சிரத்தையோடு பாராயணம் செய்வதன் மூலம் கந்தப்பெருமானது புண்ணிய அருள் கிடைப்பதுடன், ஈற்றில் கந்தப்புரப்பதவியும் கிட்டும்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஆன்றோர் வாக்கு. அதன்படி கந்தவேள் வீற்றிருந்து தன் அருளைப் பிரவாகிக்கும் ஆலயத்தை வலம்வரும் முறையை நாற்பத்தொன்பதாவது படலமான ப்ரதக்ஷிண நமஸ்கார விதிப்படலம் கூறுகின்றது. அதாவது முருகனாலயத்தில் எப்போது, எத்தனை முறை, எவ்வாறு வலம்வந்து கந்தனை நமஸ்கரிப்பது என்பது பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. எவனொருவன் சகல பாவங்களிலிருந்தும் விடுபட நினைக்கின்றானோ, அவன் குமரக்கடவுளுக்கும், மயூரம் அல்லது கஜத்திற்கும் இடையே தண்டம்போல விழுந்து வணங்க வேண்டும் என இப்படலம் அறிவுறுத்துகின்றது.

ஸ்ரீசதாசிவனாரின் பஞ்சமுகங்களினின்று தோன்றிய முனிசிரேக்ஷ்டரின் வழிவந்த ஆதிசைவ குலத்தோரான சிவத்விஜர்களே ஆலயங்களில் சகல கிரியைகளையும் ஏற்றுநடாத்த தகுதியுடையோராவர். இவர்களாலேயே லோகக்ஷேமத்திற்காக பரார்த்த பூசைகள் நடாத்தப்படல் வேண்டும். இவ்வாறான பெரும்புண்ணியம் வாய்ந்த ஆதிசைவ குலத்தோரில் சுப்பிரமணியருக்குப் பூசைசெய்யும் பட்டர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகளையும், அவர்களுக்குரிய தீட்டு தொடர்பான விளக்கங்களையும் ஐம்பதாவது படலமான ஆசார்ய லக்ஷண விதிப்படலம் கூறுகின்றது.

சாயரக்ஷா பூஜையானது இரவின் தொடக்கமான மாலைப் பொழுதில், பாலகர்களை பேய், பிசாசு முதலிய துக்ஷ்ட சக்திகள் பீடிக்காதிருப்பதற்காகவும், கிராம மக்கள் அன்றைய நாள்பட்ட துன்பங்களைக் களையவும் சுப்பிரமணியரை வேண்டிச் செய்யும் பூசையாகும். இப்பூசையின் போது ரக்ஷை செய்யும் முறை, தூபதீபம் காட்டும் முறை, திக்குரக்ஷை செய்யும் முறை என்பன ஐம்பத்தோராவது படலமான சாயரக்ஷா விதிப்படலத்தில் கூறப்பட்டுள்ளது. சாயரக்ஷா பூசை செய்வதால், கிராமத்தில் துர்தேவதைகளின் செல்வாக்கு அழிந்து லக்ஷமி கடாட்சம் பெருகி கிராமம் நலம்பெறும் குகனருள் பெருகும்.

இவ்வாறாக குமார தந்திரத்தில் தந்ராவதார படலம் முதல் சாயரக்ஷா விதிப் படலம் வரை என ஐம்பத்தொரு படலங்களும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டு ஸ்ரீமத் லலிதாகத்தின் உபாகமமான கௌமாரம் முடிவடைகின்றது.

ஈழமணித்திருநாட்டில் நல்லூர் கந்த சுவாமியார் ஆலயம், தென்னிந்தியாவில் பழநி தண்டாயுதபாணி ஸ்வாமி ஆலயம், திருச்செந்தூர் முருகனாலயம், திருத்தணிகை முருகனாலயம், திண்ணியம் சுப்பிரமணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வாமி ஆலயம், கந்தக்கோட்டம் ஆகிய குறிப்பிடத்தக்க ஆலயங்களிலேயே குமார தந்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறாக பூசைகள் இடம்பெறுகின்றது. ஏனைய முருகன் ஆலயங்களில் வசதிக் குறைபாட்டாலும், வேறு காரணங்களாலும் இப்பூசை முறை மேற்கொள்ளப்படாதுள்ளது. சுப்பிர மணியஸ்வாமியின் பரிபூரண அருட் கடாட்சம் அகில புவனமெங்கும் பெருக ஆகமங்களில் விதித்துள்ளவாறே எல்லாம் வல்ல கந்தவேளைப் பூசித்து பூசனை செய்வித்து நற்கதி அடைவோம்.

**உசாத்துணைகள்**


1) குமார தந்த்ரம் - (தமிழ் மொழிபெயர்ப்பு, மின்னூல் வடிவம்) - அல்லூர் விஸ்வநாத சிவாச்சாரியார் 2003

2) Kamakoti.org ஆக்கம்: தி.மனோக்ஷின்


## நல்லைக்குமரன் மலரை ஆய்வு செய்தோர்

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்லைக்குமரன் மலர் | **1993** | திரு.வ.கானமயில்நாதன் |
| 2. | நல்லைக்குமரன் மலர் | **1994** | பேராசிரியர் ப.கோபாகிருஷ்ணஐயர் |
| 3. | நல்லைக்குமரன் மலர் | **1995** | பேராசிரியர் இ. குமாரவடிவேல் |
| 4. | நல்லைக்குமரன் மலர் | **1996** | சிவஸ்ரீ சு.து.சுந்தரமூர்த்திக்குருக்கள் |
| 5. | நல்லைக்குமரன் மலர் | **1997** | கலாநிதி எஸ்.சிவலிங்கராசா |
| 6. | நல்லைக்குமரன் மலர் | **1998** | திரு.கோ.சி.வேலாயுதம் |
| 7. | நல்லைக்குமரன் மலர் | **1999** | பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| 8. | நல்லைக்குமரன் மலர் | **2000** | கலாநிதி மா.வேதநாதன் |
| 9. | நல்லைக்குமரன் மலர் | **2001** | திருமதி நாச்சியார் செல்வநாயகம் |
| 10. | நல்லைக்குமரன் மலர் | **2002** | கலாநிதி கலைவாணி இராமநாதன் |
| 11. | நல்லைக்குமரன் மலர் | **2003** | கலாநிதி செ.திருநாவுக்கரசு |
| 12. | நல்லைக்குமரன் மலர் | **2004** | திரு.க.சிவராமலிங்கம் |
| 13. | நல்லைக்குமரன் மலர் | **2005** | பேராசிரியர் அ.சண்முகதாஸ்<br>திரு.ஈ.குமரன் |
| 14. | நல்லைக்குமரன் மலர் | **2006** | ஆய்வு செய்யப்படவில்லை |
| 15. | நல்லைக்குமரன் மலர் | **2007** | பேராசிரியர் எஸ்.இரகுநாதன் |
| 16. | நல்லைக்குமரன் மலர் | **2008** | திரு.சி.சிவசரவணபவன் (சிற்பி) |
| 17. | நல்லைக்குமரன் மலர் | **2009** | பேராசிரியர் என்.ஞானக்குமரன் |
| 18. | நல்லைக்குமரன் மலர் | **2010** | பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் |
| 19. | நல்லைக்குமரன் மலர் | **2011** | கலாநிதி த.கலாமணி |
| 20. | நல்லைக்குமரன் மலர் | **2012** | பேராசிரியர் கி.விசாகரூபன் |
| 21. | நல்லைக்குமரன் மலர் | **2013** | கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் |
| 22. | நல்லைக்குமரன் மலர் | **2014** | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை |
| 23. | நல்லைக்குமரன் மலர் | **2015** | பேராசிரியர் தி.வேல்நம்பி |
| 24. | நல்லைக்குமரன் மலர் | **2016** | கலாநிதி செ.சேதுராஜா |
| 25. | நல்லைக்குமரன் மலர் | **2017** | பேராசிரியர் கு.மிகுந்தன் |
| 26. | நல்லைக்குமரன் மலர் | **2018** | கவிஞர் சோ.பத்மநாதன் |
| 27. | நல்லைக்குமரன் மலர் | **2019** | திருமதி சுகந்தினி சிறீமுரளிதரன் சோ.பத்மநாதன் |
| 28. | நல்லைக்குமரன் மலர் | **2020** | திரு.இ.சர்வேஸ்வரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் கைதடி (இணுவில்) சச்சிதானந்த சுவாமிகள் சச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி

இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

சித்தர்கள், அருளாளர்கள், கல்வி மான்கள், பல்துறைக் கலைஞர்கள், செயற் கரிய செயலால் பார் போற்றும் உத்தமர்கள் அவதரித்து மண்ணின் பெருமையை உலகறி யச் செய்த புனிதமான புண்ணிய திருவூர் இணையிலி என்னும் இணுவில்.

இப்புனித பூமியில் 1864இல் இணுவில் சிவகாமி அம்பாள் ஆலய தர்மகர்த்தாவின் மகனாகப் பிறந்த சின்னத்தம்பி என்பவர் முத்தமிழில் வல்லவராக இருந்து அருஞ் சேவையாற்றியதால் சின்னத்தம்பிச் சட்டம் பியார் என அழைக்கப்பட்டார். இவரின் முத் தமிழ்ச் சேவையும் இனிய இல்லற வாழ்வும் சிறப்புற்றபோதும் மழலைச் செல்வமற்ற பாவியாக வாழ்ந்தார். தமது குலதெய்வ மான சிவகாமி அம்பாளிடம் தமது ஈமக் கிரியைகள் செய்யவேனும் ஒரு சற்புத்திர ரைத் தருமாறு நீடிய காலம் வேண்டினார்.

சட்டம்பியாரின் அறுபது வயது நெருங் கியும் பயனேதும் கிட்டாததால் தவறான முடிவெடுத்தார். ஒரு நள்ளிரவு நெடிய கயிற் றுடன் சிவகாமி அம்பாளின் அன்றைய வழிபடு நிலையமான குடிசையில் தூக்குப் போட்டு உயிரைவிட முற்பட்டார். தமது பக்தனின் முடிவை நோக்கிய அன்னை சிவகாமி தமது பேரருளால் திருவாக்குரைக்கும் கற்பகம் என்னும் மூதாட்டியின் கனவில் தென்பட்டு பக்தனைத் தடை செய்யுமாறு கூறி மறைந் தருளினார்.

அம்பாளின் கட்டளையை ஏற்ற மூதாட்டி சடைவிரி கோலமாக ஆலயத்தினுட் சென்றார். சட்டம்பியாரை நோக்கி "என்ன காரியஞ் செய்யத் துணிந்தாய்; உனது இறு திக்கடனைச் செய்யவொரு சற்புத்திர னைத் தருவேன்; அவன் உன் கடமை முடிந் ததும் பொதுப்பணியேற்றுச் சென்றுவிடு வான்" என்று கூறிச் சட்டம்பியாரின் தலை யில் கைவைத்து ஆசீர்வதித்தார். உரிய காலத்தில் சட்டம்பியாரின் அறுபது வயதில் (1924இல்) சற்புத்திரரொருவர் அவதரித் தார். சட்டம்பியார் மகனை அரவணைத்து இளமையிலிருந்தே நற்கல்வி, நற்பண்பு, சமயநெறி யாவற்றையும் கற்றுத்தந்தார். இச்சிறுவனுக்குப் பேராயிரம் உடையான் என்னும் திருநாமஞ்சூட்டி இன்புற்றார்.

சட்டம்பியாரின் இயல்பான பண்பில் நட்புறவு பூண்டு பல பெரியார்கள் அடிக்கடி வந்து இணைவர். பேராயிரம் உடையானின் ஆறு வயதில் ஒரு சமயம் நயினை முத்துக் குமாரசாமி (சித்தர்) சட்டம்பியாரை நாடி வந் தார். சுவாமிகள் நெடுந்தூரம் நடந்து வந்த அசதியால் அவ்வீட்டுத் திண்ணையில் படுத்து விட்டார். பண்பு மிக்க சிறுவன் சுவாமிகளின் கால்களைத் தமது பிஞ்சுக் கையினால் வருடிக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமயம் சுவாமிகள் திடீரென எழுந்தார். "எட மேனை என் கால்களை வருடச் சிவகாமி அம்பாள் தனது பிள்ளையைக் கொண்டோ குற்றேவல் செய்கிறாய் எனக் கோபிக்கிறாள்" என்று கூறி அச்சிறுவனைக் கட்டியணைத்தார். சுவாமிகள் சட்டம்பியாரை நோக்கி "சின்னத்தம்பி, இவன் அம்பாளின் பிள்ளை; உனது ஈமக்கிரியைகள் முடிந்ததும் இவன் உலகிற்கு உபதேசஞ் செய்யச் சென்றுவிடுவான்; இவனின் பத்து வயது வரைதான் உன் உறவு; இவனை நன்கு பராமரித்துவிடு" என்று கூறினார்.

சித்தரின் சித்து ஞானப்படி சட்டம்பியார் 70 வயதில் இயற்கை எய்தினார். சிறுவன் தந்தையின் கடமைகள் முடிந்ததும் ஆலயப் பணிகளை நாடினான். தமது நண்பரான சங்கரலிங்கம் என்பவரின் உதவியுடன் அம்மன் ஆலயத்தைத் தினமும் கூட்டிப் பெருக்கினான். வாரமொரு முறை அயலில் பசுஞ்சாணி எடுத்து வந்து குடிசையான ஆலயத்தைத் தமது பிஞ்சுக் கையால் மெழுகிச் சுத்தஞ் செய்தனர். இதே போல அயற்கோயில்களுக்கும் அடிக்கடி சென்று வழிபட்டனர். வாரந்தோறும் குப்பிளானில் உள்ள சமாதிக் கோயிலுக்கும் சென்று தரிசிப்பர்.

வீட்டில் நாட்டமின்றி அலைந்து திரிந்தவர், பள்ளிக்குச் செல்லாத காரணத்தால் தாய்மாமன் இவரைத் தடியால் அடித்தார். அச்சமயம் இச்சிறுவன் (12 வயது) ஓடிச் சென்று சிவகாமி அம்மன் ஆலய வாசலில் விழுந்து ஓலமிட்டு "ஊரார் என்னை அடிக்கவா என்னைப் பெறுவித்தாய்" எனக் கதறி அழுதான். பின் தன் தாயிடஞ் சென்று தான் பரதேசியாகச் செல்வதாகக் கூறி விடை கேட்டார். தாயார் மகனின் போக்கை அறிந்து "நீ எங்கையாகிலும் போ" என்றார்.

**துறவு நிலை**

பேராயிரம் உடையான் தமது பன்னிரு வயதில் வேதாந்த மடத்துக்குச் சென்று மகாதேவ சுவாமிகளின் பாதத்தில் விழுந்து தஞ்சம் கோரினார். சிறுவன் 12 வயதில் துறவுக்குரிய பக்குவநிலை வராததை உணர்ந்தார். அவருக்கு உபதேசம் ஏதுஞ் செய்யாது ஆச்சிரமச் சமையற் சாலையில் இணைத்தார். நான்கு வருடங்கள் சென்றதும் சிறுவனை அழைத்த மகாதேவ சுவாமிகள் கௌபீனதாரியாகச் சென்று ஊருக்கு உபதேசஞ் செய்து வா என்று கூறினார். செல்லுமிடங்களில் பசித்தால் பிச்சை ஏற்று உண்ணலாம். இல்லறத்தாரின் வீடுகளில் இரவில் தங்கக் கூடாது. சுடலைமடம், ஆலய வெளி மடங்களில் தங்க வேண்டுமெனக்கூறி அனுப்பினார்.

குருவின் கட்டளைப்படி கௌபீனதாரியாக தென்மராட்சியை நாடினார். தமது தேச சுகத்தையோ பசியையோ நாடாது சிவசிந்தனைகளை உபதேசிப்பார். பசி வந்தால் இரந்து உண்பார். இவ்வாறு பேராயிரம் உடையார் தமது திடமான தவ ஒழுக்கத்தில் நல்ல பக்குவநிலை ஏற்பட்டது. இவரின் 22 வயதில் சுவாமிகள் தமது தொண்டரொருவரின் கனவில், இவரின் அடையாளங்களைக் கூறி அவரை ஆதரித்துத் தம்மிடம் சேர்க்குமாறு கூறினார்.

அத்தொண்டர் யாழ் கச்சேரியடியில் சென்ற பாதையில் இவரைக் கண்டார். இவரை அழைத்துச் சென்று புனித நீராட்டிப் புத்தாடை அணிவித்தார். மேலும் அறுசுவை உண்டியும் வழங்கினார். அச்சமயம் இளந் துறவி அவ்வன்பரை நோக்கி ஏன் இந்த உபசாரங்கள் எனக் கேட்டார். அச்சமயம் அவ்வன்பர் தமக்குப் பெரியவர் கனவில் தனது தொண்டன் செல்லும்போது அழைத்துச் சென்று உபசரிக்குமாறு கூறியதாகத் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பரின் உரை கேட்டதும் தமது குருவை நாடி ஓடிச் சென்று மகாதேவ சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்தார். அச்சமயம் சுவாமிகள் அவரை வாரி எடுத்து கட்டியணைத்து "நீ எனது சச்சிதானந்த மெடா" என்று கூறி ஆசீர்வதித்தார். இத னால் "சச்சிதானந்தம்" என்னும் பெயர் மகாதேவ சுவாமிகளால் வழங்கப்பெற்ற தீட்சா நாமமாகும். குரு சீடனை நோக்கி ஒரு கோடி மக்களுக்கு நல்லு பதேசஞ்செய்துவா என வாழ்த்தி அனுப்பினார்.

சுவாமிகள் மீண்டும் தென்மராட்சி சென்று பளை வரை பல அன்பர்களுடன் உறவாடித் தமது உத்தம உபதேசத்தால் மக்களைத் தெளிய வைத்தார். இவர் பல அன்பர்களுடன் மிக எளிமையாக வாழ்ந்து நல்வழிப்படுத்தினார். மக்களிடையே உள்ள அறியாமையைத் தமது சித்து உணர்வால் தெளிய வைத்தார். பல அன்பர்கள் இவரின் அருட்சித்துப் பணிக்கு உடந்தையாயினர். பல சீடர்கள் அவ்விடம் வந்து சுவாமிகளிடம் தமது வாழ்வில் ஏற்படும் துயரங்களை மாற்றித் தெளிவடைந்தனர். சுவாமிகள் தமது அருட்சிறப்பால் பல பாடல்களைப் பாடியும், ஓதியும், யோக நிலையிலிருந்தும் சிறப்படைந்தார். பல சீடர்களும் தமது துயரங்களை வெளியிடுவர்.

ஒரு சமயம் ஒருவர் தமது வியாபாரத்தில் நட்டமடைந்து மிகக் கவலையுடன் சுவாமிகளை நாடினார். அச்சமயம் சுவாமிகள் ஆயிரம் ரூபாவை அவரிடம் கொடுத்து "நீ கடைத்தேறுவாய்" என்று கூறினார். அவர் அப்பணத்துடன் வியாபாரத்தை ஆரம்பித்து மிகச் சிறப்படைந்தார். இவ்வாறு பற்பல அற்புதங்களைச் செய்து சுவாமிகள் முக்காலத்தையும் உணர்ந்தவர்.

ஒரு நாள் தமது சீடர்களிடம் தாம் மூன்று மாதத்தில் நாள், திகதி குறித்துச் சமாதி அடைவதாகவும் தெரிவித்தார். தமது சமாதி இணுவில் ஒரு மயானத்தில் அமையுமென்றார். குறிப்பிட்ட திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன் நோயினால் படுத்த படுக்கையில் இருந்தவர். உரிய நேரம் வந்ததும் எழுந்து பத்மாசனமிட்ட நிலையில் சமாதியானார்.

இவரின் உடல் இணுவில் காரைக்கால் மயானத்தில் சமாதி வைக்கப்பட்டது. சீடர்கள் அவ்விடத்தில் சமாதிக் கோயிலமைத்து வருடா வருடம் தை மாத புனர்பூச நட்சத்திரத்தன்று சமாதியில் பொங்கலிட்டு அபிசேகங்கள் செய்து வழிபட்ட பின்னரே தமது கைதடி ஆச்சிரமத்திலும் வழிபடுவர்.

சுவாமிகளின் தபோவனத்தில் சுவாமிகளால் நிறுவப்பட்ட சச்சிதானந்த ஆலயம் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்து பிரபலமடைந்து விழாக்கள் யாவும் நடைபெறுகின்றன. சுவாமிகளின் ஆன்மிக வழிகாட்டலும் சீடர்கள் தொண்டர்களின் பேரூக்கமும் இக்குரு பீடத்தில் அறநெறிப் பாடசாலை, சமய உபதேசங்கள் மற்றும் சமய, சமூகப் பணிகள் நன்கு விரிவடைந்து இச் சூழல் மட்டும் அயலவர்களையும் இன்று வரை நெறிப்படுத்துவது சுவாமிகளின் அருட்சிறப்பேயாகும்.

பாடசாலையில் ஏதும் கற்காதவர். தமது தவஞான உணர்வால் "அத்வைத ஞான வழிப்பாடல்கள் என்னும் நூலில் அநேக தத்துவப் பாடல்களைப் பாடியுள்ளார். பற்பல தத்துவங்களையும் ஓதி உய்வித்த சுவாமிகள் தமது 36ஆம் வயதில் (1960) சமாதியடைந்தார்.

சுவாமிகளின் பாடல்களில் ஒன்று.

**தக்கசா தனத்திலிருந்து குருபரன் தாளை நோக்கி**
**மிக்கவெண் ணீற்றையள்ளி உடம்பினிற்றரித்து நன்கு**
**சிக்கிய மனத்தை நீக்கி நின்மலப் பிரமந் தன்னில்**
**சொக்கியே நிற்பதன்றோ நல்லருள் ஞானநிட்டை.**

- ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்களும் வழிபாடும் ஒரு சமூகநோக்கு

**கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்**
**B.A. (Hons) Dip- in- Edu, M.A.**

**"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா**
**அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மால்அற நேய(ம்) மலிந்தவர் வேடமு(ம்)**
**ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே"**

மெய்கண்டார் (சிவஞானபோதம். சூ.12)




உலகிலுள்ள எல்லாப் பொருள் களுமே அவன், அவள், அது என்ற பாகுபாட்டில் அடங்கு வதாகும். இவை தானாகவே இயங்காத வையாகும். எனினும் இவை தோன்றி நின்று அழிவதைப் பார்க்கும் போது, இவற்றைத் தோற்றி இயக்கும் ஒரு பரம்பொருள் இருக்க வேண்டும் என்பது இயல்பாகவே புலப்படுவ தாகும்.

**"ஒருவனோடு ஒருத்தி ஒன்றென்று**
**உரைத்திடும் உலக மெல்லாம்**
**வருமுறை வந்து நின்று**
**போவதும் ஆத லாலே**
**தருபவன் ஒருவன் வேண்டும்..."**

அருணந்திசிவாசாரியார் (சிவஞானசித்தியார் சூ.01)


கடவுள் என்ற சொல்லுக்கு எல்லாத் தத்து வங்களையும் கடந்த பரம்பொருள் எல்லாப் பொருள்களையும் தோற்றுவித்து அவற்றி னுள்ளே உயிருக்குயிராய் நின்று இயக்கு பவர் என்பது பொருளாகும். அத்தகைய கட வுளை அடைய ஒவ்வொரு சமயமும் ஒவ் வொரு வழியை வகுத்துக் கொண்டது.

சமயஞானிகள் அவ்வக்காலத்திலே தோன்றி மக்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்ததோடு வாழ்ந்தும் காட்டினர். சைவ நாயன் மார்களும் வைணவ ஆழ்வார்களும் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் திருக்கோவில்கள் இறைவழி பாட்டுக்கு இன்றியமையாத சாதனங்கள் என அறிவுறுத்தியதோடல்லாமல் திருக் கோவில்கள் தோறும் சென்று மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றைத் தெய்வமணங் கமழும் பாடல்களால் போற்றிப்பாடினர். அத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் ஆலய வழிபாடு மக்கள்மயப்படுத் தப்பட்டது.




"மனம் உள்ளவன் மனிதன்" இந்த மனம் என்பது ஒரு நிலையில் நிற்பதில்லை. அதன் இயல்பு திரிதல் (அடிக்கடி மாறுவது) ஆகும். அதனைத் தீயவழியில் செல்ல விடாது தடுத்து நல்வழியில் செலுத்துவதே அறிவு. கடவுள் இருக்கிறார் என்ற உணர்வு இல்லாமையால் பல கெட்டகாரியங்கள் அரங்கேறுகின்றன. உடலில் உயிர் தங்க உணவு கொள்வதும் நீர் பருகுவதும் மல சலங்கழிப்பதும் அவசியமாக இருக்கின்றன. அதுபோலவே உயிர் கடைந்தேற கடவுள் வழிபாடு அவசியமாகும்.



நம் ஈழமணித்திருநாடு பண்டு தொட்டு பண்புமிகுந்த நாடாகவே இருந்து வந்திருக் கின்றது. இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதிலும் சைவப்பண்பாடுடை யவர்கள் என்பதிலும் எவ்வித சந்தேகமு மில்லை என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தி யுள்ளன. அதற்குரிய ஆதாரங்கள் எம்மால் பேணப்படவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். இந்தியாவின் தமிழ்நாட்டை அடிப்படையாகக் கொண்ட எமது பண்பாடு, கலைகள் என்பன உலகமே வியந்து நிற்கும் பண்பு கொண்டவை என்பதை யாரும் மறுப் பதற்கில்லை. எனவே, ஆன்மநேய ஒருமைப் பாட்டை அடிப்படையாகக் கொண்டு வாழ்க் கையின் ஒவ்வொரு துறையிலும் நிலையில் லாத உடல்வளர்ச்சியையும் உலக முன்னேற் றத்தையும்விட நிலையான உயிருக்கு உறுதி தேடுவதே உண்மையான குறிக்கோளாக அமையவேண்டும். அதற்குத் தெய்வபக்தி இன்றியமையாதது. இவ்வுலக இன்பத்திற் குப் பொருட் செல்வம் எவ்வளவு அவசியமோ, அதுபோல இவ்வுடலை விட்டுச் செல்லும் உயிருக்கு நிலைத்த பேரின்பம் எய்து வதற்கு இறைவழிபாடும் அன்போடி யைந்த அருள்வாழ்க்கையும் அவசியமாகும்.

சமயம் என்பதன் பொருள். மக்களின் பண்பட்டநிலையே ஆகும் இயற்கையின் செயலைக் (இடி, மின்னல், மழை, வெய்யில், புயல்) கண்டு பயந்த மனிதன் அவற்றை வழிபடத் தொடங்கியதிலிருந்து சமயம் தோன்றியது என்பர். காலஞ் செல்லச் செல்ல அவற்றுக்கு உருவங் கொடுத்து இந்திரன், அக்கினி, வருணன், சூரியன், சந்திரன், உருத்திரன் எனப் பெயரிட்டு வழிபட்டனர். இன்று அவற்றின் சக்திகள் அனைத்தும் இணைந்த நிலையில் சிவன், சக்தி, விஷ்ணு, விநாயகர், முருகன், சூரியன் என ஆறுவகையில் ஆகமம் சார்ந்த நிலையிலும் ஆகமம் சாராநிலையில் கிராமி யத் தெய்வங்களாகவும் தம் தேவைகளின் பொருட்டும் வழிபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து சமயத்தில் உயர்ந்தோர் எனப் படுவோர் உள்ளத் துறவுடைய பெரியோர் களாவர். தான் என்ற ஆணவ முனைப்பை அறவேயொழித்து, எல்லோரும் இன்புற்றி ருக்க வேண்டுவதேயன்றி வேறொன்றறியாத வராய்த் தனக்கென வாழாப் பிறர்க்குரியா ளராய்ப் புகழுடன் வாழ்பவரே உயர்தோரா வர். இதனை,

**"யான்எனது என்னும் செருகறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்"**

எனும் வள்ளுவர் வாக்கால் மேலும் அறியலாம்.

இந்துசமயத்தைப் பாதுகாக்க உத விய நிலையங்களில் திருக்கோவில்களுக்கு முக்கிய இடம் உண்டு. பண்டைக்காலத் தில் அரசர்கள் ஆலயங்களைக் கட்டு வதற்கு மக்கள் பேராதரவு வழங்கினர். எங் கும் நிறைந்திருக்கும் இறைவனை உள்ளத் திலே காண்பதென்பது சாதாரண மக் களுக்கு எளிதல்ல.


**"தேடிக்கண்டு கொண்டேன்... தேவனை**
**என்னுள்ளே தேடிக்கண்டு கொண்டேன்"**

என்ற நாவுக்கரசரின் உயரிய பக்தி நிலை சாதரண மக்களுக்கு எளிதில் கிட்டி விடுவதில்லை. எனவே இறைவனை ஒரு இடத்தில் இருப்பதாக உருவகப்படுத்தி அந்த இடத்தில் ஆன்மா லயித்து நிற்கும்படி செய்யவே ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட் டன. ஆன்மா லயிக்கும் இடம் ஆலயம் எனப் பட்டது.

**"நாடும் நகரமும் நற்றிருக் கோவிலும்**
**தேடித் திரிந்து சிவபெரு மானென்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோவிலாய்க் கொள்வனே"**

- திருமூலர்.

ஆலயங்கள் தோறும் சென்று வழி படுவோர் உள்ளத்தை இறைவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு எழுந்தருள்வான். மனிதனைப் புனிதனாகச் செய்வது ஆலய மாகும். ஆலயம் வெறும் பிரார்த்தனை மண் டபங்களல்ல அவை பரமபுருஷனான ஆண்ட வனின் இருப்பிடமாகவும் வடிவமாகவும் கண்டு வழிபடுகின்றோம். இயற்கை இறை வனுள் அடக்கம். நம் முன்னோர்கள் இயற் கையின் எல்லாப் பொருட்களிலும் பரத்துவ மாகிய பிரம்மம் அடங்கியிருப்பதை உணர்ந் தார்கள். மனிதனுட்பட எல்லா உயிரினங் களிலும் மறைந்தியங்குவதை மக்களுக்கு உபதேசித்தார்கள். இத்தகைய மகத்தான உண்மையே இந்துசமய ஆலயங்கள் அமைய அடிப்படைக் கோட்பாடாயிற்று.




"பிரும்மபுரே தஹரம் புண்டரிகம்: தேஹோ தேவாலய ப்ராக்தோ ஜீவே தேவ" என்பது உபநிடதம். அதாவது உடலே பிரம மத்தின் இருப்பிடம். உடலே திருக்கோவில். உள்ளுறையும் உயிரே இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"**

என்பது திருமந்திரம்.



ஆண்டவன் இருக்கிறான் என்பதை விளம்பரப்படுத்த ஆலயங்கள் கட்டப்பட வில்லை. தெய்வீக சக்தியை வகைப்படுத் திக் காட்டவும் அதற்கு ஒருவழிமுறை அமைக்கவும் சமுதாயத்தை ஆட்கொள் ளும் தெய்வீகசக்தியை தேக்கிவைக்கவும் ஒரு பீடமாக ஓர் இருப்பிடமாக ஆலயங்கள் விளங்குகின்றன.

மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்பதை ஆலய சாஸ்திரம் கருத்திற் கொண் டுள்ளது. அவன் தன்னைச் சுற்றியுள்ளவர் களையும் அவர்களுடைய சிந்தனை செயல் இயக்கங்களையும் உருவாக்குவதில் செயற் படுகின்றான். அல்லது அவற்றால் பெரிதும் பாதிக்கப்படுகின்றான். எனவே தனிப்பட்ட வனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர் பும் நோக்கமும் ஒரே சீராக அமைவதற்கு மனிதனைச்சுற்றியுள்ள சூழ்நிலை சமூக மான உறவுகள் இவற்றையெல்லாம் உரு வாக்குவது அவசியமானதாகும். மனித மனம் கூட்டமாக இருந்தால் சூக்குமமான மறைபொருளான விடயங்களை அவ்வள வாக வாங்கிக் கொள்வதில்லை. அந்த மாதிரி நேரங்களில் கிரியைகள், சடங்குகள் இவைகளைக் கொண்டு தான் அவர் களுக்கு உண்மையை மெல்ல மெல்ல உணர்த்த முடியும்.

சூரியனுக்கு நேரிடையாக எரிக்கும் சக்தி இருப்பினும் சாதாரணமான பஞ்சை எரிப்பதற்கு ஒரு பூதக்கண்ணாடி தேவைப் படுகின்றது. அது போலவே ஆலயத்திலுள்ள தெய்வத்தின் அருளும் மனிதனுக்குக் கிடைக்க ஆலயம் தேவைப்படுகின்றது. பசுவின் உடலெங்கும் பால் மறைந்திருந்த போதும் மடியில் உள்ள காம்புகள் மூலமே பால் வெளிப்படவேண்டும்.

**திருக்கோவில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டார்குச் சிவன் உறைவன் ஆங்கே
உருக்கோலி மந்திரத்தால் என நினையும் அவர்க்கும்
உளன்எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும்
விருப்பாய வடி வாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தில் வந்துதித்து மிகும்சுரபிக்கு எங்கும்
உருக்காணவொண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல் வெளிப்பட் டருளுவன் அன்பர்க்கே.**

- சிவஞான சித்தியார்

**எங்கும் சிவனிருப்பான் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும் லிங்கத்தும்
ஆவினுடம்பெல்லாம் ஆவாரித்து நிற்கினும் பால்
பாவு முலைக்கண் மிகுதி பார்**

- சிவஞானப்பிரகாச வெண்பா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்விசை அணுக்கள் நிறைந்த சக்தி நிலையம் (Power House) போல திருவருள் அணுக்கள் நிறைந்த இடம் ஆலயம். செம்பும், கல்லும் மின்சாரத்தை ஈர்ப்பது போல கோவில்களில் செப்பு முதலிய உலோகங்களிலும் கல்லிலும் தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வாழ்க்கை எனும் கடலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் மக்களுக்குக் கோவில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன.

**"நோக்கிய இடங்கள் எல்லாம் நுவலருந்தலங்களாக**
**தேக்கிய தீர்த்தமாக சிவலிங்க மூர்த்தியாக**
**ஆக்கிய தவத்தானாலும் அடைந்தவர்க்கற மென்றோதும்**
**பாக்கியமாக்கி மேய உய்ப்பதுமுது சென்னிநாடு"**

என்கின்றார் மகாவித்துவான் மினாட்சிசுந்தரம்பிள்ளை.




வறுமையிலும் மனக்கிலேசத்தினாலும் மற்றும் பல கஷ்டங்களினாலும் சாந்திக்குறைவு ஏற்பட்டு அவதியுறும் மக்களுக்கு கோவில்களும் இறை ஆராதனைகளும் உதவுகின்றன. இவ்வுலகில் உள்ளதெல்லாம் இறைவன் படைத்தது. நமக்கு ஒன்றும் சொந்தமில்லை. அவன் கொடுத்த பொருளை நன்றியுடன் அவனுக்கே அர்ப்பணம் செய்த பிறகுதான் நாம் ஆண்டு அனுபவித்தல் வேண்டும். இந்த நன்றிக்குப் பெயர் தான் பூஜை என்பதாகும்.


மக்களில் பெரும்பாலோருக்கு சுயமாகவோ சுலபமாகவோ பூஜை செய்யும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகவே, மக்கள் கூடிப் பொதுவான ஓரிடத்தில் தியானம் செய்யவும் பூஜை செய்யவும் ஒரு இடத்தை பக்தி பூர்வமாக நிர்மாணித்துப் பரார்த்த பூஜையில் ஈடுபடுவர். ஆலயங்கள் கலை, கலாசாரம் இவைகளின் உறைவிடங்களாக விளங்கி வந்துள்ளன. சாஸ்திரங்களை அறிந்து நூல்களை இயற்றுபவரும் கலா நிபுணர்களினதும் தமது திறன்களை ஆலயங்களிலேதான் அரங்கேற்றம் செய்வது வழக்கம். தெய்வத்திற்கு ஆபரணம் செய்வது, தேர்நிர்மாணிப்பது, கோபுரங்கள் அமைப்பது, சிற்பங்கள் செதுக்குவது எல்லாமே ஆலயத்தை மையமாகக் கொண்டே வளர்ந்தவைகளாகும். இறை கைங்கரியம் என்ற மனப்பாங்கில் அவை வளர்ந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் ஆதாரக்கல்விக்கு மிகவும் ஏற்ற இடமாகும். வித்தியாரம்பம் செய்தல், வேதபாரா யணம், சாமகானப்பயிற்சி என்பவை ஆரம்பிப்பதற்கு ஆலயங்களே ஆதாரமானவை. அதுமட்டு மன்றி ஆலயங் கள் கோட்டைகளாகவும் ஆபத்துக் காலத் தில் மக்களுக்குக் காப்பு அரண்களாகவும் பயன்பட்டமை பற்றி வரலாற்று நூல்கள் உரைக்கின்றன. பெரியமதில் சுவர்கள் அரண் களாக உபயோகிக்கப்பட்டதல்லாமல் வழி படும் அடியவர்களின் தூய எண்ண அலை களும் ஒலியலைகளும் தங்கி ஆலயங்களின் புனிதத்துவத்தை காக்கவும் உதவுகின்றன.



கிராமத்திலுள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையை ஆலயங்களுடன் இணைத்து நடத்திவந்தனர். அதிகாலையில் கோவில் மணியடித்ததும் எல்லோரும் எழுந்து தங் கள் காரியங்களைத் துவக்கவும், முடிந்தவர் கள் கோவிலுக்குச் சென்று வழிபட்டும், இய லாதவர்கள் இருந்த இடத்திலேயே அவன் புகழ் பாடியும் நினைந்தும் தம் காரியங்களில் ஈடுபட்டனர். மணியோசை கேட்கும் போதெல் லாம் இறைவன் நினைவே அவர்களுக்கு ஏற்பட்டது. இறைவன் திருக்கோவில் இல் லாவூர் திரு இல் ஊர் என்றார் அப்பர் பெருமான்.

**“திருக்கோவில் இல்லாத திருஇல் ஊரும்**
**திருவெண்ணீறு அணியாத திருஇல் ஊரும்**
**பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும்**
**பாங்கினோடு பலதனிகள் இல்லா ஊரும்**
**விருப்போடு வெண்கங்கம் ஊதா ஊரும்**
**விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்**
**அரும்போடு மர்பறித் திடுண்ணா ஊரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே”**

ஒரு ஊர் சிறப்படைவதற்கு அங்கு விளங்கும் ஆலயங்களோடு அவ்வூரில் வாழும் மக்களும் காரணமாகின்றனர். புறநானூற்றில்

**“நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர் அவரே**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே”**

என்று ஔவையார் பாடியபாடல் ஒன்றுண்டு.

நாடாக இருந்தாலும் காடாக இருந் தாலும் எந்தவூர் நல்லவர் வாழும் ஊராக இருக்கிறதோ அந்தவூரே நல்ல ஊராக இருக்கின்றது. என்பது இப்பாடலின் பொருள் ஆகும். மனிதன், மனிதன் எனும் பெயரோடு வாழும் போதே அவன் நல்லவனாகின்றான். அவன் வாழும் காடும் நாடாகின்றது. உல கில் வாழும் உயிர்களைத் தொல்காப்பியர் ஆறுவகையாகப் பிரித்திருக்கின்றார்.

1. தொட்டால் உணரும் உணர்வு மட்டும் உடைய உயிர்கள் - தாவரங்கள்
2. அதனோடு நாவறிவும் உடையன - சங்கு, நத்தை போன்றன
3. அவற்றோடு மூக்கறிவும் உடையன - எறும்பு, கறையான் போன்றன.
4. அவற்றோடு கண்ணறிவும் உடையன - வண்டு, தேனீ போன்றன.
5. அவற்றோடு செவியறிவும் உடையன - பறவைகள், விலங்குகள்.
6. அவற்றோடு மன அறிவும் பெற்றவன் மனிதன் எனவே ஏனைய உயிர்களை விட மேம்பட்டவனாக மனிதன் மதிக்கப் படுகின்றான். ஆறு அறிவு பெற்றமனிதன் அவ்வறிவுக்கேற்ற பண்புகளோடு வாழாத போது அவன் மனிதரில் தாழ்ந்தவனா கின்றான்.

**“அரம்போலும் கூர்மை யரேனும் மரம்போல்வர்**
**மக்கட் பண்பு இல்லாதவர்.”**

என்ற வள்ளுவர் குறள் இக்கருத்தினை அணி செய்கின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் ஒழுக்கவியல்

**ஆரணி விஜயகுமார்**
நான்காம் வருடம் கலைப்பீடம்,
பல்கலைக்கழகம்.

ஒழுக்கத்தைப் பேணுவதே சமயத்தின் நோக்கம். எந்த ஒரு சமயமும் பெறுமதி மிக்கதொன்றாகவே கருதுகின்றது. சனாதனதர்மம் எனப்படும் இந்து சமயம் கூறும் ஒழுக்கவியலில் அன்பு, அறம், அகிம்சை, சத்தியம் என்பனவும் கொல்லாமை, புலால் உண்ணாமை, கள்ளாமை ஆகிய நற்பண்புகள் கூறப்படுகின்றன.

ரிதம் என்ற ஒழுங்கு இயற்கைச் சக்திகளின் ஒழுங்கை விதந்து கூறி அந்த ஒழுங்கில் வாழ்வு அமைவதைப் போதித்துள்ளது. ஒழுங்கு தவறின் வர்ணனால் தண்டிக்கப்படுவர். நியதி மீறல் தண்டனைக்குரியது. இயற்கையை வழிபட்ட மக்கள் இயற்கைப்படியே ஒழுக்கமாக வாழ்ந்துள்ளனர். தவறு இழைத்தால் இயற்கையே தண்டிக்கும் என்ற ஓர் பயத்தால் ஒழுக்கமாகவே வாழத் தலைப்பட்டனர்.

அரசியல், வாழ்க்கை, குலமுறை ஒழுக்கம், மாணவர்களுக்குரிய மற்றும் கணவன் மனைவிக்குரிய ஒழுக்கம், சகோதர சகோதரிகளுக்குரிய ஒழுக்கம் என்பன காணப்படுகின்றன. தர்மன் சத்தியத்தைப் பேணுவதே தர்மம் எனவும் உயிரைவிட சத்தியமே மேல் எனவும் வாழ்ந்தான். சகோதர பாசத்திற்கு வீமனும் கொடைக்கு கர்ணனும் எடுத்தாளப்படுகின்றனர். குருவை மதித்தல் தாயின் கட்டளையை மதித்தல் என்பனவும் மகாபாரதம் போதிக்கப்படுவன.

மாணவனுக்கு குருகுல நிலையில் ஆசிரியர் வழங்கிய பயிற்சியில் ஒழுக்கத்துக்கே முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. குரு, பெற்றோர் ஆகியோரைத் தெய்வமாகப் போற்றுதல், தெய்வத்தை வணங்குதல், விருந்தினரை உபசரித்தல் போன்றன முதன்மையானவை ஆகும்.

மாணிக்கவாசகர் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி பல் மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்" எனப் பல பிறவிகளை ஆன் மாக்கள் எடுப்பதைத் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு ஆன்மாவும் செய்யும் வினைக்கேற்ப பிறவிகளை எடுக்கும். நல்வினை ஆற்றினால் நற்பிறவி கிட்டும்.

இந்துக்களுக்கு அறம் என்ற சிந்தனை மிகுந்த முக்கியத்துவம் உடையதாகக் கொள்ளப்படுகின்றது. இல்வாழ்வான் ஒருவன் அறத்தின் அடிப்படையிலேயே பொருளை ஈட்டி வாழ்க்கையை நடாத்த வேண்டும். தீட்சை முறைகள், வேத, தேவார பாராயணங்கள் யாவுமே ஒழுங்கு அடிப்படையில் ஒழுக்கத்தைப் பேணக் கூடிய வகையில் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என பகவத்கீதையில் குறிப்பிடப் பட்டுள்ளது. தர்மம் ஒன்றே ஒருவனைப் பின் தொடரும். சத்தியமே உயர்ந்த தர்மம் என்றும் அதை விட உயர்ந்தது வேறில்லை என்றும் கூறப் படுகிறது. தர்ம சாஸ்திரங்கள் கூறும் உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடுகளில் இயமங்களும் நியமங்களும் அடங்கும். இயமங்கள் என் பதில் அகிம்சை, சத்தியம், தூய்மை, புலனடக்கம், பொறுமை, சாந்தி, தானம் என்பன வும் கூறப்பட்டுள்ளன.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"** என்ற வள்ளுவர் வாய் மொழி புருடார்த்தங்களின் பயனை எடுத்து விளக்குகின்றது. அறம் என்பது தர்மம் எனப் பொருள்படும். இந்து ஒருவன் கடைப்பிடிக்க வேண்டிய மேலான ஒழுக்கம் மற்றும் கடமைகளைக் குறிக்கும். ஆன்மீக விடுதலைக்கு வழிசமைக்கும் உயர் சாதனம் அறமாகும்.

தாயின் கட்டளை தெய்வ வாக்காக ஏற்கப்படுவதை மகாபாரதம் விளம்புகின் றது. தர்மம், அதர்மம், நல்வினை, தீவினை, முற்பிறப்பு மற்றும் மறுபிறப்பு ஆகிய வற் றுக்கு ரிதமே மூலகாரணமாகும்.

அரசனே தர்மத்தின் காவலன் என்ற கூற்று காணப்படுகின்றது. அரசன் நீதி தவறு மிடத்துத் தண்டம் என்ற வடிவில் தர்மம் அவ னையும் சுற்றத்தையும் நாட்டையும் அழிக் கும் எனக் கூறப்படுகின்றது. பொய் வதந்தி பரப்புதல், அரசனது குதிரை, யானை முத லியவற்றைத் திருடுதல் போன்ற குற்றங் களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கின் றது. சிலப்பதிகாரத்தில் "அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாகும்" எனக் கூறப்படு கின்றது. இவ்வாறு இந்துப் பண்பாடு வளம் பெற தர்மம் அடிப்படையாக இருந்து வந்துள்ளது.

பக்தியே மேலான ஒழுக்கம் எனக் கூறப்படுகின்றது. அறநெறியே தவநெறி. அதுவே தலைசிறந்த வாழ்க்கை நெறி என்ற போதனையை மையமாகக் கொண்டது. புன் னெறியதெனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து நவையறுக் காட்சியை நல்குவது கந்தபுராணம்

"எவ்வெப்போது அறத்துக்கு அழி வும் அதர்மத்துக்கு ஆக்கமும் எய்துமோ அவ்வப்போது நான் என்னை விளக்குகின் றேன். நல்லாரைக் காக்கவும் பொல்லாரை அழிக்கவும் அறத்தை நிலை நாட்டவும் நான் யுகந்தோறும் தோன்றுகின்றேன்". என்று கீதை கூறுகின்றது. சுயநலக் கருத்தும் சுய நலப்பற்றும் அறவே துறந்து கடமைகளைச் செய்வது அவசியம் போன்ற ஒழுக்க நெறி கள் கீதையில்கூறப்பட்டுள்ளன.

கல்வி அறிவும், ஒழுக்க வளர்ச்சியும் ஒன்றாக சேர்ந்து வளரக்கூடிய ஒரு குடும்ப சமூக அமைப்பு எமக்குத் தேவை. ஆன்மீக நோக்கில் தனிமனித ஒழுக்கம் எதைப் பேசு கிறது?

1. பார்வையில் ஒழுக்கம்

ஒரு கனிவான பார்வை துயரங்களை விரட்டிவிடும். ஒரு அன்பான பார்வை உடைந்த உறவுகளை இணைக்கும். ஒரு ஆறுதலான பார்வை தனிமையை விரட்டி விடும்.

2. சிந்தனையின் ஒழுக்கம்

நமது இதயம் நல்ல சிந்தனைகளால் நிரம்பியிருக்கும் போது நமது செயல்களும் நல்லவையாய் மாறிவிடுகின்றன. எனவே சிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனையின் ஒழுக்கம் மிக மிக முக்கியமான தாகும்.

3. செயல்களின் ஒழுக்கம்

நமது செயல்களால் அன்பினை வெளிப் படுத்த வேண்டும். அப்போது நமது செயல் கள் ஒழுக்கமானவையாய் மாறிவிடும்.

4. வார்த்தைகளில் ஒழுக்கம்

அன்பாகப் பேசுபவர்கள் உறவைக் கட்டி எழுப்புகின்றார்கள்.

ஒழுக்கமாய் வாழ வேண்டும் எனும் சிந்தனையே ஒரு மாற்றத்திற்கான முதற் படி. அதற்கு கடின உழைப்பும், உறுதியான மனமும் அவசியம். தனிமனித ஒழுக்கம் தனி மனிதனை நேராக்கும். குடும்பங்களை சீராக்கும். சமூகத்தை வளமாக்கும் நாட்டை நலமாக்கும்.

நாம் ஒவ்வொருவரும் சில கடமை களை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

1. தினமும் சூரியன் உதிப்பதற்கு முன்பு படுக்கையில் இருந்து எழ வேண்டும்.
2. காலையில் நீராடி தூய ஆடை அணிந்து தவறாமல் இறைவழிபாடு செய்ய வேண்டும்.
3. காலை மாலை இரு நேரமும் நெய் விளக் கேற்றி நைவேத்தியம் செய்து வழிபாடு செய்வது மிகவும் நல்லது.
4. உரியமந்திரங்கள் சொல்லி வழிபடுங்கள்.
5. நெற்றியில் திருநீறு குங்குமம் அணியா மல் இருக்கக்கூடாது.
6. தினமும் புராண இதிகாச தேவார திவ் விய பிரபந்தம் உள்ளிட்ட சமய நூல் களை படிக்க வேண்டும்.
7. வீட்டில் குறிப்பிட்ட இடத்தில் தினமும் தியானம் பழக வேண்டும்.
8. சமய சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும்.
9. மாதத்துக்கு ஒரு தடவையாவது வீட்டில் நாம சங்கீர்த்தனம் செய்வது அல்லது சிறப்பு வழிபாடுகள் செய்யலாம்.
10. தினமும் ஆலயம் செல்ல வேண்டும். முடி யாதவர்கள் வாரத்துக்கு ஒரு தடவை யாவது ஆலயத்துக்கு சென்று இறை வழிபாடு செய்ய வேண்டும்.

இவையெல்லாம் நம் வாழ்வை மேம் படுத்தும்.

எனவே நல்ல விதமாக வாழ ஒழுக்க மும் நல்ல சிந்தனையும் பரந்த நோக்கமும் தான் வேண்டும்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலாலன்**
**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**

## யாழ் விருது 2019

27ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய, சமூக ஒருமைப்பாடு : திருமந்திரத்தினூடான ஒரு வாசிப்பு

தி.செல்வமனோகரன்
விரிவுரையாளர்
சைவசித்தாந்தத்துறை
இந்துக்கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சைவபக்தி இலக்கியங்களுள் பல்வகைமையான காரணங்களால் தனித்த அடையாளத்தைப் பெறுவது திருமந்திரமாகும். இறைபுகழ், சமயம் மற்றும் மெய்யியல் சிறப்புக்கள், பக்திமை என ஒற்றைப் பரிமாணத் தளத்தில் பல பக்தி இலக்கியங்கள் அமையத் திருமந்திரமோ எவ்வகையளவுக்குள்ளும் தனித்தடக்க முடியாத பல்வகையான கருத்தியல்களை உள்ளடக்கிய பெருநூலாகத் திகழ்கிறது. அதன் இயங்கியல் தளம் பல சமாந்தரக் கோடுகளின் வழியாய் அமைந்துள்ளது. முரண் விடயங்களை ஒருங்கே கட்டமைத்து அவற்றால் விளைகின்ற நன்மை தீமைகளை - உயர்வு தாழ்வுகளை விவாதிக்கின்றது. அதேவேளை அவற்றை விவாதத்தின் அமைப்பியலில் கட்டமைக்காமல் அருகருகே வைப்பிட்டு விட்டு நகர்கிறது. தன் கருத்தியலைத் தெளிவுற உரைக்கின்ற அதேவேளை முடிபுகளை அறிபவனிடமே - அறிய விரும்புபவனிடமே விட்டுவிடுகிறது.

திருமந்திரம் கூறும் கருத்து நிலைகளை கட்டுரையின் வசதி கருதி இரண்டாகப் பிரித்து நோக்கலாம்.

1. உலகியல் சார்ந்தவை
2. ஆன்மிகம் சார்ந்தவை

உலகியல் சார்ந்தவை எனக் கருதும் போது வாழ்வியற் புலத்தை செம்மையாக்கக் கூடியதும் வினையியல் சார்ந்த நல்லுணர்வுகளை ஏற்படுத்தும் வகையாய் அமைந்துள்ளவையுமே இதனுள் உள்ளடக்கப்படுகின்றன. அரசு, அந்தணர் ஒழுக்கம், அறம், அன்பு, கல்வி - கல்லாமை, செல்வம் நிலையாமை - தானச் சிறப்பு, நடுவு நிலைமை, நல்குரவு, வான்சிறப்பு என்பன முன்மொழியப்படுகின்றன. அரசும், சமய குருவும் தத்தம் ஒழுக்கத்தின் வழி ஒழுகி அறம் செய்யும் திறவரோடு கூடி வாழவேண்டும். ஏனெனில் அறம் செய்வார் யாரென இறைவன் அறிவான் என்கிறார் திருமூலர். மேலும் அன்பு, அறம், நடுவுநிலை முதலான அறங்களை யாவரும் கடைப்பிடிக்க வேண்டும். கேள்வி கேட்டமைதல், கல்வி, தானம், புலால் மறுத்தல் முதலானவை அறத்தின் பாற்படுத்தும் கல்லாமை, கீழ்நிலைப் படுத்தும். இளமை, உடல், செல்வம் என்பன நிலையற்றன. உயிரும் உடலில் நிலையற்றது் ஆதலால் கொலை, களவு, காமம், கள்ளுண்ணல், பொய் போன்ற இழிவு தருவன விடுத்து நல்லன செய்தல் வேண்டும் இதன்வழி அறம் ஓங்கும் வான்சிறக்கும் என்கிறார்.

மனிதவாழ்வியல் மேம்பாடு என்பது அறத்தின் பாற்பட்டது.

**"இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந் தருமஞ் செய் யாதவர் தம்பால தாகும்"**

**"அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந் திறம் அறியார்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அறத்தை அறஞ்செயான் திறமும் அறன் செய்வான் திறமும் என்பவற்றினூடு உரைக் கிறார்.

சமண, பௌத்த சமயங்கள் பற்றிய குறிப்பேதும் நேரடியாகக் கூறாத திருமூலர் அவற்றிடமிருந்து தன் சமூக, சமய மரபு களுக்குத் தேவையான வலிதான விடயங் களை உள்வாங்குகிறார். அவை முன்வைக் கின்ற பஞ்சசீலங்களான கள்ளாமை, கள் ளுண்ணாமை, பொய்யாமை, பிறன்மனை நய வாமை, கொல்லாமை என்பவற்றை முதன் மையான அறங்களாகக் கையாளுகிறார். கொல்லாமை, புலால் மறுத்தல் என்பவற்றை முதன்மையறங்களாகக் கூறி அகிம்சையை முதன்மைப்படுத்துகிறார். பெரியாரைத் துணைக் கோடலும் இவை சமூக நல்லிணக் கத்தை ஏற்படுத்தவல்ல வலிதான மனங் களை ஏற்படுத்த வல்லன. சமூக அக்கறை யும் ஒருமைப்பாடும் பொது நிலைப்படுத்தத் தக்கவையாக இவை அமைகின்றன. அற வாழ்வியல் சமயப்பொறை, அகிம்சை, சகிப் புத்தன்மை என்பவற்றைத் தரவல்லதாய் அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். திருமந்திரத்தில் இடம்பெறும் அந்தகாசுரன் வதம், தக்கன் செருக்கழித்தல், பிரமன் தலை கொய்தல், சலந்தரன்வதம், முப்புரம் எரித்தமை, கஜாசுரவதம், காலனை உதைத் தல், காமனை எரித்தல் முதலான தொன்மக் கதைகளைக் கூறித் தவறிழைத்தவர்களை இறைவன் தண்டிப்பான், ஆதலால், தவறு செய்யாதீர் என உளவியல் தளத்தில் நின்று எடுத்தாளுதல் சுட்டியுரைக்கத் தக்கது.

அவைதிக சமயங்கள் துறவை வற்புறுத்தின. நிலையாமையே வாழ்க்கை என்றன. இதற்கு மாற்றான குரலாக "மண் ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்றும் எம் இறைவனே "பெண்ணில் நல்லாளொடும் இருந்தான்" என்றும் சம்பந்தர் இல்லற வாழ் வுக்கு முதன்மையளித்தார். திருமூலர் ஒரு படி மேலே சென்று "உடலை ஓம்புவார் உயிரை ஓம்புவார்" என்பதோடு உடலிச்சைக்கும் அதன் வழியான விருத்திச் செயற்பாட்டுக்கு மான ஒழுக்கவியலை எடுத்தியம்புகிறார். வாழ்வின் பரிணாமத்தை உலகியல் சார் பௌதிக இயக்கத்தினூடாக முன்வைக்கி றார். தாம்பத்திய உறவு, மரபுரிமைப் பண் புகள், குழந்தைகளின் பால் நிலைத் தீர்மானம் பற்றிய கருத்துக்கள், கருவுறு தல், உடற்கூற்றியல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை எடுத்துரைக்கிறார். இதனூ டாகச் சமூகத்தில் ஆரோக்கியமான குடும்ப உறவு, திருப்தியான மனநிலை, ஆரோக்கிய மான குழந்தைப்பேறு என நீள்கின்ற மகிழ்வு வாழ்வியற் புலத்தை வள முடையதாக்கும். மனிதர் மனங்களில் வன்மங்களை ஏற்படுத் தாது தடுக்கும். குடும்ப ஒருமைப்பாடு சமூக ஒருமைப்பாட் டுக்கு வழிசமைக்கும்.

இந்நூல் உரைக்க முற்படும் சமயம் சைவம்,

**"தேர்ந்த அரனை அடைந்த சிவநெறி**
**பேர்த்தவர் உன்னில் பெயர்ந்த பெருவழி**
**ஆர்த்தவர் அண்டத்துப் புக்கஅருள் நெறி**
**போந்து புனைந்து புணர்நெறி யாமே"**

என்பதன் வழியும் சைவம் சிவமுடன் சம்பந்த மாகுதல் பற்றியும் சைவமே வீடுபேற்றுக் குரிய பெருவழி என்றும் கூறுவதனூடாக இது தெளிவாகிறது. அச்சைவத்தை நிலை நிறுத்த அவர் பயன்படுத்தும் மொழி தமிழ்

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"** ன் கிறார். திருமந்திரம் சைவசமய நூல் அது இந்திய மண்ணில் நிலவிய சைவப் பிரிவுகளைப் பற்றி விவாதிக்கின்றது. குற்றங் குறைகளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைகளைப் பற்றி அலசி யாராய்கிறது. புற சமய தூஷணம் பகுதியில் அது ஆறு சைவப் பிரிவுகளைப் பேசுகிறது. அதேவேளை அவை யெவையெனப் பட்டியற்படுத்தவில்லை. அவற்றை உட்சமயங்களாக உரைக்கிறது.

**"ஒன்றது பேரூர் வழியா றதற்குள**
**என்றது போல இருமுச் சமயமும்**
**நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்**
**குன்று குரைத் தொழு நாயையொத் தாக்களே"**

என்கிறது. சமயங்கள், அவற்றின் பிரிவுகள் பலவாயினும் அவை சுட்டும் பரம்பொருள் ஒன்றென்கிறார். தான் நம்புகின்ற சைவத்தை உயர்வுநவிற்சியில் உரைக்கிறார். ஆக, சைவசமயி ஒருவரின் சுயவிமர்சனமாகவே இது அமைகின்றது. அதேவேளை பிற சமய வியலாளர்களைப் போல் ஏனைய சமயங் களான சமண, பௌத்த, உலோகாய்த, ஆசிவக, வைணவ சமயங்கள் உள்ளிட்ட வற்றை நிராகரணம் செய்ய முற்படவில்லை.

மாறாக கால, தேச, வர்த்தமானத் துக்கு ஏற்ப சைவசமயத்தை புதுக்கியும் திருத்தியும் உரைக்கின்றார். வேதம் பொது என்றும் ஆகமமே சிறப்பு என்றுங் கூறுகிறார். ஆகமங்கள் 28 என்கிறார். திருமந்திர தந்திரங்கள் ஆகமசாரமாகத் திகழ் கின்றன. ஆகம மரபு வழிநின்று சைவத்தை சுத்தசைவம், அசுத்தசைவம், கடுஞ் சுத்தசைவம், மார்க்கசைவம் எனப் பிரிநிலைப்படுத்தி விளக்குகின்றார். அவற் றின் தனித்த அடையாளங்களை எடுத் துரைக்கின்றார். சாதாரணமனிதனும் இறை வனை அடையமுடியும் என்பதை சரியா, கிரியா, யோகா, ஞானா மார்க்கங்களின் வழி - அவரவர் தகுதிக்கு அல்லது பக்கு வத்துக்கேற்ப விடுதலைக்கான வழி கிடைக் கும் என நம்பிக்கையூட்டுகின்றார்.

புறசமய தூஷணம் எனும் பகுதி பிற சமயங்களை நிராகரணம் செய்து தூஷிக்க வில்லை. வலிந்து அவற்றைத் தாக்கவு மில்லை. சைவத்துள் காணப்படும் பிரிவினை கள், அவற்றின் பிறழ்வு நடத்தைகள், சமூ கத்துடனான ஒவ்வாத்தன்மை என்பவற் றையே கண்டிக்கின்றார். இப்பகுதி ஒரு உள்ளகப் பார்வையாகவும் சுயவிமர்சன மாகவுமே அமைந்துள்ளது. உட்சமயம் எனும் பகுதியும் சிவபெருமானின் பெருமை யுரைத்து அறுவகைச் சைவநெறிகளை கடிந்து உண்மை நெறியினை எடுத் துரைக்கிறார். ஆக பிற சமூகத்தவரையோ, பிற சமயத்த வரையோ தூஷிக்காமல்- விமர்சிக்காது சைவர்களையே விமர்சிப்பது என்பது "உன்னைத் திருத்திக் கொண்டால் சமூகம் தானாகவே திருந்தும்" எனும் செய் தியை உரைப்பதாகவே எண்ணத் தோன்று கின்றது.

இறைபக்தி வழிநிற்கும் சாதாரண மானுடர்கள் உருவ வழிபாட்டின் வழியேயே ஒழுகுவர். அதன் வழி திருக்கோவில், தீர்த் தம், இறைவனின் பெருமை, திருவுரு, லிங்கம் அதன் வகைமை முதலான விடயங்களை முன்வைத்து அவர்களை நெறிப்படுத்து கிறார்.

நல்ல குருநாதனே சிவதர்சனத் துக்கு வழிகாட்டி என்கிறார். சிவவேடத் துக்கு முதன்மையளித்து ஆன்மீகப் பெரியார் களை மதித்தல் தொடர்பாக உரையாடப் படுகிறது. அனைத்துச் சமயத்தவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய யோக வழிபாட் டுக்கு திருமூலர் முதன்மையளித்திருப்பது சுட்டியுரைக்கத்தக்கது. ஆறு ஆதாரங்கள், அட்டாங்க யோகமுறை, அதன் வழி ஏற்படும் ஞானம் என்பன மிக விரிவாக விளக்கப்படு கின்றன. இன்றைய பின்காலனிய, உலக மய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதற் சூழலில் யோகாவை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்திருப்பதன் அடிப்படை உடல் நலமும் மன நலமும் அதன் வழி ஏற்படும் என்பது மட்டுமன்று. சமூக, சமய ஒருமைப்பாட்டுக்காகவுமே என்பது கவனிக்கத் தக்கது.

மேற்சுட்டியவற்றின் வழி சமூக, சமய ஒற்றுமையை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டவர் திருமூலர்.

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர் நினைந் துய்மினே"**

எனும் பாடல் இதனை மிகவும் தெளிவுறுத்துகிறது. யாவர்க்குமான - யாவரதுமான குரலாக இப்பாடல் ஒலிப்பது குறிப்பிடத்தக்கது. சாதிய, சமய வேறுபாட்டுக் கெதிரான குரலை இப்பாடல் ஓங்கி ஒலிக்கிறது. பேதமற்ற வாழ்வை - நல்லிணக்கத்தை முன் வைக்கிறது. நிலையாமையே எல்லாச் சமயங்களும் - கருத்து முதல்வாதிகளும் முன் வைக்கும் முக்கிய கோட்பாடு. அதன் வழியேயே தமது கருத்துருக்களை வளர்த்தெடுப்பர். திருமூலரும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் இதற்குச் சமாந்தரமாக நிலையற்றவற்றின் வழிவரும் நிலைபேறாம் தன்மையை - விடயங்களைக் கூறவுந் தவறவில்லை.

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞானஞ் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த் தேனே"**

செய்யும் ஊறு என்றாகிவிடும். மறுதலைவாதமாக தன்னுடலுக்கும் பிறருக்குஞ் செய்யும் நன்மை தன்னுடலுக்கும் தனக்கும் (உயிர்க்கும்) செய்யும் நன்மை என்றாகிறது.

**"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்**
**உடம்பினுளே உத்தமன் கோயில் கொண் டான் என்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"**

என்னுடம்பினுள் இறை இருக்கு மெனில் பிறர் உடம்பினுள்ளும் இறையிருப்பான் என்றாகின்றது. ஆகவே பிறர்க்குச் செய்யும் ஊறு என்பது இறைவனுக்கே செய்யும் ஊறு என்றாகிறது. ஆகவே பிறருக்குத் தீமை செய்யாதே நன்மையே செய் அது உன்னை இறையருளுக்குப் பாற்படுத்தும் என்கின்றார்.

ஆகவே திருமூலர் நன்மை - தீமை, ஏற்புடையது - ஏற்புடமையற்றது, சுயவிமர்சனம், யாவரும் எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உலகியல் மரபுகளையும், ஆன்மிக மரபுகளையும் முன்வைக்கிறார். அகப்பொருளியலின் வழி காமமாக உரைக்கப்பட்ட உடலின்பம் வாழ்வியற் கடமையாக, இல்லற வாழ்வின் பேறாக முன் வைக்கப்படுவது ஒருமைப்பாட்டின் மைல்கல் எனலாம். ஆன்மிகம் என்பது ஆன்ம விசாரணை தன்னையும் பிறரையும் அறிதல் அதனூடாக இறைவனை அறிந்தடைதல் என்பர். இதனைப் பல வழிகளில் பிறர் சுதந்திரத்தைப் பாதிக்காத வகையிலும் காய்தலுவத்தல் அற்ற சுயவிமர்சனத்தினூடும் முன்வைக்க முயன்றுள்ளார். யோகம், பக்தி, ஊறு செய்யாமை முதலான வழிமுறைகளை உலகந் தழுவிய ரீதியில் - யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் முன்வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மூலரின் சமய, சமூக ஒருமைப்பாடு பற்றிய பிரக்ஞை சமய, சமூக வரலாற்றில் முக்கியமானது. இன்றைய சூழலில் சமய, சமூக ஒருமைப்பாடு பற்றிய கருத்துரு விரிவுற முன்வைக்கப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது.

உலகில் வாழும் மனிதர்கள் நிலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், நிறத்தால், குணத்தால், மொழியால், தன்தன் சூழலால் பிறிநிலையுடையவர்களாக உள்ளனர். மேற்படி அம்சங்கள் அவர்கள் கொண்டிருக்கக் கூடிய நம்பிக்கை, சமயம், தத்துவம், பொருளாதாரம், கலை, பண்பாடு, மனவியல் போன்ற அனைத்து அம்சங்களையும் தீர்மானிக்கும் காரணிகளாக இருப்பதனால் மனிதர்களிடையே பாகுபாடு எழுகின்றமை தவிர்க்க இயலாததாக உள்ளது. ஆனால் அனைவரும் மனிதர்கள் மானுடம் உள்ளவர்கள் மனிதப் பண்பியற் கூறுகள் பொதுவே ஆதலால்பிரிவினையை மீறிய ஒருங்கிணைந்த பொறையுடைய வாழ்வியலை நோக்கி நகர முடியும். இன்றைய பின்காலனியச் சூழலில் தொழில் நுட்பமும் விஞ்ஞானமும் மனித வாழ்வியலை ஆக்கிரமித்துள்ளன. மனிதர்களை கூட்டுணர்விலிருந்து தனியன்களாகப் பிரித்துப்போட்டுள்ளன.

இத்தகைய சூழலில் சமூகத்தினதும் சமயங்களினதும் ஒருமைப்பாடும் அதன் வழியான சமூக நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் தவிர்க்க முடியாத அவசிய தேவையாகிவிட்டது. காலந்தோறும் ஏற்படும் சமய, சமூக பிரிவினைகளினின்றும் மக்களை மீட்டெடுக்க பலர் தனியாகவும் கூட்டாகவும் முயற்சித்து வந்துள்ளனர். ஒருமைப்பாடு பற்றிய உள்ளுணர்வே சமய அனுபவத்தின் அதியுச்ச நிலையாக சமய வியலாளர்களால் உரைக்கப்படுகிறது. எல்லாச் சமயங்களும் உண்மையானவை ஆனால் அவற்றைப் பின்பற்றுவோர் உண்மையிலிருந்து விலகிவிட்டார்கள். இவை யாவும் ஓரிறைவனை நோக் கியே பயணிக்கின்றன. சமூகத்தின் ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சரிவர வழி நடத்து வானாயின், சமயப் பொறையொடும் பிறர் துக்கத்தை தன் துக்கமாக உணரும் நிலையையும் பெறுவானாயின் சமய சமூக ஒருமைப்பாடு - நல்லிணக்கம் இயல்பில் நிகழ்ந்துவிடும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் குரல் பலகீனமாகி பிறர் துயரப்படுவதில் மகிழ்வும் அல்லது அது பற்றிய அக்கறையற்ற சுயநலமும் இன்று மேலோங்கியுள்ளது.

இச்சூழ்நிலையில் திருமந்திரம் முன்வைக்கின்ற நல்லிணக்கம் சார்ந்த இக்கருத்துக்கள் முக்கியமானவையாகின்றன. சமயவாதத்துக்கப்பால் நின்று திருமூலர் ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறார்.

**"ஆன சமயம் அது, இது நன்று எனும்**
**மாய மனிதர் மயக்கம் அது ஒழி**
**கானம் கடந்த கடவுளை நாடுமின்**
**ஊனம் கடந்த உருவது ஆமே"**

எனக் கூறுகின்றமை கவனிப்புக் குரியதாகும். சமயங்களுக்கிடையிலான ஒரு மித்த கருத்து நிலைகள், இலக்குகள் என்பவற்றை முன் வைத்து சாதி, சமய, பேதங்களைக் கடத்தல் பற்றியும் வாழ்வியல் அறம், அதன் பயன் பற்றியும் கூறும் கருத்துக்கள் இன் றைய சூழ்நிலையில் சிந்திக்கத்தக்கவை. குண்டலினி யோகத்துக்கு திருமந்திரம் வழங்கும் காத்திரமான விபரிப்பு சமூக நல்லிணக்கத்துக்கான சிறந்த வழி என்றே கூறமுடியும்.

**உசாத்துணை நூல்கள்**


❖ அருளம்பலவாணன்.சு., (1967), திருவாசக ஆராய்ச்சி முதலாம் பாகம், ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்
❖ இராமநாதன்.ப., (2001), திருமந்திரம், கழக வெளியீடு, சென்னை.
❖ சிதம்பரனார்.ஏ., துடிசைக்கிழார், (1969), திருமூலநாயனார் வரலாறு, திருமந்திரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
❖ Narayana Ayyar,C.V., (1935), Origion and Early History of Saivism in South India, University of Madras.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகும் முருகனும்

- கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்
இலண்டன்

**"அழகு இயற்கை அளித்துள்ள பேறு**
**அழகு இன்பமான கவர்ச்சி.**
**அழகு இயற்கையின் பிறப்பு**
**அழகு தெய்வங்களின் அருளாட்சி**
**அழகே உண்மை சத்தியம்**
**அழகே தெய்வம்**

- கீட்ஸ்

அமிழ்தினும் இனியது நம் அன்னை தமிழ் மொழி. முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் என்றும் பொலிவாய்ப் பொலிந்து நிற்பது, செந்தமிழ். தொன்மைச் சிறப்புடன் தகைசால் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்ட செம்மொழி, பைந்தமிழ் மொழி.

**"அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல் பிற இலக்கியங்களில் இல்லை"** என்பது அறிஞர் கூற்றாய் உள்ளது.

"ஆங்கிலம் - வணிகத்தின் மொழி
இலத்தீன் - சட்டத்தின் மொழி
கிரேக்கம் - இசையின் மொழி
ஜெர்மன் - தத்துவத்தின் மொழி
ஃபிரெஞ்சு - தூதின் மொழி
இத்தாலி - காதலின் கனிவான மொழி."
தமிழ் - பக்தியின் மொழி -

(தந்தை) தனிநாயக அடிகளார்

என்றெல்லாம் வாயார வாழ்த்திப் பேசியவர், மொழி ஆய்வாளர் சார்லஸ் ரீட் என்ற கிரேக்கத்துச் சிந்தனையாளர்.

நம் அன்னை தமிழை - அருந்தமிழை எவ்வாறு வழங்குவது? "ஞால மளந்த மென்மைத் தெய்வத்தமிழ்" எனத் தமிழைத் "தெய்வத் தமிழ்" என வாயார வாழ்த்திய பெருமகனார், சேக்கிழார் பெருமான். தமிழைத் தெய்வத்தோடு தொடர்புபடுத்திக் கூறும் தனிச்சிறப்பு தமிழ் மொழி ஒன்றனுக்கே உண்டு.

**"சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே – அதைத்**
**தொழுது படித்திட்டி பாப்பா."**

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவ தெங்கும் காணோம்."**

**"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்**
**இங்கமரர் சிறப்புக் கண்டார்."**

- பாரதி

என்றெல்லாம் நேற்றைய எட்டயபுரத்து கவிஞன் வரை தமிழின் மேன்மையை, அருள் திறனை வாழ்த்தாதவர்கள் வையகத்தில் எவருமிலர்.

இத்தகைய செம்மொழியின் சிறப்பினை - தொன்மையினை படம் பிடித்துக் காட்டும் காலக் களஞ்சியமாய் இன்றைக்கு துலங்குவன பாட்டும் தொகையும் கீழ்க் கணக்குமாகும். அவற்றுள் 'பாட்டு' எனக் குறிக்கப்படுவது பத்துப்பாட்டே. அஃது அருமையும் பெருமையும் வாய்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து**
**சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்**
**ஒருபது பாட்டும்."**

என்று பாராட்டி மகிழ்பவர், நச்சினார்க் கினியர் என்ற உரையாசிரியர்.

அந்தப் பத்துப்பாட்டினுள் முதலாவதாய் எண்ணப் பெறுவது 'திருமுருகாற்றுப் படை' என்னும் நூலாகும்.

பத்துப்பாட்டினுள் முதலில் காப்பாய் அமைந்தது, திருமுருகாற்றுப்படை. எட்டுத் தொகை நூல்கள் பலவற்றுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற புலவர் பெருமகனார் தாம் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பாடியுள்ளார்.

அது போலப் பத்துப்பாட்டிற்குக் கடவுள் வாழ்த்து எனத் தனியாக ஒன்று இல்லை. திருமுருகாற்றுப்படையையே பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்தாய் - காப்புச் செய்யுளாய் அமைந்துள்ளது என்னும் கருத்து சிந்திக்கத்தக்கது.

மேலும், அந்த நூல், சைவத்திரு முறைகள் பன்னிரண்டினுள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப் பெற்றிருக்கும் பெருமையே அந் நூலின் தனிச் சிறப்பாகக் கருதப்படுகிறது.

திருமுருகாற்றுப்படை முழுக்க முழுக்க இயற்கையின் எழிலையும், பேரழகினையும் அந்நிலத்தில் குடிகொண்ட செவ்வேளின் சிறப்பையும் வியந்து பேசும் பேரிலக்கியம்.

பழந்தமிழர் இயற்கையோடு இணைந்த இன்ப வாழ்வினைக் கொண்ட பெருமக்கள்.

அதிகாலைப் பொழுதின் செவ்வானத்தினின்று வெடித்துப் பூபாளம் பாடிப் புறப்பட்டு வருகின்ற செங்கதிரோனின் பேரழகு கடற்பரப்பில் ஓங்கி உயர்ந்து, தாழ்ந்து, தரையில் தவழ்ந்து, குதித்து எழுந்து வீழும் அலைகளின் அற்புத அழகுக் காடுகளின் மையிருட்டு மரங்களின் ஊடே வீசி வரும் ஒளிப்புனல் போன்ற இயற்கையின் வற்றாத வடிவழகு ஆகியவற்றைத் தங்களது உறவாய் அருட்பாலிக்கும் இறையாய் வழிபட்டு வந்த பெருமக்கள், பைந்தமிழர்கள்.

அன்றைய பழந்தமிழனின் வாழ்வியல் நாகரிகச் சுவடு இன்றைக்கும் அழியாது காக்கப்படுவதாலேதான் எட்டயபுரத்துக் கவிஞனை,

**"காக்கை, குருவி எங்கள் ஜாதி – நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
**நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்கக்களி யாட்டம்."**

- பாரதி

எனப் பாட வைத்தது. இத்தகைய உயரிய செந்நெறியில் - இயற்கையில் இறைவனைக் கண்டு தலைப்படும் அருள்நெறியில் முதல் களம் அமைத்து அருள்பாலித்தவர், நக்கீரர்.

குறிஞ்சி நிலத்துத் தலைவனை - குமரனை - முருகனை - அழகின் வடிவாக - முருகியலின் முழுப் பிழம்பாக - செந்தமிழ் நாயகனாக - தமது காவியத்தின் நாயகனாக வைத்துப் பாடிப் பரவசப்பட்டவர், புலவர் நக்கீரர்.

இவ்வையகத்தின் தோற்றத்தையும், இயக்கத்தையும் ஆய்ந்து தெளிந்த நம் முன்னவர்கள் அவ்வியக்கத்திற்கு மூலாதாரமாய் நிற்கின்ற முழு முதற் பொருளைக் கண்டறிந்து வாழ்த்தி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



**"ஆதியு மந்தமு மில்லா அருட்பெருஞ் சோதியாய்"**

**"சொரூப ஞானச் சுடரொளி தீபமாய்"**

எனப் எப்பொருளையும் தம்மோடு இணைத்து அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக் கும் பேரருளைக்கண்டு வாழ்த்தி வணங் கினர், பைந்தமிழர்.

பரந்து விரிந்து கிடந்த பேரழகிற்குப் பைந்தமிழர் 'முருகு' எனத் திருப்பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

'முருகு' என்னும் சொல் அழகு. இளமை, தெய்வ நலம், மணம் என்னும் பொருள்களைக் குறிக்கும். 'முருகு' என்னும் திருப் பெயரோடு 'அன்' எனும் விகுதி சேர்ந்து 'முருகன்' என் னும் திருப்பெயர் அமைந்தது. இயற்கையின் பேரெழில் அழிவில்லாதது நிறம் மாறாதது ஆக்கத்திற்கும் அழிவிற்கும் காரணமாய் நிற்பது மணம் மாறாதது எல்லாப் பொருள் களையும் கடந்து தனித்து நிற்பது.

எனவேதான், அழியா அழகினை 'முருகு' என்று வணங்கி மகிழ்ந்தனர். எனவே, குறிஞ்சி நில மக்கள் தங்கள் வழிபடும் தெய்வ மாய் முருகனை வழிபட்டு வந்ததாய்த் தெரி கிறது.

'இயக்கம்' என்ற ஒன்று நிகழுமானால், 'இயக்குபவன்' என ஒருவன் கட்டாயம் இருந் தாக வேண்டுமல்லவா? எனவேதான், வைய கத்தின்கண் காணப்பெறும் ஒவ்வோர் அணு விலும் உள்ளீடாய் நீக்கமற நிறைந்திலங் கும் அழகின் தோற்றத்தில் - முருகியலின் வெளிப்பாட்டில் - முருகனைக் கண்டு உணர்ந் தனர், பைந்தமிழர்.

இத்தகைய மூலப்பொருளை - முழு முதற் பொருளை - ஒல்காப்புகழ் தொல்காப்பியர் 'கந்தழி' எனக் குறித்துக் காட்டினார் நமது தொல்காப்பியத்தில்.

'கந்தழி' என்பது, கந்து அழி எனப் பிரிந்து பற்றுக் கோட்டினை அழிப்பது எனப் பொருள்படும். ஒவ்வோர் அணுவினுள்ளும் உள்ளீடாய் விளங்கி, மனிதனுக்குப் பற்றுக் கோடாகி, தனக்கொரு பற்றுக்கோடாய் யாது மின்றி, ஆதியும் அந்தமுமில்லாத அருட் பெருஞ் சோதியாகவும், ஞானச்சுடராகவும், தீயாகவும் எப்பொருளையும் தன்னுள் தோன்றி அழிப்பதுமாகிய ஓர் ஒப்பற்ற சக்தி யாகவும் எது நின்று விளங்குகின்றதோ, அதுவே 'கந்தழி' என்ற பரம்பொருள் என்று விளக்கம் தந்தவர்கள், நம் முன்னவர்கள்.

இதனைத்தான் நக்கீரனார் "கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வைப்பு" என்பார். கையால் புனையப் பெறுவது செயற்கை கையால் புனையப் பெறாத்து இயற்கை. மலை, ஆறு, கடல், காடு, ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் முதலியனவெல்லாம் இயற்கையின் வடிவங்கள்.

இவற்றிடத்தே காணப்படுகின்ற கொள்ளை அழகும் வடிவங்களும் வனப் புகளும் மாறாதவை - குன்றாதவை - தெய்வத் தன்மை வாய்ந்த முருகியற் பரம்பொருளின் தோற்றம் என்பதைத்தான் தொல்காப்பி யனார் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்றார்.

**"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**

**பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு."**

என்று நக்கீரர், உதய சூரியனது உதய நாழி கையின் பேரழகினை வியந்து பாடுவார். நற்றமிழ் வல்ல நக்கீரனார் வாக்கால், அன் றைய மக்கள் இளஞாயிற்றுப் பொலிவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



கண்டு போற்றியதன் காரணமாய், இள ஞாயிற்று வழிபாடே முருக வழிபாடு என்றும், இளஞாயிற்றின் வழிபாட்டிலிருந்தே முருக வழிபாடு தோன்றியது என்றும் தெரியக் கிடக்கின்றது.

நக்கீரன் வழிமொழிந்த இளஞாயிற் றின் பொலிவை உவமையாய்க் கொண்ட தனையே, தொல்காப்பியர் முருகியற் பரம் பொருளை - முருகனை 'சேயோன்' என்னும் சுந்தரச் சொல்லால் சொல்லிச் சென்றுள்ளார்.

உலகம் உய்ய உருக் கொண்டு வந்த தெய்வம் முருகப் பெருமான். கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார்கூட,

**"அருவமு முருவு மாகி
அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரம்மாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலக முய்ய."**

- கந்தபுராணம் : திருவவதாரப் படலம் - 92

என்பார் கந்தபுராணத்தில்.

'சேயோன்' என்னும் திருப்பெயர் 'சிவந்தவன்' என்னும் பொருளைக் குறிப்பது. முருகப்பெருமானின் திருப்பெயர்களுள் இதுவும் ஒன்று.

உலகத்து உயிர்கள் அனைத்தும் மகிழ்ந்து, வாழ்வாங்கு வாழக் கதிரவன் கிழக்கே உதயமாகிறான். அவன் மேரு மலை யைச் சுற்றி வலம் வருகின்றான். உலகத்து மக்கள் அவனைக் கைகூப்பித் தொழுகின் றனர் புகழ்கின்றனர்.

அவனைப் போன்ற செம்மையான ஒளியுடையவன், சேயோன். தன்னைச் சார்ந் தவர்களைக் காப்பாற்றுகின்ற பேரழகை யும் வலிமையையும் உடைய பாதங்களை யுடையவன் தன்னைப் பகைத்தவர்களைத் தேய்க்கின்ற இடி போன்ற பெரிய கைகளை யுடையவன் என்றெல்லாம் புலவர் பெரு மக்கள் முருகனை வாழ்த்திப் பாடியுள்ளனர். "முருகன் எவன்?" முருகுடையவன் முருகன். முருகன் என்றால் என்ன? முருகு என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல். அப்பல பொருள்களுள் சிறப்பாய்க் குறிக்கத்தக் கன நான்கு. அவை மணம், இளமை, கடவுட் தன்மை, அழகு என்பன. இந்நான்கு பொரு ளடங்கிய ஒரு சொல்லால் பண்டைத் தமிழ் மக்கள் முழுமுதற் பொருளை வழங்கியது வியக்கத்தக்கது.

"இயற்கை மணமும், மாறா இளமை யும், எல்லாப் பொருளையும் கடந்தொளிருந் தன்மையும், அழியா அழகும் இறைவனிடத் தில் இலங்குவது கண்டு, அப்பொருள்கள் முறையே உறைதற்கு இடம் பெற்றுள்ள முருகன் என்னுஞ் சொல்லை, அவ்விறை வனுக்குப் பழந்தமிழ் மக்கள் சூட்டியதன் திறமையை நோக்கின் அவர்களது கூர்த்த மதி புலனாகிறது" (முருகன் அல்லது அழகு, பக்கம் 1) என்பார், திரு.வி.க.

குறிஞ்சிக்கிழவனாய்ப் போற்றி வழங்கப்படுகின்ற செவ்வேள், சிவபெரு மானே. அவன் இளையோனாய் உலகம் உய்ய வந்துதித்த பெருமான் என்னும் ஒரு கருத்தும் உண்டு. இது புராணக் கருத்து.

"சூர் முதலை இறுப்ப அரனே இளை யோன் அளவற்றால்" என்பது தணிகைப் புராணம் தருகின்ற செய்தி. "ஆறுமுகன் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் பேதகம் அன்றாய்" என்பது கந்த புராணம். களப்பிரயம் ஒளியே ஆதலால் முருகன், சுப்பிரமணியன் எனும் பெயர் முரு கனுக்கு உரியதாயிற்று.

உலகத்தின் ஒவ்வொரு பொருள் களிடத்தும் ஒவ்வோர் சிறப்பு இருக்கிறது. அது ஒவ்வோர் காலத்தும் தோன்றுகிறது. வேனிற் காலத்து மாலைப் பொழுதிலே முல் லையும் மல்லிகையும் பூக்கின்றன. தென் றிசைத் தென்றல் அவற்றின் மணத்தினை நமக்குத் தெவிட்டாது அள்ளித் தருகிறது. கார் காலத்துக் காயாவும் கொன்றையும் நம் கண்ணிற்கும் மூக்கிற்கும் பேரின்பத்தைத் தருகின்றன.

முதுவேனில் பருவத்திலே மாவும் பலாவும் வாழையும் ஒன்றிணைந்து முக் கனிச் சுவையை நாவிற்கு நல் விருந்தாய்த் தருகின்றன. இந்த நுகர்ச்சிகள் என்றும் எக்காலத்தும் உண்டாவதில்லை. துன்ப நுகர்ச்சியாய்ப் பிறந்த மனிதனோ எல்லா நலங்களையும் எப்போதும் எய்த விரும்பு கின்றான். கிடைத்த நலம், மாறாமல் மடியா மல் எந்நாளும் மகிழ்வளிப்பதாய் இருக்க வேண்டுமென்பதொன்றே அவனது விளை வாய் இருக்கின்றது.

ஆனால், இயற்கையின் விளை யாட்டு எதிர்மறையாகத்தானே இருக்கிறது! இதனைக் கண்ட மனித மனம் தத்தளிக் கிறது, தடுமாறுகிறது. ஆதலால் என்றும், எங்கும் நலங்குன்றாத பொருளைத் தேடத் தொடங்குகிறது. இராப்பகலாய் எங்கெங் கேயோ தேடுகிறது. தேடிக் கண்ட பொருள் கள் யாவும் நிறைந்தனவாய் இல்லை.

புறத்தே தேடிக் காணாத அவன் தனக்குள்ளே தேடத் தொடங்குகின்றான். ஒரு பொருள் உள்ளும் புறமும் ஒத்து விளங் குவதை உயிராவணமிருந்து உற்று நோக் கிக் காண்கின்றான். அப்பொருளிடத்தில் கண்ணிற்கு, காதிற்கு, மூக்கிற்கு, நாக்கிற்கு, உடலுக்கு, உள்ளத்திற்கு, உயிருக்கு நலம் பயக்கும் பேராற்றல் ஒரு சேர அமைந்திருக் கிறது.

அது ஓர் இன்பமலை. கற்கண்டுப் பதுமை. வெல்லப்பிள்ளையார்.

அத்துணைப் பண்பும் நிறைந்த அந்த மனிதன் அறிந்து அறிந்து அனுபவிக் கின்றான். அதுவே தானாய், ஏகனாய் இருக் கிறான். அனுபவ முதிர்ச்சி, அறிவதைப் பலகால் சொல்லியும் அனுபவிக்க வேண்டும் என்ற வேட்கையை - ஆசையைத் தூண்டு கிறது. முருகு, முருகன் என்ற பெயர்களை தான் கண்டு இரசித்த - ஆராதித்த அழகிற் குச் சூட்டி மகிழ்கின்றான்.

'முருகு' என்பது ஒரு பண்பு. உயர்ந்த பண்புகள் யாவும் முருகு என்ற ஒரு பொதுச் சொல்லால் வழங்கப்பெறும். முருகன் அப் பண்புகள் பலவற்றையும் தன்னகத்தே உடைய பரம்பொருள்.

பண்புக்கும் பண்பிக்கும் உள்ள ஒற்றுமையால் பண்பின் பெயர் பண்பிக்கும், பண்பியின் பெயர் பண்புக்கும் அமையலா மல்லவா? இறை, தலைமை அது பண்பு. அதனை உடையவன் இறைவன். இறையும் இறைவனும் ஒரு பொருளைத்தான் உணர்த்து கின்றன. அதுபோலே முருகனே முருகு, முருகே முருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணின் காட்சிக்கு அழகாக, காதிற்கு மனங்குளிரும் நாதமாக, நாவிற்குத் தெவிட்டாத தெள்ளுதேன் சுவையாக, நாசிக்கு நறுமணம் வீசும் சுவாசமாக, உடலுக்கு இனிய பரிசமாக, கருத்திற்குச் செறிவான விருந்தாக, உயிருக்கு உணர்வாக, இப்படி எல்லாமுமாக இருப்பவனே செவ்வேள் முருகன். முருகு என்றவுடனே,

**"முருகமர் பூமுரன் கிடக்கி"**

**"மோட்டின முல்லைமொய் மலர்க்கான**
**முருகுலந் தெதிர்கொள நடந்தான்"**

**"முருகு மெய்ப்பட்ட புலத்தி போல"**

**"முருகயர்ந்து வந்து முருவாய் வேலன்"**

**"படையோர்க்கு முருகயா"**

**"முருகேர் பாணியும்"**

**"முருகு பொறையுயிர்க்கும் மொய்யூங்காவில்"**

**"முருகு வாய்படுத்துண்டளி மூலம்"**

போன்ற நூற்றுக்கணக்கான இலக்கியச் சொல்லாடல்கள் நற்றமிழ் முருகனை வியந்து பாடுகின்ற செய்திகளை நம் தமிழ் இலக்கியங்களில் பார்க்க முடிகின்றது. பைந்தமிழ் இலக்கியங்களிலில்லாது திவாகரம், பிங்கலத்தை நாமதீபநிகண்டு முதலியவற்றைப் புரட்டிப் பார்த்தால் - அழகு, பூந்தட்டு, கள், எலுமிச்சை, எழுச்சி, அகில், முருகு என்னும் வாத்தியம் என்ற பல்வேறு பொருள்களோடும் பேசப்படுகின்ற உயரிய சொல்லாக இருப்பதையும் பார்க்க முடிகின்றது.

இவ்வண்ணம் பல பொருள்களை உணர்த்தும் ஆற்றல் முருகு என்ற ஒரு சொல்லுக்கு உளதாதல் போல அழகு முதலிய பண்புகளனைத்தையும் ஒரு சேரத் தாங்கி, எப்பொழுதும் மக்கள் மனத்தைப் பிணித்து, சாவா மூவாப் பேரின்ப வடிவாய் நிற்பதொரு பேரருட் சக்திதான் முருகன்.

**"பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்**
**காக்கின்ற பேதை கொங்கை**
**விரும்பும் குமரனை மெய்யன்பினால்**
**மெல்ல மெல்ல உள்ள**
**அரும்பும் தனிப்பர மானந்தம்**
**தித்தித்து அறிந்த அன்றே**
**கரும்பும் துவர்த்துச் செந்தேனும்**
**புளித்து அறக் கைத்ததுவே."**

- கந்தரலங்காரம்

தமிழ் - உடல், கொள்கை - உயிர், தமிழ்மொழியாகிய உடலில் தொன்றுதொட்டு உயிர்க் கொள்கையாக அருளாட்சி செய்து வருபவன் செந்தமிழ் முருகன். எங்கெல்லாம் தமிழ் இருக்கின்றதோ அங்கெல்லாம் அழகுப் பதுமையாய் - அருங்காட்சியாய் - அற்புத திருவாய் அமர்ந்திருப்பவன் பைந்தமிழ் முருகன். தமிழில் வைதாரையும் வாழ வைக்குமளவு தமிழிடத்து கந்தவேளுக்கு அளவற்ற அன்புண்டு என்பது நிதர்சனமான உண்மை.

அகத்தியருக்குத் தமிழறிவித்த பெரும் பெருமை முருகனுக்கே உரியது. அவன் செந்தமிழ் பரமாச்சாரியன். தலைச் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தவன். தமிழைச் சுவைத்து உரை நலம்பல மாண்ட வித்தகன். தெய்வமாய் - திருவருவாய் - திருவுருவக் காட்சி தந்ததோடு மட்டுமல் லாது - மண்ணிலே மனிதனாக, உக்கிர குமாரப் பாண்டியனாக உதித்து, செந்தமிழ் நாட்டை ஆண்ட பெருந்தகையான்.

"கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடேன்" என்ற வசைமொழியையும் பொருட்படுத்தாது, முட்டைப்பேரைத் தாங்கி செந்தமிழ்க் கவிதையைக் கேட்டுக் களித்த எளியோனுக்கும் எளியோன். இத்துணையும் செந்தமிழுக்கும் செவ்வேளுக்கும் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றைக்குமே நீங்காத நீண்ட கால உறவு. அழகு அற்புதமானது. அருளானது, ஆரா திக்கப்படுவது. எல்லோருக்கும் பொதுவானது. அதனைப் போலவே செவ்வேள் எல்லோருக்கும் பொதுவானவன் உயர்வான வன உரிமையானவன் உறவானவன் எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவானவன் முருகன் ஒருவனே. அழகுக்கு அழகு செய்யும் பரம் பொருள் மானிட இனத்திற்கே பொது வானது.

மணி மாலையுள் ஒன்றுபடுத்தி ஊடுருவி நிற்பது நூல். அதுபோலே முருகு என்ற சொல் உணர்த்தும் பல்வகைப் பண்பு களிலும் ஊடுருவி நிற்கும் பொதுப்பண்பு அழகு. கண் வழியாக்க் கருத்துகள் பதிவது மட்டும் அழகானது.

புலன்கள் வழியாகப் புத்தியில் புகுந்து மனிதனை உயர்த்துபவை யாவும் அழகே. மனத்தைப் பிணித்து மாட்சியளிப்பவை யாவும் அழகே. என்றும் மாறா இன்ப நிலையில் நிறுத்துவன எல்லாம் அழியா அழகே. அழகை வேண்டிக் கொண்டவர்கள் - கண்டுகளித்தவர்கள் முருகனைக் கண்ட வர்களே.

நம்முடைய இயல்பிற்கும் நாம் கண்டு மகிழும் பொருளுக்கும் இடையே ஒரு பொருத்தமான தொடர்பு இருக்குமேயா னால், நாம் அழகை உணர்கிறோம் என்று சொன்னவர் ஷெல்லி.

We are conscious of beauty when there is a harmonious relation between something in our nature and the quality of the object which delights us.

- Shelle

**"என்றும் இளயாய் அழகியாய்"**

**"மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி"**

என்றெல்லாம் இலக்கியப் புலவர்களே போற்றுகின்றனர்.

இயற்கைகள் யாவும் செயற்கை யானது. தேவர்களை அமரர்கள் என்று அழைக்கிறோம். அமரர் மரணமில்லாதவர். தேவர்களுக்கு மரணமில்லையா? அவர் களுக்கு அமரர் என்பது உபசாரப் பெயர். அதுபோலே காடு, கடல், மலை, வயல் முத லானவை மாயையின் செயற்கைப் பொருள் களே. இவற்றை இயற்கை என்பது உபசாரம். ஆனாலும் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் உலக வழக்கு. எனவே, நாடும் உலகத்தை ஒட்டி நாமும் வழங்குவோம்.

இயற்கை கண், காது, மூக்கு, மனம், புத்தி முதலிய காரணங்கள் வழியாக களிப் பைத் தருகின்றது. இறைவன் முருகனோ கருவி சாதனங்களைக் கடந்து நின்றும், எல்லை கடந்து யாவர்க்கும் இன்பமளிப் பவன். இயற்கைகள் வாயிலாக நாம் எய்தும் இன்பம் சிற்றின்பம். இறைவனிடத்துப் பெறுவது பேரின்பம்.

இயற்கை இறைவனது உண்மையை உணர்த்தும் சாதனம். இயற்கையின் எழிலி லிருந்து இறைவன் உண்மையை அனு மானிக்கிறோம். இயற்கைப் பொருட்கள் "நாங் கள் இறைவனால் படைக்கப்பட்டு உங்களு டைய போகத்திற்காகவும், சுகத்திற்காக வும் அமைந்துள்ளோம்" என்பதை அறிவிக் கின்றன. இறைவனே எல்லா காரியத்திற் கும் பரமகாரணன் என்பதைக் காட்டு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால், இயற்கை இறைவனாகாது. இயற்கை அறிவற்ற சடப் பொருள். இறைவன் சித்தப் பொருள். ஆதலால் இயற்கையைப் படைத்த இறைவனே அதைவிட மேலான வன் அவனே தலைவன்.

**"இறைவனை, நான் அகத்தில் அழகுடன்**
**விளங்க அருள்வாய் என்று**
**வேண்டிக் கொள்கிறேன்."**

என்று கசிந்துருகி வேண்டிக் கொண்டவர் கிரேக்கத்துத் தத்துவஞானி சாக்ரடீஸ்.

இயற்கையை நாம் நேரில் அறிகின் றோம், உணர்கின்றோம், சுவாசித்து மகிழ்வு கொள்கின்றோம். ஆனால், முருகனை அறிய முடிவதில்லையே? ஆதலால் இறை நிலையை இறைமையை இறைவனை இல்லாத பொரு ளாகக் கூறிவிடலாமோ?

காற்று கண்ணுக்குத் தெரிவ தில்லை - தென்றலின் சுகம் தெரிகிறதே! ஆக அது இல்லாத பொருளா? ஊறுணர்ச் சியைக் கொண்டு உள்ள பொருளாக உணர் கிறோம் அல்லவா?

ஆகாயம் காணப்படாத ஒன்றுதான். கண்ணுக்கும், காதுக்கும், மூக்கிற்கும், நாக் குக்கும், புலனாகக்கூடிய மண்ணும், நீரும், காற்றும், கனலும் எங்கே இருக்கின்றன? வளர்கின்றன? என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தோமானால், இவற்றிற்கெல்லாம் இடம் தந்து நிற்கின்ற ஒன்று ஆகாயம் என்று தானே உணருவோம்? அதுபோலே கருவி, காரணங்களால் அறிய முடியாமை பற்றி இறைவன் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

**"சித்தத்துள் தித்தித்தல்"**
**"எண்ணிய எண்ணிய எய்துவித்தல்"**
**"இடையூறு நீக்கல்"**
**"என்றும் மாறாத இன்பத்தில் இருத்துதல்"**

போன்ற பயன்பாடுகளைக் கொண்டு அப் பயன்களைத் தரவல்ல பரம்பொருளுண் மையை அறிவது நமது கடமையல்லவா?

அறிபவன் என்றைக்கு உண்டா னானோ அன்றைக்கே அறியப்படும் பொரு ளும் இருந்துதானே ஆக வேண்டும் என்பது விதி. அதனாலேயே அறிவும் அறியப்படும் பொருளுமாய் இருக்கின்ற பரம்பொருளை "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்" என்று அழைத்த மணிவாசகப் பெருமானது பரம்பொருள் உண்மையை அறிந் திட வேண்டும். அங்ஙனம் அறியாதவன் அறியாதவனே! அங்ஙனம் அறிந்து கொண்டே இருந்தால் முருகன் கருத்துப் பொருளாக நம்முடன் என்றும் உள்ளூறைவதையும், வழிகாட்டுவதையும், நாம் உணருவோம். இந்த உணர்வே தியானம். இதுவே "உள்ளக் கிழியில் உருவெழுதும்" ஒப்பற்ற முறை. "நினைப்பவர் கோயிலாகக் கொண்டவன்" என்ற சைவசித்தாந்த உபதேச வாக்கியமும் இந்த பேருண்மையைத்தான் நமக்குத் தெரி விக்கிறது. ஆக, தமிழ் மக்களது வழிபடும் தெய்வம் செவ்வேள் என்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம்" என்ற மணிவாசகரின் திருவாசக அடியினை முன்னிறுத்திய உரையாடல்

கலாநிதி S.முகுந்தன்
முதுநிலை விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்.

## ஆய்வுச் சுருக்கம்

திருவாசகமானது சிவபுராணம் முதற் கொண்டு அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பாடற்பகுதிகளில் இருநூற்று ஐம்பத்தாறு பாடல்களைக் கொண்டது. மணிவாசகர் பெற்ற சிவானுபூதியின் வெளிப்பாடாக அமைந்த ஞானப்பனுவலாக இது கருதப்படுகிறது.

சமயமெய்யியல் அனுபவத்துக்கு அப்பால் மணிவாசகர் என்ற தனியனின் வாழ்க்கைச் சுவடுகளை ஆய்வுசெய்ய முனைவோருக்குரிய அகச்சான்றுகளும் திருவாசகத்தில் விரவியுள்ளன. எவ்வாறாயினும் இவ்வகச்சான்றுகள் மூலமும் மணிவாசகரின் வாழ்க்கைச்சுவடுகளில் இழையோடியுள்ள சர்ச்சைகளைத் தீர்க்கமுடியவில்லை. ஏனெனில் தேவார முதலிகளைப் போலன்றி மணிவாசகரின் வாழ்வும் காலமும் ஆய்வாளர்களுக்கு அவிழ்க்க முடியாத புதிர்களைத் தொடர்ந்தும் வழங்கியவண்ணம் உள்ளது. மறைமலையடிகள், பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை, க.வெள்ளைவாரணனார், பேராசிரியர் டி.டி.சித்திலிங்கையா, பேராசிரியர் அ. சிவலிங்கனார், பேராசிரியர் நா. சுப்பிரமணியஐயர், முனைவர் சோ. ந. கந்தசாமி, மு. பு. சேஷையர், திருமலைக் கொழுந்துப்பிள்ளை ஆகியோர் மணிவாசகரின் வாழ்க்கைச்சுவடுகள் தொடர்பிலான காத்திரமான ஆய்வுகளில் ஈடுபட்டோராக அறியப்படுகின்றனர். இவர்களுடைய ஆய்வுகளின் செல்நெறியானது பெரும்பாலும் இரண்டு தளங்களில் பயணித்துள்ளது.

மணிவாசகரின் காலம் :

**தேவார முதலிகட்கு முற்பட்டது**

**தேவார முதலிகட்கு பிற்பட்டது.**

எனினும் குறித்த இந்த ஆய்வுக்கட்டுரையானது மணிவாசகரின் காலம் குறித்த சர்ச்சைகளில் கவனம் செலுத்தவில்லை.

**"மிண்டிய மாயாவாதம் எனும்**
**சண்டமாருதம் சுழித்து அடித்தார்ப்ப..."**

என்று தொடரும் திருவாசகத்தின் போற்றித் திருஅகவல் அடிகள் குறித்தே அது கவனம் கொள்கிறது.இங்கே "மாயாவாதம்" என்ற சொல்லாடலால் மணிவாசகர் சுட்டவிழைவது ஆதிசங்கரரின் அத்வைதத்தையே என்பது பலருடைய ஏகோபித்த முடிவாகும். முற்கூறிய ஆய்வாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. எவ்வாறாயினும் "அத்வைதம்" சைவபக்தி இயக்கம், பௌத்தம் ஆகிய மூன்று தளங்களில் தென்னிந்திய வரலாற்றுச் செல்நெறியைச் சீர்தூக்கி நோக்கும் போது "மாயாவாதம்" என்ற சொல்லால் அத்வைதமே சுட்டப்பட்டது என முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள இயலாது. பௌத்த மெய்யியற் பிரிவுகளின் விகசித்த மேலாண்மையை விமர்சிக்கும் விதமாக மணிவாசகர் இச்சொற்றொடரைக் கையாண்டிருக்க இட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டு. இதற்கான சாத்தியப்பாடுகளை அடையாளப்படுத்தும் வகையிலேயே இக் கட்டுரை பயணிக்கிறது.

திறவுச் சொற்கள்:- **மாயாவாதம், மணி வாசகர், சூனியவாதம், பௌத்தம் உலகாயதம்.**

## அறிமுகம்

சைவசமய இலக்கியங்களுள் திருவாசகம் தனித்துவமானது. அதனைப் பாடியவரான மணிவாசகரும் ஏனைய திருமுறை ஆசிரியர்களை விடவும் தனித்துவமானவர். அவருடைய வரலாறும் காலமும் இற்றைவரை ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்பட்டும் தீர்வு கிட்டப்பெறாதவை, புதிர்த் தன்மை நிறைந்தவை. அவர் தேவார முதலிகட்கு முற்பட்டவரென்றும், பிற்பட்டவரென்றும் இரண்டு விதமான கருத்தாடல்களில் நடைபெறும் ஆய்வுப்போர்கள் முடிந்ததாயில்லை. மணிவாசகர் தனது திருவாசகத்தின் எந்த ஒரு இடத்திலும் தேவாரமுதலிகளைப் பற்றி நினைவுகூரவில்லை. மறுதலையாகத் தனது திருப்பள்ளியெழுச்சியின் ஐந்தாம் பாடலில்,

**"கேட்டறியோம் உனைக் கண்டறி வாரை"**
எனக் குறிப்பிட்டு அதிரவைக்கிறார்.

தேவாரமுதலிகள் இறைவனோடு உரையாடிய செய்திகளை இவர் கேட்டறியாதவர் போலப் பேசும் இந்தத்தொனி ஏற்படுத்தும் குழப்பம் ஒருபுறமிருக்க திருநாவுக்கரசர் தனது திருவாரூர் திருப்பதிகத்திலும், திருப்பூவணத் திருத்தாண்டகத்திலும் மணிவாசகரின் வரலாற்றோடு தொடர்புடைய இரண்டு முக்கிய செய்திகளைப் பதிவுசெய்துள்ளமை மணிவாசகரின் வரலாறு குறித்த சர்ச்சைகளுக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளது.

அவையாவன இவர் பொருட்டு இறைவன்

1) நரியைப் பரியாக்கிய செய்தி
இதனை "நரியைக்குதிரை செய் வானும்" என்று திருநாவுக்கரசர் சுட்டியுள்ளார்.
(திருநாவுக்கரசர் தேவாரம்:4.6.2.)

2) இறைவன் பிட்டுக்கு மண்சுமந்த செய்தி
"மணியார் வைகைத் திருக்கோட்டில்
நின்றதோர் திறமுந் தோன்றும்"
(திருநாவுக்கரசர் தேவாரம்:6.18.9.)

இவைமட்டுமன்றித் திருவாசகத்தில் பயின்று வந்துள்ள தமிழ், அதில் பயன்படுத்தப்பட்டுள்ள தரவுக் கொச்சகக் கலிப்பா யாப்புவடிவம் என்பனவும் ஆய்வாளர்களிடையே இவர் வாழ்ந்த காலம் குறித்த பல முரண்பாடுகளை ஏற்படுத்த ஏதுவாயின.

எவ்வாறாயினும் இக்கட்டுரையின் நோக்கம் அவர் வாழ்ந்த காலம் குறித்த சர்ச்சைகளின் நீட்சியாக அமைவதல்ல. ஆயினும் இது அவ்வாராய்ச்சிகளுடன் தொடர்புபட்ட ஒரு பிரதான துருப்புச்சீட்டுடன் தொடர்புபட்டதாக அமைகிறது. அது யாதெனில் அவர் திருவாசகத்தில் எடுத்தாண்டுள்ள,

**"மிண்டிய மாயாவாதம் எனும்
சண்ட மாருதம் சுழித்தடித்து ஆர்த்து.."**
(போற்றித் திருவகவல்:அடி54-55) என்ற பாடலடிகளேயாகும்..

பெரும்பாலும் விவரண ஆய்வாக அமையும் இக்கட்டுரையில் வரலாற்றியல் ஆய்வு முறையியலும் ஒப்பாய்வு அணுகுமுறையும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் கையாளப்பட்டுள்ளன. அவசியமானபோது தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

திருவாசகத்தின் போற்றித்திருவகவலில் இடம்பெறும் இத்தொடரில் "மாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம்" என்று சுட்டப்பட்டது ஆதிசங்கரரின் அத்வைதமே என்ற சிந்தனை ஆய்வுலகில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள் ளது. ஆனால் இக்கட்டுரையோ இவ்விடயத் தினையே ஆய்வுப்பிரச்சினையாகக் கருதி சில விவாதங்களை முன்வைக்கத் தலைப் படுகிறது.

ஆதிசங்கரர் கி.பி. 788 - 820இல் வாழ்ந் தவர். எனவே மணிவாசகரும் ஏறக்குறைய ஆதிசங்கரருக்குச் சமகாலத்தவராக அல் லது சற்றுப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவ ராக அறிஞர்களால் முன்மொழியப்படுகிறார்.

ஆயினும் இக்கருத்தமைவில் விவா தத்துக்குரிய சில விடயங்கள் உள்ளன.

- ❖ ஆதிசங்கரர் அத்வைதக் கோட்பாட் டைப் பரப்ப முயன்றபோது அவருடன் மிகக் கடுமையாக வாதிட்டவர்கள் பௌத்தர்களேயாவர். அவர் தன் னைச் சைவவிரோதியாக அடையாளப் படுத்தவில்லை. மாறாக அவரிடம் சைவச்சார்பிருந்தது.
- ❖ அத்வைதம் தன்னைத் தத்துவார்த்த ரீதியாக நிலைநிறுத்திய போது அதனை மூர்க்கமாகத் தமிழகத்தி லிருந்து எதிர்க்கக் கிளம்பியவர்கள் இராமானுஜர் உள்ளிட்ட ஸ்ரீ வைண வசித்தாந்திகளே அன்றிச் சமகாலத் தில் வாழ்ந்த சைவதத்துவவாதி களன்று.
- ❖ மாறாக அக்கால சைவதத்துவ வாதி களிடையே வேதாந்தம் தொடர் பிலான மென்போக்கை அவதானிக்க முடியும். எடுத்துக்காட்டாகத் திரு மூலரின் திருமந்திரப்பாடல்கள் பலவற் றில் அத்வைதச் சார்பு துலங்கியது.

**"நீ அது வானாய் என நின்ற பேருரை"**

(திருமந்திரம்:பா.2577)

தேவாரமுதலிகளிடத்திலும் வேதாந்தந் தொடர்பில் நேர்முகச்சிந்தனையே இனங் காணப்பட்டது.

**"தாயும் யானும் ஆகின்ற தன்மையானை"**

எனத் திருத்தாண்டகப் பாடலில் அப்பர் பெருமான் சுட்டுவதும்

அச்சோப்பதிகத்தில் மணிவாசகர் "சிவமாக்கி எனையாண்ட அத்தன்" எனக் குறிப்பிடுவதும் இங்கு நோக்கற்பாலது. இது வேதாந்தமல்ல சிவசமவாதம் என்றும் கருத் துரைக்கலாம். அதுவும் தவறில்லை. ஆனால் வேதாந்தத்துக்கு எதிரான மனோநிலை சைவபக்தி இயக்கத்தினரால் முன்வைக் கப்படவில்லை என்பதனையே இங்கு சுட்டிக் காட்டக் கட்டுரையாளர் முயல்கிறார். இதனைச் சைவபக்தி இயக்கத்தின் தலைவராகிய திருஞானசம்பந்தரும் தனது திட்டைத் திருப் பதிகத்தில் சிவனை "வேத வேதாந்தன்" என்று சுட்டியமையின் மூலம் தெளிவாக உணரலாம்.

ஆகவே தென்னகத்தைப் பொறுத் தவரையில் அத்வைதத்துடன் சைவபக்தி இயக்கத்தினர் பகைமை பாராட்டவில்லை மாறாக மென்போக்கையே கொண்டிருந் தனர் என்பது தெளிவாகிறது. ஆதிசங்கர ரும் ஞானசம்பந்தரைத் "திராவிடசிசு" எனப் போற்றியிருக்கிறார்.

"6 ஆம்நூற்றாண்டு முதல் பக்தியி யக்கத்தில் மூழ்கியிருந்த தமிழகத்தில் சங்கரருடைய அத்வைதம் கால்கொள்ள வில்லை. சங்கரரும் தமிழகத்துக்கு வரவே யில்லை. பௌத்தத்தை எதிர்ப்பதற்காகவே தர்க்கசாத்திரத்தை நன்குபயன்படுத்திய அவரின் கொள்கை சைவ வைணவ சமயங் கள் அதிகம் பரவாதிருந்த வடநாட்டில் பிர பல்யம் அடைந்தது." என்ற அ.ச.ஞானசம்பந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனின் கூற்றும் இவ்விடத்தில் மனங்கொள் ளற்பாலது. (ஞானசம்பந்தன் இஅ.ச:2007:252)

**தமிழகத்தில் அத்வைத எதிர்ப்புக் குரல்**

ஆதிசங்கரரின் திக்விஜயங்களின் பின்னர் அவருடைய சீடர்களால் அத்வைத தத்துவமானது பாமதிச்சிந்தனைப்பள்ளி, விவரணச் சிந்தனைப்பள்ளி என்ற இரு பெரும் சிந்தனாகூடங்களாக வளர்ச்சி பெற்றது. அது கி. பி. 13ஆம் நூற்றாண்டின் கடைக் கூறுகளிலேயே ஒரு செல்வாக்குப் பெற்ற மக்கள் இயக்கமாகத் தமிழகத்துக்குள் நுழைந்தது. குறிப்பாக வீரசைவத்துடன் இணைந்து விவரணச்சிந்தனைப் பள்ளிக் குரிய அத்வைதமானது வித்தியாரண்யரின் வழிகாட்டலில் அரச ஆதரவுடன் தமிழகத் துக்குள் மக்கள் இயக்கமாக நுழைந்தது. வித்தியாரண்யரே விஜயநகரப் பேரரசின் ராஜகுரு என்பதும் அவரால் இயற்றப்பட்ட விவரணப்பிரமேயசங்கிரகம் என்ற அத் வைதப் பனுவலே குறித்த விவரணச் சிந் தனைப் பள்ளிக்குரிய முதனூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இடத்தில் இருந்தே சித்தாந்த சைவம் அத்வைத எதிர்ப்புணர்வைப் பாரிய அளவில் வெளிப்படுத்த முற்பட்டது. சோழ சாம்ராஜ்ஜியத்தின் இறங்குதிசையில் அதா வது விஜயநகர அரசின் தோற்று வாயுடன் எழுச்சிபெற்ற கந்தபுராணம் மிகத் தீர்க்க மாக இந்த எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தி யுள்ளது எனலாம்.

கச்சியப்பர் தனது கந்தபுராணத் தைப் பாடியதற்கான நோக்கங்களில் தலை யாயது அத்வைத வேதாந்தத்தின் எழுச்சி யும் அதன் சமூகப் பயில்நிலையும் பெரும் நாசத்தையே விளைவிக்கும் என்பதனை வலி யுறுத்துவதற்கேயாகும். இதனைக் கந்த புராண ஆராய்ச்சி என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் பேராசிரியர் வை. இரத்தின சபாபதி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"சூரபத்மனை வேதாந்தப் பள்ளியில் பயிலும் நன்மாணாக்கனாகவும், அக் கொள்கையினைத் தனது வாழ்வில் அழுந் தப் பின்பற்றுவோனாகவும், படைத்துக் காட்டி இறுதியில் உறுதிப்பயனைப் பெற இக்கொள்கை அவனுக்குத் துணைபுரிய வில்லை என்பதனையும் கதைப்போக்கால் உணர்த்திச் சைவசித்தாந்த நெறியே பிற நெறிகளிலும் விழுப்பமானது என்பதனைக் கச்சியப்பர் வலியுறுத்துவார்"

(இராமலிங்கம்,நா:1989)

கந்தபுராணத்தில் அசுரகாண்டத் தில் இடம்பெற்றுள்ள சுக்கிரனுபதேசப் படலமும், மகேந்திர காண்டத்தில் இடம் பெற்றுள்ள சூரன் அமைச்சியற் படலமும் அத்வைதக் கருத்துக்களை அதிகளவில் கொண்டுள்ளன. (முகுந்தன், ச:2012: 64)

"தீதுசால் மனத்தேசிகன்" என்ற விரு துப் பெயருடன் சுக்கிரரை அறிமுகஞ் செய் கின்ற கச்சியப்பர் தொடர்ந்து வருகின்ற இரு பத்திரண்டு பாடல்களில் அத்வைத வேதாந் தத்தின் அடிப்படைகளை விளக்கியுள்ளார். இவ்விருபத்திரண்டு பாடல்களும் தூயமெய் யியல் நிலையில் அத்வைதத்தினைப் போதிப் பனவாகும். அதைத் தொடர்ந்து வருகின்ற ஐந்து பாடல்கள் உபதேசிக்கப்பட்ட அத் வைத அறிவை அசுரகுலத்திற்கேற்ற வகை யில் திறன் விருத்திக்குப் பிரயோகித் தலுடன் தொடர்புடையவையாக அமையப் பெற்றுள்ளன. எடுத்த எடுப்பிலேயே

**"பாசமென்றும் பசுவென்றும் மேதகும்**
**ஈசனென்றும் இசைப்பர் தனையெனப்**
**பேசல் மித்தை..."** (கந்தபுராணம்:2:10:24)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் காசிபர் மொழிந்த முப்பொருளுண்மையை சுக்கிராச்சாரியார் நிராகரிப்பதுடன் தனது அத்வைத உபதேசத்தினை ஆரம்பிக்கின்றார்.

**"பிறிதலை ஆவியும் தேசுமேவு சிவனும் ஒன்றாகுமே"**
-(கந்தபுராணம்:2:10:24)

என அப்பாடலின் இறுதி இரண்டு அடிகளில் சீவனும் சிவனும் அடிப்படையில் வேறானவை அன்று என்கிற அத்வைதத்தின் ஒருமைவாதத்தை வெளிப்படுத்திவிடுகிறார். தன்னைப் பிரம்மமாக உணர்கின்றவன், அனைத்து ஜீவராசிகளும் தானும் பிரம்மமும் வேறல்ல என்கின்ற அத்வைதஞானம் வாய்க்கப் பெறுகின்றவன் பிரம்மமாகவே ஆகிவிடுகிறான். எனவே பூதவிகாரங்களால் தோன்றுகின்ற சிறுமை, பெருமைகள் யாவும் அறியாமையால் விளைபவை. இதுவே அத்வைதத்தின் சமூகப் பயில் நிலைக்கான பிரதான சூட்சுமவித்தையாகும். சுக்கிரனுபதேசப் படலத்தில் அத்வைதக் கோட்பாட்டின் விளக்கம் நிறைவுறுகின்ற இறுதிப் பாடலாக அமையும் பின்வரும் பாடலில் இதனைச் சுக்கிராச்சாரியார் கூற்றாகக் கச்சியப்ப சிவாசாரியார் வெளிப்படுத்தியிருப்பது நோக்கற்பாலது.

**"சிறியரென்றும் சிலரை, சிலரை மேல்**
**நெறியரென்றும் நினைவது நீர்மையோ**
**இறுதியில் உயிர் யாவும் ஒன்றேயென**
**அறிதல் வேண்டும் அஃதுண்மையதாகுமே"-**
(கந்தபுராணம் :2:10:44)

ஏகான்மவாதத்தையும், மாயா வாதத்தையும் பேசிக்கொண்டும் சிவத்தைப் பரப்பிரம்மமாக உள்வாங்கிக் கொண்டும் தமிழகத்தில் சைவசித்தாந்தத்தினைப் புறந்தள்ளுமளவுக்கு மக்கள் இயக்கமாக மேற்கிளம்பிய அத்வைதிகளுக்கு "சூரனின்" முடிவைக் காட்டி நல்லறிவுச்சுடர் கொளுத்தலே கந்தபுராணத்தின் உள்ளாந்த நிகழ்ச்சிநிரல் என்பதை மறுப்பதற்கில்லை.
(முகுந்தன்.ச:2012:68.)

**திருவாதவூர்ச் சிவபாத்தியன்**

அவ்வாறெனில் மணிவாசகரின் காலம் சோழர் காலத்துக்குப் பின்செல்லுமா எனில் அதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. ஏனெனில் இடைக்காலச் சோழர்களில் கீர்த்தி மிகப்பெற்றவனாகிய முதலாம் இராஜ இராஜ சோழனுக்குச் சமகாலத்தில் வாழ்ந்தவரான நம்பியாண்டார் நம்பியினால் அவருடைய கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில் "திருவாதவூர்ச் சிவபாத்தியன்" என மணிவாசகர் தெளிவாக அடையாளங்காட்டப் பட்டுள்ளார். (சுப்பிரமணியன்.நா:2003:117)

அவ்வாறாயின், "மிண்டிய மாயா வாதம்" என மணிவாசகர் சுட்டியது எதனை என்ற கேள்வி மேலும் சிக்கலை ஏற்படுத்துகிறது.

**பௌத்த எதிர்ப்புணர்வு**

திருஞானசம்பந்தரைப் போலவும், திருநாவுக்கரசரைப் போலவும் புற சமயங்களுடன் இடையறாது மோதியவராக மணிவாசகரைச் சைவ இலக்கியங்கள் அடையாளப்படுத்துவதில்லை. ஆயினும் மணிவாசகர் தில்லையில் தங்கியிருந்தபோது பௌத்தரை வாதில் வென்றார் என்ற செய்தியை பெரும்பற்றப்புலியூர் நம்பி தனது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் பதிவு செய்துள்ளார்.

பரஞ்சோதிமுனிவர் தமது திருவிளையாடற்புராணத்தில் மணிவாசகர் இலங்கையிலிருந்து தில்லை வந்த புத்த தேரர்களுடன் 7 நாள் வாதிட்டு வென்றதுடன் இலங்கை மன்னனின் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேசவைத்தார் என்ற செய்தியை உரைத்துள்ளார். இதனைக் கடவுள்மா முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது திருவாதவூரடிகள் புராணத்தில் மிக அகலித்து புத்தரை வாதில் வென்ற சருக்க மாக நூறு பாடல்களில் அமைத்துள்ளார். திருவாசகத்தில் இது குறித்த அகச் சான்று கள் எதனையும் வெளிப்படையாக மணிவாச கர் குறிப்பிடவில்லை. ஆயினும் தர்க்க வாதங்களில் முன்னறிவு இல்லாத தன்னைப் பட்டிமண்டபம் ஏற்றி வாதிட வைத்த இறை யருட்சிறப்பைத் திருச்சதகப் பாடலில் பின் வருமாறு வியக்கிறார்.

**"கட்டறுத்தெனை ஆண்டு கண்ணார நீ**
**இட்ட அன்பரோ டியாவருங் காணவே**
**பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை"**

(திருச்சதகம்:பா.53.)

மேலும் மணிவாசகருக்குப் பௌத்தர்மேல் கடுமையான சீற்றம் இருந்தமையினைத் திருவாசக அகச்சான்றுகள் தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளன.

**"புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்**
**தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்க"**

(திருத்தோணோக்கம்:பா.6)

இங்கே புத்தம் என்று வருவதே பொருட் பொருத்தமுடையது. ஆனால் ஆவேசத்தினால் புத்தன் என ஏகவசனத்தில் சுட்டினாரோ என எண்ணத் தோன்றுகிறது.

**"புத்தன் புரந்தாதியர் அயன்மால் போற்றி செயும்**
**பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த அத்தன்"**

(திருத்தெள்ளேணம்:பா.16)

எனச் சிவத்தின் பரத்துவவிலாசத்தைப் பேசும்போதும் அவரது தாக்குதற் பட்டிய லில் முதற்பெயராகப் "புத்தன்" உள்ளமை நோக்கற்பாலது.

## தமிழ்நாட்டில் பௌத்தத்தின் ஆறு தத்துவப் பிரிவுகள்

பக்தி இயக்ககாலத்தின் ஆரம்பத் தில் பௌத்தம் தமிழகத்தில் ஆறு தத்து வப் பிரிவுகளாகப் பரவியிருந்தது. இதனைத் திருஞானசம்பந்தர் தனது திருவெழுகூற்றி ருக்கையில் பின்வருமாறு அடையாளங் காட்டியுள்ளார்.

**"ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்**
**ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை"**

(திருவெழுகூற்றிருக்கை:பா.8)

சௌத்திராந்திகம், வைபாடிகம், மத்யமிகம், யோகாசாரம், சௌத்திராந்திக யோகா சாரம், தாந்திரிக பௌத்தம் என்பவையே அவ்வாறு பிரிவுகளுமாகும்.

தனது பதிகத்தின் ஒவ்வொரு பத் தாவது பாடலிலும் பௌத்தத்தைக் கண் டிக்கத் தவறாத திருஞானசம்பந்தர் "மிண் டர், மிண்டு பேசும் தண்டர்", மிண்டு சமயத்தோர்" என ஒன்பது இடங்களில் பௌத்தத்தைக் குறிப்பதற்கு "மிண்டு" என்பதுடன் தொடர்புடைய சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

மணிவாசகரின் "மிண்டிய" மாயா வாதம் என்ற சொற்றொடரையும் இவ்விடத் தொருகால் நினைவூட்ட வேண்டியது அவசி யமாகிறது. நாகார்ச்சுனருடைய (கி.பி.2ஆம் நூற்றாண்டு) மத்யமிகம் எனப்படும் சூனிய வாதம் உலகை ஒரு மாயைத்தோற்றம் என் கிறது. திருஞானசம்பந்தர் தமிழ்நாட்டில் இருந்த சூனியவாதிகளைப் பின்வருமாறு அடையாளங் காட்டியுள்ளார்.

**"உண்டு இலை என்றே நின்றே"**

(சம்பந்தர் தேவாரம் :97)

**"பொருளுரை மருவழிய பொருள்களும் இல**
**திணமெனும் அவரொடு"**

(சம்பந்தர் தேவாரம் : 21)

அத்வைதம் "மாயாவாதம்" என இராமானுஜர் முதலியோரால் விமர்சிக்கப்படுவதற்கு வெகு காலத்துக்கு முன்பிருந்தே நாகார்ச் சுனரின் சூனியவாதம் (மத்யமிகம்) "மாயா வாதம்" என்ற பெயரால் வழங்கியிருக்கிறது. இதனை S.N.தாஸ்குப்தா தனது A History of Indian Philosophy என்ற தனது புகழ்பெற்ற பனு வலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



> the word māyā occurs only once in the Bṛhadāraṇyaka and once only in the Praśna. In early Pāli Buddhist writings it occurs only in the sense of deception or deceitful conduct. Buddhaghoṣa uses it in the sense of magical power. In Nāgārjuna and the *Laṅkāvatāra* it has acquired the sense of illusion. In Saṅkara the word māyā is used in the sense of illusion, both as a principle of creation as a śakti (power) or accessory cause, and as the phenomenal creation itself, as the illusion of world-appearance.

(DasGupta,S.N:1982:.470)

Vaman Sivaram Apthea என்பவரால் பதிப்பித்து வெளியிடப்பட்ட The Practical Sanskrit English Dictionary என்ற பேரகராதியிலும் "மாயாவாதம்" என்ற பதம் மத்யமிகத்தைச் சுட்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையினை S.N கந்தசாமி அவர்கள் தனது இந்திய தத்துவக் களஞ்சியத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

(கந்தசாமி, S.N:2003:219)

பிரஞ்ஞாபாரமிதை போன்ற பௌத்த தத்துவப் பனுவல்களில் ஐவகைக் கந்தங்களால் (உடற்கூறு + உளக்கூறு) காட்சி தரும் அனைத்துமே "மாயை" என்றும் சூனியம் என்றும் வழங்கப் பெறுகிறது. மேலும் பொதுவாகவே பௌத்த தத்துவப் பனுவல்கள் போலிப்பொருள், உருவெளி, திரிபுக் காட்சி முதலியவற்றை சுட்டுவதற்கு "மாயை" என்ற சொல்லைக் கையாளுகின்றன.

(DasGupta,S.N:1982:470)

பௌத்த தத்துவப் பிரிவுகளுக்குள் தத்துவார்த்தரீதியாகப் பலம்மிக்க கோட்பாடாகத் தமிழகத்தில் மேற்கிளம்பிய பிரிவு சௌத்திராந்திக யோகசாரமாகும். இது தேரவாதத்தின் சௌத்திராந்திகப் பிரிவையும் மகாயானத்தின் யோகசாரப்பிரிவையும் இணைத்து உருவான கூட்டுநெறியாகும்.

நியாசூத்திரத்தினைப் பௌத்த மெய்யியல் நோக்கில் உள்வாங்கித் தர்க்கவியலில் ஜெயிக்கமுடியாத ஜாம்பவான்களாக இப் பௌத்தப்பிரிவினர் தமிழ்நாட்டில் உலா வந்தனர். இவர்களின் பிதாமகராகக் கருதப்பட்டவர் "தர்மகீர்த்தி" எனும் தமிழராவார். இவர் திருஞானசம்பந்தருக்குச் சமகாலத் தவர்.

தர்மகீர்த்தியின் "நியாயபிந்து" எனும் பனுவல் பௌத்த தர்க்கவியலின் துருப்புச் சீட்டு என்ற பெருமைக்குரியது. ஐந்துறுப்புக் களைப் பயன்படுத்தித் துணிகின்ற முக்கூற்று அளவையியலில் எடுத்தமொழி, ஏது எனும் ஈருறுப்புக்களை மட்டும் பயன்படுத்த இயலும் என நிரூபித்துக்காட்டிய பெருமைக்குரியவர் இவரே.

**"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்**
**சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி**
**"மாதுக்கம் நீக்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்**
**சாதுக்கள் மிக்கீர் இறையேவந்து சார்மின்களே"**

(திருஞானசம்பந்தர் தேவாரம்:312)

என்றும்,

**"தடுக்கமரும் சமணரொடு தர்க்க சாத்திரத்தவர் சொல்**
**இடுக்கண்வரு மொழிகேளா தீசனையே ஏத்துமின்கள்"**

(திருஞானசம்பந்தர் தேவாரம்: 62)

எனத் திருஞானசம்பந்தர் தர்க்க சாத்திரத்தவராகச் சுட்டியிருப்பது தர்மகீர்த்தியின் சௌத்திராந்திக - யோகசாரப் பிரிவினரையே ஆகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மணிவாசகரின் திருச்சதகப் பாடலில் வரும் பட்டி மண்டபத்தை மீளநினைவு கூரலாம்.

**"கட்டறுத்தெனை யாண்டு கண்ணார நீறு**
**இட்ட அன்பரோடு யாவருங் காணவே**
**பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை**
**எட்டினோ டிரண்டும் அறியேனையே"**

(திருச்சதகம்:பா.53)

மணிவாசகர் குறிப்பிடும் "எட்டினோடு இரண்டு" பற்றிய அறிவு என்பது தர்க்க சாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரத்தில் (நியாசூத்திரத்தில் கூறப்படும் பதினாறுபதார்த்தங்கள் பற்றிய அறிவாக வும் (8 X 2) பத்து அளவைகள் பற்றிய அறி வாகவும் (8 + 2) அர்த்தப்பட இடமுண்டு.

**பகுப்பாய்வு**

- ❖ மணிவாசகரிடம் தீவிர பௌத்த எதிர்ப்பு மனோநிலை இருந்துள்ளமையினை அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் அடையாளங்காட்டியுள்ளன.
- ❖ ஆதிசங்கரரின் காலத்துக்கு சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நாகார்ச் சுனரின் சூனியவாதம் (மத்ய மிகம்) "மாயாவாதம்" என்ற பெயரால் வழங்கியிருக்கிறது.
- ❖ அத்வைதம் தூயகருத்து முதல் வாதம். அதில் பொருள்முதல்வாதச் சாய லுக்கு எந்த இடமுமில்லை. மணிவாசகரின் குறித்த பாடற்பகுதியில் உலகாயதம் பற்றிய செய்தியும் ஒட்டியுள்ளமை நோக் கற் பாலது.தென்னகத்தில் எந்தக் காலத்திலும் உலகாயதம் சைவத்துக் குத் தனித்த ஒரு கோட்பாடாய் நின்று சவால் விடுத்ததாய் வரலாறில்லை. ஆனால் பௌத்த மெய்யியற் பிரிவுகள் சில பொருள் முதல்வாதத்தின் அடிப் படைகளை உள்வாங்கியுள்ளன.
- ❖ மணிவாசகர் விபரிக்கும் பட்டி மண்டப அனுபவம் மணிமேகலையின் சமயக் கணக்கர்தம் திறங்கேட்ட காதையை நினைவிற்கொணர்கிறது.
- ❖ ஆதிசங்கரரிடம் சைவவிரோத உணர்வு இருந்ததற்குச் சான்றில்லை. மாறாக சம்பந்தரை மரியாதையுடன் நினைவு கூர்ந்திருக்கிறார். மாறாக ஆதிசங்கர ரின் நேரடி எதிரிகளாயும் பௌத்தர் களே திகழ்ந்துள்ளனர். சைவபக்தி இயக்கத்தினரும் அத்வைதத்துடன் பகைமை பாராட்டவில்லை மாறாக மென் போக்கையே கைக்கொண்டிருந்தனர். இந்நிலை பிற்காலச்சோழர்காலம் வரை யில் தொடர்ந்தது.

இவை யாவற்றையும் சீர்தூக்கி நோக்கும் போது மணிவாசகரால் மிண்டிய மாயாவாதமாய் விமர்சிக்கப்பட்ட தத்துவ நெறி ஆதிசங்கரர்காலத்தில் நிலவிய அத் வைதவேதாந்தமே என்பதனை ஐயந்திரி பின்றி ஏற்றுக்கொள்வதில் இடர்ப்பாடுகள் உள்ளதாகவே எண்ணத்தோன்றுகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


- ❖ இராமலிங்கம், நா.,(1989),கந்தபுராண ஆராய்ச்சி, மதுரைப் பல்கலைக்கழகம்.
- ❖ கந்தசாமி, சோ.ந.,(2003),இந்தியத் தத்துவக் களஞ்சியம், II, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை
- ❖ சுப்பிரமணியன், நா.,(2003),நால்வர் வாழ்வும் வாக்கும், கலைஞன் பதிப் பகம் சென்னை.
- ❖ முகுந்தன், ச.,(2012),"கந்தபுராணத்தில் அத்வைதம் - ஓர் சமூகப் பண்பாட்டு நோக்கு" பல்நோக்குப் பார்வையில் முருக தத்துவம், ஆய்வரங்கத் திரட்டு மலேய் பல்கலைக்கழகம், மலேசியா.
- ❖ ஞானசம்பந்தன், அ.ச., (:2007), திரு வாசகம் சில சிந்தனைகள்-1, கங்கை வெளியீடு, சென்னை.
- ❖ Das Gupta, S.N(1982), **A History of Indian Philosophy** vol. i, Motilal Banarsidas, Delhi.


**இணையப்பக்கங்கள்**


- ❖ https://shaivam.org/panniru-thirumurai
- ❖ https://shaivam.org/thirumurai/8/eighth-thirumurai-thiruvasagam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரத்தில் சிகிவாகனன்

**த.அபிநாத்**
யாழ் இந்துக்கல்லூரி தரம்12

**அறிமுகம்**

ஒப்பற்ற தலைவன் தலைவியின் செப்புவதற்குரிய சிறப்புக்களை செறிவாகக் கூறுவது பெருங்காப்பியம் இனிமையானது எம் தமிழ்மொழியை செம்மைப்படுத்தும் பெருங்காப்பியங்களில் தலையானது சிலப்பதிகாரமாகும். கண்ணகி, கோவலன், மாதவி போன்ற பாத்திரங்களின் மூலம் பண்டைத்தமிழர் நாகரிகம், பண்பாடு போன்ற பல விடயங்களை அழகாக முன்வைக்கிறார் இளங்கோவடிகள். சமணரால் இந்நூல் படைக்கப்பட்டிருப்பினும் முருகன், திருமால், கொற்றவை பற்றிய பல தகவல்களை சிலப்பதிகாரம் அழகாக முன்வைக்கின்றது. அவ்விதம் சிலம்பு முருகனைப் பற்றி பல விடயங்களை செப்புகின்றது. கோவலனை இளங்கோவடிகள் "கண்டு ஏத்தும் செவ்வேள்" என்றும் கண்ணகியை குன்றக் குரவையில்

**"மலை வேங்கை நறுநிழலின்,
வள்ளி போல்வீர்! மனம் நடுங்க
முலை இழந்து வந்து நின்றீர்.
யாவிரோ? என"**

வள்ளியாக வர்ணித்தும், சிலப்பதிகாரம் எழுந்தகாலமான சங்கமருவிய காலத்தில் முருகனுடைய முக்கியத்துவத்தையே பருகுகின்றன மேலும், காரத்திகைப் பெண்கள் முருகனை வளர்த்த செய்தியையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

**"சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுல்லைப் பால் உண்டான திருக்கை வேலன்றே**

இது மூலம் முருகன் பற்றிய புராணச் செய்திகளையும் சிலம்பு பதிவு செய்துள்ளதை அறிய முடிகின்றது.

**குமரவேளின் வீரம்**

சங்ககாலத்தில் எழுந்த பல இலக்கியங்களில் வீரம் பொருந்திய கடவுளாக முருகப் பெருமான் வணங்கப்பட்டிருக்கின்றார். இதற்கு பல சங்கநூல்கள் சாட்சியளிக்கின்றன. வீரமுடையவன் எதிரி மீதுபோர் மேற் செல்கையிலே மிகுந்த சினத்துடன் காணப்படுவான் இந்த சீற்றம் முருகனோடேயே ஒப்பிடப்பட்டுள்ளது.

**"முருகற் சீற்றத்து உருகெழு குரிசில் (பொருநராற்றுப்படை) முருகற் சீற்றது உருகெழு குரிசில் (புறம் 16)**

அதுமட்டுமன்றி முருகன் சூரபதுமனை வதைத்த செய்தியை புறநானூறு

**சூர்வை முருகன் சுற்றுத் தன்ன நின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர் (புறம் 23)**

சிலப்பதிகாரத்திலும் முருகன் சூரபத்மனை கொன்றழித்து வீரமன்ய நின்றதை அழகாக பதிவு செய்திருக்கிறது.

**உரையினி மாதராய் உண்கண் சிவப்பப்,
புரைதீர் புனல் குடைந்து ஆடின், நோமாயின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரவு நீர் மாகொன்ற வேல் ஊந்தி ஏத்திக்
குரவை தொட்டுத்தொன்று பாடுகம் வா

இப்பாவானது மங்கையொருத்தி தன்தோழிக்கு உரைப்பதாய் அமைந்திருக்கின்றது. அஞ்சன் மைதீட்டிய நம் நயனங்கள் சிவக்குமாறு நாம் புதுப்புனலிலே குடைந்து குடைந்து ஆடினோம் ஆயின் இனிக் கடல் நடுவில் மாமரமாய் நின்ற அவுணனை கொன்ற வெற்றி வேலேந்திய வனாயினமுருகன் போற்றி குரவை தொடுத்து பாடலாம் என்றமையும் இப்பாடலில் சூரன் மாமரமாய் நின்ற போது சூரனை வதைத்த செய்தி குறிப்பிடப்படுகின்றது. சிலப்பதி காரத்தில் இன்னொரு இடத்தில் முருகன் கையில் விளங்குகின்ற வேல் சூரபதுமனை கொன்று வீரம் புரிந்த செயலை பதிவு செய்கின்றது.

பாரிடும் பௌவத்தின் உளப்புக்குப் பண் டொருநாள்
சூர்மா தடித்த சுடரிலைய வெள்வேலே!

மேலும் கிரவுஞ்சகிரி என்ற மாபெரும் மாய மலையை அழித்த செய்தியை

குருதி பெயர்க் குன்றம் கொன்ற மடவன்
வருதிகிரி கோலவுணன் மார்பம்பிளந்து
குருதி பெய்ரக்குன்றம் கொன நெடுவேலே

என பதிவு செய்திருக்கின்ற சிலப்பதிகாரம் இவ்வாறாக சிலம்பிலே முருகன் சூரபதுமன், கிரவுஞ்சகிரியைவதம் புரிந்த செயல்களின் மூலம் அவனுடைய வீரத்தையும் வேலின் திறத்தையும் வாசிக்கும் வாசகர்கள் அறிந்து கொள்ள முடியும்.

## முருகப்பிரானின் தோற்றப்பொலிவு

சிலப்பதிகாரத்தில் குமரவேலின் உருவமைப்பைப் பற்றிய பல சான்றுகள் உண்டு. முருகன் ஆறு முகங்களையும், பன்னிரெண்டு கைகளையும் வேலை ஏந்தி நிற்பவன் என்பதை சிலப்பதிகாரத்தின் குன்றக்குரவையில்

அணி முகங்கள் ஆறும், ஈராறு கையும்,
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே.

மேலும் முருகன் மலையில் ஊர்தியாய் கொண்டவன் என்பதையும் பிரியமானவளான வள்ளியைத் தான் போகும் இடமெல்லாம் அழைத்துச் செல்பவன் என்பதை

வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும்
அமலர் செல்வன் புதல்வன் வரும் ……

என்று குறிப்பிடுகின்றன அதுமட்டுமன்றி முருகப் பெருமான் கடம்ப மலர் மாலையை விரும்பிச்சூடுபவன் என்பதை

கார்கடப்பந்தார் எம் கடவுள் வருமாயின் என்றும் கடம்பமலரால் ஆகிய மலர் மாலையை முருகன் விரும்பிச்சூடுவதால் சிலம்பின் ஒரு பாடலடியில் முருகனை குறிப்பதற்கு அலர்கடம்பன் எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது.

## முருகனின் தலங்கள்

சங்ககாலத்தில் எழுந்த திருமுருகாற்றுப்படையில், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை, ஆறுபடை வீடுகளென முருகனின் தலமாக கூறப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் நான்கு ஆலயங்களில் முருகன் நீங்காது உறை பவன் என குறிப்பிடப்படுகின்றது.

சீர்கெழு செந்திலும், செங்கோடும், வெண் குன்றும்
ஏரகமும் நீங்கள் இறைவன் கை வேலன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வடிகள் கூறும் ஆலயங்களான திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) திருச் செங்கோடு, திருவென்குன்றம், சுவாமிமலை (திருவேரகம்) ஆகியவை.

**நோய் நீக்க வெறியாடல்**

அக்காலத்தில் தமிழர்கள் ஒரு தலைவி மீது காதல் வயப்பட்டு காம நோயி னால் வருந்துவராயின் அவளுடைய தாய் இந்த நோயிற்கு காரணம் தலைவன் என்று உண்ணாமல் முருகன் வந்து அணங்கிய தாய் கருதி வேலன் பூசாரி மூலம் முரு கனுக்கு வெறியாட்டை நிகழ்த்துவார் இது பற்றி பல இலக்கியங்களில் குறிப்புகள் உள் ளது நற்றிணையில்

**கார்நறும் கடம்பின் கண்ணிசூடி**
**வேலன் வேண்ட வெறிமனை வந்தோய் (நற்றிணை 34)**
**கடவுள் ஆயினும் ஆக**
**மடவை மன்ற வாழிய முருகே**

காதல் நோயால் பீடிக்கப்பட்ட தலைவியின் தாய் முருகா உண்மையை நீ அறிந்திருப்பினும் தாயாகிய நான் வேலன் மூலம் வேண்டிய வேண்டுதலுக்கருள் புரிவாய் அதை ஏற்று வந்தனை நீகாத்தற் கடவுள் தான் எனினும் நோயை தலைவ னாலன்றினால் தீர்க்கமுடியாது அவ்வாறு தீர்க்க வந்ததால் தான் பேதையாகி விட்டேன் என்று இப்பாடலடியின் பொருள் அமைந்திருக்கிறது. கபிலர் பாடிய குறிஞ் சிப்பாட்டில் மேற் கூறியதுபோல் பெண்ணின் நோய் தீர்ப்பதற்காக முருகனது முன்றிலில் மறிகளை அறுத்து பலியிடுகையில் போரிலே அம்புபாய்ந்த யானை உடலிலிருந்து குருதி பாய்வது போரில் இரத்தம் பாய்வது போன்று வர்ணிக்கப்படுகின்றது.

**புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதரம்**
**புள்ளி வரிநுறுதல் சிதைய நில்லாது**
**அயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவேள்**
**அனங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்ப**

இதைப்போலவே காதலில் பீடிக் கப்பட்ட தலைவி ஒருத்தி இந்நோய்க்கு காரணம் என் காதலனாகிய தலைவனே அவன் தான் இந்நோயை தீர்ப்பவனுமாவான் இதையறியாத என் அன்னை முருகன் என்மீது இணங்கியதாய் நினைத்து அதற் காக வெறியிட்டு நிகழ்விக்க எண்ணி யதும் வேலனை வருக என்று கூறியது நகைப்புக் குரியது. முருகனை பூசிக்கும் வேலன் வந் தால் அவனும் மடவன் அவனோடு முருகன் வந்தால் அவனும் மடவனடி என்று பொரு ளில் சிலப்பதிகாரத்தில்.

**இறைவனை நல்லாய் இது நகையாகின்றே**
**கரிவளர் தன் சிலம்பன் செய்தநோய் தீர்க்க**
**அறியாள் மற்று அன்னை அலர கடம்பன் என்றே**
**வெறியில் தான் விரும்பி வேலன் வருக என்றாள்**
**ஆய்வளை நல்லாய் இது நகை யாகின்றே**
**மாமலை வெற்பன் நோய் தீர்க்கவரும் வேலன்**
**வருவாயின் வேலன் மடவன் அவளின்**
**குருதிப்பெயர்க் குன்றம் கொன்றான் மடவன்**
**செறிவளைக்கை நல்லாய்! இது நகையாகின்றே –**
**வெறிகமழ் வெற்பன் நோய் தீர்க்கவரும் வேலன்!**
**வேலன் மடவன், அவனினும் தான் மடவன்**
**ஆல்மர் செல்வன் புதல்வன் வருமாயின்,**
**நேரிழை நல்லாய்! நகையாம் – மலைநாடன்**
**மரபுதரு வெந்நோய் தீர்க்கவரும் வேலன்,**
**தீர்க்கவரும் வேலன் தன்னினும் தான் மடவன்**
**கார்க்கடம்பந்தார் எம் கடவுள் வருவாயின்**

இவ்வடிகள் அமைந்திருக்கின்றது. இவற்றில் முருகன் ஆலமர் கெப்பவனாகிய சிவனின் புதல்வன் என்றும் கிரவுஞ்சகிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்தவன் என்ற செய்திகள் குறிப்பிட்டுள்ளது.

**மணவணி வேண்டினர்**

சங்க நூல்களில் முருகன் மகப்பேற்றுக்காகவும், காதல் நோய் தீர்க்கவும் வழிபடப்பட்டிருக்கின்றான். ஆனால் சிலப்பதிகாரத்தில் பெண்கள் தம் மனதிற்கிசைந்தவனையே தம் மணவாளனாக்க வேண்டும் என்பதற்காக முருகனிடம் மணவணி வேண்டுவோம் என்றும் பொருளில் அவனை வணங்கியுள்ளதை சிலப்பதிகாரம் கூறுகின்றது. அவர்கள் வெறியிட்டு நிகழ்ந்தால் முருகன் மயிலில் வள்ளியோடு வருவான் என்றும் அப்போது அவனிடம் பெருமலைக்குரியவனாகிய வெற்பனுடன் எமக்கு மணம் நிகழ அருள்களன்றும்(தனது துணையோடு திருமணம்) சுற்றத்தார் செய்யும் திருமணத்தை தடுத்து காதலனோடு மணம் தருமாறு அருள வேண்டும் என்றும் உன் இருபாதங்களையும் வணங்குகின்றோம் வெற்பனுடன் பலரறிய மணவினை நிகழ்த்துவதற்கு உன்னையே நம்பியிருக்கின்றோம் என்று இறைஞ்சி வேண்டுவது மட்டும் அன்றி ஆறுமுகனுடைய ஒப்பற்றவனே நின் துணைவியான குறமகள் இருக்கிறாளே அவளினதும் உனதும் திருவடிகளையும் தொழுகின்றோம். நீர்த்துறையின் நல்மணம் அருள்வாயாக என்று அனைவருக்கும் பொதுவாகவும் வேண்டுகின்றனர்.

**வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து,**
**நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும்**
**ஆலமர் செல்வன் புதல்வன் வரும் வந்தால்**
**மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே**
**கயிலை நன் மலையிறை மகனை நின் மதிநூல்**
**மயிலியல் மடவரால் மலையர் தம் மகளார்**
**செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்**
**அயல்மணல் ஒழி அருள் அவர்மணம் எனவே**
**குலமலை உறைதரு குறவர் தம் மகளார்**
**நிலை உயர் கடவுள்! நின் இணையடி தொழுதோம்**
**பலரறி மணம் அவர் படுகுவர் எனவே**
**குறமகள் அவள் எம் குலமகள் அவளோடும்**
**ஆறுமுக ஒருவ! நின் அடியினை தொழுகேம் -**
**துறைமிசை நின் திரு திருவடி தொடுநர்**
**பெறுநகல் மணம் விடு பிழை மணம் எனவே**

இங்கு முருகனின் நீர்த்துறையின் கண்ணே வீற்றிருப்பவர் என்றும் வேண்டுகின்ற வரங்களை அளித்து அருள் புரிபவர் என்ற கருத்துகள் புலப்படுகின்றன.

**முடிவுரை**

சிலம்பிலே முருகனின் வீரம் அவனின் உருவமைதி அவனுடைய அருட்திறம் பற்றியும் பண்டைய மக்கள் முருகன் மேல் கொண்டிருந்த உறுதியின் நம்பிக்கைகளையும் நாம் அறியமுடிகின்றது. அதுமட்டுமன்றி சங்ககாலத்தில் கைக்கொள்ளப்பட்ட முருகன் பற்றி பல விடயங்கள் சங்க மருவிய காலத்தில் மலர்ந்த சிலப்பதிகாரத்தில் காணப்படுவதும் இன்றுவரை அது நிலைத்திருப்பதற்கும் திருமால் மருகனின் திருவருளே காரணம்.

**உசாத்துணை**


❖ க. சொக்கலிங்கம் பழையரிற் பழையனாம் பரமன் சிறுவன், நல்லைக் குமரன் மலர், யாழ் மாநகரசபை, 1999
❖ பேராசிரியர் ச.மனோன்மணி சேயோன் மேய மைவரை உலகு (முருகு) 2018 சிலப்பதிகாரம் தெளிவுரை, புலியூர் கேசிகன் (பாரிநிலையம்)
❖ பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் முருகு 2018.
❖ த.அபிநாத் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கலைப்பிரிவு 2022




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால் வகை வாழ்க்கை நிலை (ஆச்சிரம தர்மம்)

சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

இந்துமத செயற்பாடுகள் யாவும் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கானதாக அமைந்துள்ளன நால்வகை வாழ்க்கை நிலை என்பது பிரமச்சரியம், கிருகஸ்த்தம், வானப்பிரஸ்த்தம், சந்நியாசம் என வகுக்கப் பட்டுள்ளன. அர்த்தமுள்ள இந்து மதம் என்ன சொன்னது அது அவரவர் கடமைகளை வகுத்துத் தந்தது. எனும் கவிஞர் கண்ண தாசனின் கூற்று ஒரு மனிதன் தான் எந்த நிலையில் இருந்தாலும் தனது கடமை களைச் செய்ய வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**பிரமச்சரியம் (மாணவ நிலை)**

இது ஒருவரது கல்விகற்கும் நிலை யைக் குறிக்கிறது பிறந்தது முதல் தனது அறிவை வளர்ப்பதற்காக கல்வி கற்பதில் ஈடுபாடு கொள்ள வேண்டுமென்பது முக்கிய மாகக் கூறப்பட்டுள்ளது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது போல் திருமணம் செய்வதற்கு முன் கற்கவேண்டிய கல்வி கலைகள் கற்க வேண்டுமெனக் கூறப்பட் டுள்ளது. வேதகாலத்தில் குருவின் வீட்டுக் குச் சென்று கல்வி கற்பது வழமையாக இருந்தது. இதனைக் குருவில்லா வித்தை பாழ் என்பதிலிருந்து அறியலாம். குருகுலம் திண்ணைப் பள்ளிகள், ஆலயங்கள், மடங் கள் ஆதினங்கள் என்பன கல்வி கற்கும் நிலையங்களாக விளங்கின. கல்வி கற்கும் காலத்தில் கற்க வேண்டிய விடயங்களைக் கற்று தேவையான பயிற்சிகளையும் பெற் றுக் கொள்வார்கள் கண்ண பரமாத்மாவும் குசேலரும் ஒன்றாகக் கல்வி கற்றமையை அறிகிறோம்.

ஏற்றத் தாழ்வின்றி கல்வி கற்கும் காலத்தில் எல்லோரும் சமமாகக் கல்வி கற்றனர் என்பதற்கு கண்ணபரமாத்மா குசேலர் ஒன்றாகச் சேர்ந்து குருவிடம் சென்று கல்வி கற்றமை சான்றாகிறது. கல்வி கற்கும் காலம் மகிழ்ச்சியான காலமாகும். குருவுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்து அவருக்குப் பணிவாக இருந்து கல்வி கற்றால் எல்லா நன்மையும் கிடைக்கும் என்பது நம்பிக்கையாக விளங் கியது. ஞான நூல்கள், நீதி நூல்கள், அற நூல்கள், சாத்திர நூல்களைக் கற்றுத் தெளி வது பிரமச்சரிய நிலையில் முக்கியமான தாகக் கருதப்பட்டது. முன்னைய நாட் களில் கல்வி கற்றதைப் போன்றே தற்காலத் திலும் பாடசாலைக் கல்வியிலும் குருவிற்குப் பணிவாக நடந்து கல்வி கற்கும் நிலை காணப்படுகிறது. கால வளர்ச்சிக்கேற்ப நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக் கேற்ப கல்வி விரிந்து வளர்ந்து செல்கிறது. எல்லோரும் கல்வி கற்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது. மாணவர்கள் கற்க வேண் டிய விடயங்களை கல்வி கற்கும் காலமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமச்சரிய நிலையில் கற்று ஆச்சிரம நிலையின் படி முறையில் முதலாவது நிலையாகிய பிரமச்சரிய நிலையைக் கடந்து செல்வது முக்கியமானதாகும்.

ஆறுமுகநாவலர் அவர்கள் பிரமச்சரிய நிலையில் வாழ்க்கை முழுவதுமிருந்து தானும் சிறந்த முறையில் கல்வி கற்று சம காலத்தவர்கள் எதிர்காலத்தில் கற்பவர்களுக்கு எனப் பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் புராணங்களை வசன நடையில் எழுதிப் பதிப்பித்தும் பல பணிகளைச் செய்து மாணவப் பருவத்தில் கல்வி கற்பவர்களுக்கு வசதியாக பல நற்காரியங்கள் செய்து பிரமச்சரிய நிலைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர் குருவானர் தன்னிடம் கல்வி கற்றவர்களை முழுமையான பயிற்சிகள் முடிந்ததும் ஆசீர்வதித்து நல்ல புத்திமதிகளைக் கூறி வீட்டுக்கனுப்புவார். குருவிடம் ஆசிபெற்று பெற்றோரிடம் செல்லும் மாணவர்கள் பிரமச்சரிய நிலையின் அடுத்த நிலையான கிருகஸ்த நிலைக்குச் செல்வார்கள்.

**கிருகஸ்த நிலை (இல்லற நிலை)**

பிரமச்சரிய நிலையில் நல்லொழுக்கம் பழக்கங்கள் பண்புகளுடன் வளர்ந்து அடுத்த நிலையாகிய இல்லற நிலைக்குச் சென்று (திருமணம் செய்து) சந்ததி விருத்தி இல்லற தர்மங்களைச் செய்யும் நிலை முக்கியமான நிலையாகும். நால்வகை வாழ்க்கை நிலையில் ஏனைய மூன்று நிலைகளில் உள்ளார்களையும் பேணுதல் இல்லற நிலையில் உள்ளவர்களின் தலையாய பணியாகும். இதனை வள்ளுவர்

**இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை**

என்ற குறள் மூலம் கூறுகிறார்.

ஏனைய மூன்று நிலையில் உள்ளவர்கள் தமது நிலைகளைக் கடைப்பிடித்து கடந்து செல்லத் தேவையான உதவிகளைச் செய்தல் இல்லற நிலையிலுள்ளவர்களுக் குரிய பொறுப்பாக விளங்குகிறது.

ஐந்துவிதமான வேள்விகள் இல்லற நிலையிலுள்ளவர்கள் செய்ய வேண்டுமெனக் கூறப்படுகிறது.

- தேவயக்ஞம்
- பிதுர் யக்ஞம்
- அதிதி யக்ஞம்
- பூத யக்ஞம்
- மானிடயக்கஞம்

என்பன ஐந்துவித வேள்விகளாகும்.

இதனை வள்ளுர்

**"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்**
**தான் என்றாங் ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"**

எனும் குறள் மூலம் குறிப்பிடுகிறார்.

**"இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந் தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

இல்லற நிலையில் ஏனைய மூன்று நிலையிலுள்ளவர்களையும் பேணிப்பாதுகாத்து விருந்தோம்பலின் மூலம் இல்லறத்தை நல்லறமாக்கி மேன்மை பெறலாம்.

**வானப்பிரஸ்த்த நிலை**

இல்லறத்தைச் சரியாகக் கடந்து தனது பிள்ளைகள் இல்லற நிலைக்குச் சென்ற பின் இல்லறத்திலிருந்த ஒருவர் தன் மனைவியுடன் காட்டுக்குச் சென்று தவம் செய்யும் நிலை வானப்பிரஸ்த்த நிலை எனக் கூறப்படுகிறது. முற்காலத்தில் இவ்வாறு தனிமையாக வாழ்ந்தனர். இன்றைய நிலையில் இவர்கள் தம் வீடுகளில் தனிமையாக மனைவியுடன் வாழும் நிலை காணப்படுகிறது. அடுத்த நிலையாகிய சந்நியாச நிலைக்கு தம்மைத் தயார்படுத்தும் நிலையாக இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகிறது. இந்நிலையில் உலகியல் பற்றுக்கள் படிப்படியாகக் குறைந்து போகும்.

**சந்நியாச நிலை**

நால்வகை வாழ்க்கை நிலைகளில் இறுதி நிலையாகச் சந்நியாச நிலை அமைகிறது. உலக ஆசாபாசங்களை விட்டு நீங்கி இறை சிந்தனையுடன் முக்தி அடைவதற்கான நிலையே சந்நியாச நிலையாகும் ஆன்ம ஈடேற்றம் என்பது இறைவனை அடைதல் என்பதாகும்.

இதனை வள்ளுவர்,

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்**

என்று கூறுவது ஒருவன் எது எதிலிருந்து நீங்குகிறானோ அவற்றிலிருந்து எந்தத் தாக்கமும் வராது. அந்த நிலையில் அமைதியாக இருக்கலாம். அனைத்தும் சமம் எனும் நிலை ஏற்படும் கோயில்களில் தனிமையாக இருந்து உலகத் தொடர்புகளின்றி இறை சிந்தனையுடன் இருப்பார்கள். நான்கு நிலைகளையும் படிமுறையாகக் கடக்காது சந்நியாச நிலைக்கு வந்த சங்கரர், விவேகானந்தர், சுகர் போன்றவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள் நால்வகை வாழ்க்கை நிலைகளையும் சரியான முறையில் கடப்பவர்கள் வாழ்க்கை இலட்சியத்தை அடைந்து ஆன்ம ஈடேற்றம் பெறுவர்.

# தெய்வச் செயல் சேர்க்கும் நல்லூரான்

நல்லூரான் புதுமை தெய்வச் செயல் சேர்க்குமே
நல்லை மலரே உன்பணியே உயர்பணி
ஒவ்வொரு அடியவனின் உள்ளத்திலும் உன்
ஒளியாய் யிருந்து கவிதையாய் கட்டுரையாய் வேலே
மிளிரும் பண் செயல் என்னே நல்லூர் வேலே
பின் வரும் சந்ததி அறிய ஆராய அரசமைக்குமே
என்னே உன் அருள் காலமும் கனிந்துவர
சொல்லாயோ வெல்லாயோ நல்லூர் வேலா
எல்லா இடங்களிலும் விஞ்ஞான வளர்ச்சியால்
எல்லாம் அமைக்கப்படுகுது நல்லூருக்கு ஆறில்லையே
அவன் அழகை நினைத்துப் பார்க்க அரண் யாழ் அமைந்தது
தமிழன் தலையாய் நிமிர்ந்து நிற்குதே
சுற்றம் சூழல் சுகமாய் பலவாய் அமைந்ததே வாழல்
வெற்றி வேலன் விரைவில் வென்றிடுவான் தமிழ் வாழல்

**கலாபூஷணம் ம.கணேசலிங்கம்**
தினைப்புனம் (மயிலிட்டி) அல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்தி நிற்கும் யோகக்கலையின் சிறப்புகள்

ஸ்ரீ. நதிபரன்
(யோகா போதனாசிரியர்)

இந்து தத்துவமரபின் வழி முகிழ்த்த அரும்பெரும் தத்துவவியலாக நோக்கப் படும் யோகக்கலையின் தாற்பரியத்தை தற்கால அறிவியல்யுகம் நன்கு உணர்ந் திருக்கிறது. தற்காலத்தில் இக்கலையைப் பற்றியதான புரிதல்கள்- அக்கறைகள் சர்வ தேச அரங்கில் மேலெழுகை பெற்றிருக்கின் றமையால்தான் ஐ.நா உயர்சபைவரை எதி ரொலித்துள்ளது. இது இந்துமதம் சார் கலையொன்றிற்குக் கிடைத்த அதியுயர் கௌரவமாக அமைகின்றது. நவீன மருத் துவவியலே வியக்குமளவிற்கு பாரம்பரிய மருத்துவ விஞ்ஞானமாகிய இக்கலை, சகலவிதமான உடல், உள ரீதியான நோய் களைக் குணமாக்கும் திறனை அதிகமாகப் பெற்றிருக்கின்றமையே சர்வதேசத்தை திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. இத் துணை சிறப்புக்களையுடைய யோகம் எனும் விடயப் பரப்பு விசாலமானது. இதற் குள் இருக்கக்கூடியதான மெஞ்ஞான அறி வியல் விடயங்கள், நவீன விஞ்ஞான ரீதி யான கொள்கைகளுக்கு முன்னோடியாக விளங்குகின்ற தெனில் அதில் தவறிருக்க முடியாது. யோகம் எனும் சொல் ஆழ்ந்த பொருட்தத்துவத்தை எமக்குணர்த்தி நிற் கிறது. "யுஜ்" எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்துநிற்கும் பொருளை நோக்கின், இணைத்தல் அல்லது ஒன்று சேர்த்தல் என்ற நேரடி அர்த்தம் கொண்டு, நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட் டிற்கு வித்திடும் அறிவியற்கலையாக விளங்குகிறது. இதனை இன்னொருவித மாகக் கூறும்போது ஜீவாத்மா, பரமாத் மாவுடன் இணைதலுக்கான ஒழுக்கநெறி களை - வாழ்வியல் ரீதியான விடயங்களை போதிக்கும் துறை இதுவாகும். இறை வனால் மனிதனின் ஆன்ம ஈடேற்றம் கருதி அளிக்கப்பெற்ற அரும்பெரும் பொக்கிச மான இக்கலையைச் சூத்திர வடிவில் தொகுத்தளித்த பெருமை யோகி பதஞ்சலி மாமுனிவரையே சாரும். இவரே பின்னாளில் யோகத்தின் தந்தையாக போற்றிச் சிறப் பிக்கப்படுகிறார். இவரால் ஆக்கப் பெற்ற யோக சூத்திரங்களே மூல நூலாக கொள் ளப்படுகிறது.

இற்றைக்கு சுமார் 5000 ஆண்டுகள் பழமைவாய்ந்ததாக நம்பப்படும் இக்கலை யின் தோற்றம் பற்றிக் கருத்துரைப்பதானது விவாதத்திற்குட்பட்டவகையாலும், உறுதி யான எழுத்தாவணங்கள் இன்மையாலும் இது பற்றிய ஆய்வை மேற்கொள்வது கடின மானது. காரணம், சனாதன தர்மம் எனப் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்ற இந்துமதத் தின் தோற்றக்காலத்தைச் சரியாக கணிப் பதும் வரையறைக்குட்படுத்துவதும் முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத காரியம். எனவே ஆதியாய் அனாதி யாய் விளங்கும் இந்துமதமானது திடமான கால தேச வர்த்தமான வரையறைகளுக் கப்பாற்பட்டதாகவே விளங்குகிறது. ஊகத் தினடிப்படையில் அமைந்த தொல்லியலா ராய்ச்சிச் சான்றாதாரங்கள் வெளிப்படுத்தி நிற்கும் முடிவுகளின்படி சிந்துவெளி நாக ரிகத்துடனே இந்துமதத்தின் வழிபாட்டியல் சார்ந்த தோற்றமும் ஆரம்பமாவதாக ஆராய்ச் சியாளர்கள் கருதுகின்றனர். இதிலிருந்து நேரிடையாக நோக்கின் மிகப்புராதனமான இந்துமதத்தின் வேரிலிருந்து முகிழ்த் தெழுந்த யோகக்கலையும் சிந்துவெளி யுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும் என்ற வாதமும் வலுக்கொள்வது தவிர்க்க முடி யாது. அந்தவகையில் சிந்துவெளியில் கண் டெடுக்கப்பட்ட முத்திரைகளில் தியான நிலையிலுள்ள யோகியின் உருவம் பொறிக் கப்பட்டுள்ளமை இக்கலை மிகவும் பழமை யானது என்ற முடிவுக்கு வலுச்சேர்க்கிறது. தொடர்ந்து வந்த வேதகாலம் மற்றும் புராண, இதிகாச காலங்களில் இக்கலை பற்றியதான குறிப்புக்களைப் பரவலாக காணலாம். வேதாந்த, சித்தாந்த தத்துவங் கள், சாங்கிய, வைசேடிக தத்துவங்கள் மற் றும் பிரம்ம சூத்திரம் போன்ற பல தத்துவங் களிலும் யோகத்திற்கு காத்திரமான முக் கியத்துவமளிக்கப்பட்டிருக்கிறது. பகவத் கீதையில் 6 ஆம் அத்தியாயத்தில் யோகத் தைப்பற்றிய ஏராளமான அம்சங்கள் உள்ள டங்கியிருக்கின்றமை குறிப்பிடற்பாலது.

யோகமார்க்கத்தை பயிற்சிமுறை யினை அடிப்படையாகக்கொண்டு இரு வகையாக பிரித்து நோக்கலாம். முதல் வகை உடல் சார்ந்தது. மற்றையது மனம் சார்ந் தது. இங்கு உடலை அடிப்படையாகக் கொண்ட யோகப்பயிற்சிகளை மேலும் இரு வகையினதாகப் பகுக்கலாம். 1.ஹட யோகம். 2.லய யோகம்(குண்டலினி யோகம்) அதாவது தற்காலத்தில் அதிக கவனிப்புக் குரியதாக விளங்கும் ஹடயோகம் பற்றிய தான விடயமானது 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யோகியான ஸ்வாத்மராமாவின் "ஹட யோகப் பிரதீபிகா" எனும் நூலில் விளக் கப்பட்டுள்ளது. அதாவது ஆசனப்பயிற்சி களனைத்தும் இதற்குள்ளடங்குகிறது. மனம்சார் யோகப்பயிற்சி முறைகள் மூவ கைப்பட்டன. அவை 1.கர்மயோகம் 2.பக்தி யோகம் 3. ஞான யோகம் என்பவையாகும். இங்கு உடலையும் மனதினையும் மையப் படுத்திய யோகத்தை இராஜ யோக முறைக் குள்ளடக்கப்படுகிறது. யோகக்கலையின் தந்தையாக விளங்குகின்ற பதஞ்சலி மாமுனிவரின் 196 யோக சூத்திரங்களும் இராஜ யோகமுறைக்குள்ளேயே வருகின் றது. பொதுவாக நோக்குமிடத்து சித்தர் கள், யோகிகள் கடைப்பிடித்த யோக முறை யானது பதஞ்சலி மாமுனிவரால் யாக்கப் பெற்ற இராஜ யோகமுறையை அடியொற்றி யதாகும். இஃது உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை ஒன்றிணைக்கும் கருவியாக தொழிற்படுகின்றது. அதாவது ஆன்மா விடுதலையடைந்து ஆனந்த நிலையை எய்த வேண்டும் என்பதே இதன் பிரதான குறிக்கோளாகும். இது மனிதனது உடல், உள, ஆத்மிக நலன்களை மேம்படுத்து வதில் தொடங்கி இறுதி இலட்சியமான மோட்ச நிலையையடைதலீறான வாழ்வியற் கோட்பாடுகளை படிமுறையாக விளக்கு கின்றது.

இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப்பரப்பாகிய அட்டாங்க யோகம் எனும் எட்டுவகையான வாழ்வியற் படி முறைகள் காணப்படுகிறன. இது பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கத்தை மிகச் சுருக்கமாக நோக்கும் போது,

1. இயமம்- தீயவற்றை விட்டொழித்தல் (கொல்லாமை, பொய்கூறாமை, களவு செய்யாமை, காமமின்மை)
2. நியமம்- நன்றாற்றல் (பிறருக்கு உதவுதல், பரோபகாரம், தூய்மையுடைமை, வாய்மை, தவம் புரிதல்)
3. ஆசனம்- இருக்கை நிலை (உடல் நன்நிலையடைதலுக்கான உடல்சார்ந்த பயிற்சிமுறைகளை செய்தல்)
4. பிராணாயாமம்- சுவாசத்தை சீராக்கம் செய்தல்(பிராணனை தன்வயப்படுத்தி அடக்கியாளும் கலை)
5. பிரத்தியாகாரம்- ஐம்புலன்களையும் புறவுலகப் பொருட்களிலிருந்து விடுவித்து அகமுகமாகத் திருப்புதல்
6. தாரணை- மனதை ஒருநிலைப்படுத்தல்
7. தியானம்- மனதை கட்டுப்படுத்தி எடுத்துக் கொண்ட பொருள் மீதான உண்மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல், தெளிதல் நிலைதிரியா மனதினைப் பெறல்
8. சமாதி- உணர்வொடுங்கிய நிலை அதாவது இறைவனுக்குச் சமமான (மோட்ச) நிலை.

அண்டத்திலிருப்பதுதான் பிண்டத்திலும் இருக்கிறது எனும் கருத்துருவே சித்தர்கள் வகுத்த யோகநெறியின் மையக் கருத்தியலாக அமைகிறது. அதாவது அண்டம் என்றால் உலகம் எனவும் பிண்டம் என்பது நமது உடல் எனவும் கொண்டு, அண்டமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் சேர்க்கைகளாலானது. இதுபோலவே உடலிலும் ஐம்பூதங்களின் ஆதிக்கமானது நிலைபெற்றிருக்கிறது. இங்கு நிலம்- பருஉடல், நீர்- இரத்தம் மற்றும் சீல் போன்ற திரவம், தீ- உடல் வெப்பநிலை, காற்று- பிராணன் முதலிய தச வாயுக்கள், ஆகாயம் - மனம் போன்றவற்றைக் குறிப்பதாக அறியப்படுகிறது. இந்தப் பருவுடலானது மண்ணிலிருந்து தோன்றி உயிரடங்கப் பெறுகையில் ஈற்றில் மீண்டும் மண்ணுக்கே திரும்புகிறது. அதனால்தான் அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் இருக்கிறது என யோகிகள் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் மனித வாழ்வியல் இயற்கையுடன் பின்னப்பட்டிருக்கிறது என்ற விடயம் இழையோடியுள்ளது. இருப்பினும் தற்கால நவீனத்துவமான சூழலில் இயற்கையினின்றும் வழுவியதான- இயற்கையை விரோதிக்கும் வாழ்க்கை முறையை வாழத்தலைப்பட்டதனாலேயே நமது வாழ்க்கையில் இத்துணை இடர்ப்பாடு களையும் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடுகிறது. இங்கு யோகமானது இயற்கையை ஆராதிக்கின்றது என்பதற்குச் சான்றாக "சூரியநமஸ்காரம்" என்ற இயற்கைக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற பயிற்சி முறையைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இறுதியாக, தமக்கேயுரித்தான நீண்ட- நெடிய வரலாற்றுப் பாரம்பரியத்தையும் தனித்துவமான வாழ்வியல் அடையாளங்களையும்பேணி உலகிற்கே எடுத்துக்காட்டாக விளங்கிய நம் சமூகத்தின் தற்போதைய நிலையானது பரிதாபத்திற்குரியதாகவே விளங்குகிறது. இந்நிலையில், நமது பண்பாட்டு வேர்களையும் அடையாள இருப்புகளையும் உறுதிசெய்து, அடுத்த சந்ததிக்கும் அளிக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எம்முன் விரிந்திருக்கிறது. அதனொரு கட்டமாக, இந்துப்பண்பாட்டியலின் வழித்தோன்றலான யோகக் கலையின் தனித்துவத்தையும் இருப்பையும் பேணதகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் நிலைபெறச் செய்யவேண்டியது கட்டாயமாகிறது. இன்று நவீன மருத்துவ வியலுக்கே சவால் விட்டு வருகின்ற குணப் படுத்த முடியாத பலவிதமான உடல், உள ரீதியான நோய்களைக் குணமாக்கும் திறன் யோகப் பயிற்சிகளுக்குண்டென்பது விஞ் ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளமையால் இக்கலையின் மீதான நாட்டம், ஆர்வம், தேடல்கள் சர்வதேசமெங்கும் பெருகிவரும் நிலையில், நாமோ மேலைத்தேய மக்களது கலாசாரக் குப்பைகளை இறக்குமதி செய் தும் அவர்களின் வாழ்வியல் நடைமுறை களை பின்பற்றியும் பக்கவிளைவுகள் அதிகம் நிறைந்த மருந்துவகைகளை பயன்படுத்தியும் வருவதால் பல்வேறுவித மான உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியான பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருகிறோம். இன்று நம் சமூகம் எதிர்நோக்கி வரும் பிரச்சினை களுக்கான வழிவகைகளை எமக்குள்ளே யிருந்து நாமே கண்டுபிடித்து நிவர்த்திக்க வேண்டுமே தவிர பிறர்மீது குற்றங்காண விழைவது அபத்தமாகும். இதன்மூலமே எம்மீது வரும் பழிச் சொற்களைக் களைந்து சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள் ளலாம். இவ்விதமான சுயமதிப்பீடுகளுக்கும் சுய விமர்சனங்களுக்குமான சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தவல்ல ஆற்றல் ஆன்மிக மறுமலர்ச்சிக்குண்டென்றவகை யால் அதற்கான உந்து சக்தியாக யோகக் கலையினை மையமாக வைத்தே ஆன்மிக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். இதற் கான முன்முயற்சியாக கல்விக்கூடங்களில் இதனை மாணவர்களுக்குப் போதிப்பதற் கான எத்தனங்களை மேற்கொள்ள வேண் டும். காரணம், இளையோரிடத்தே அதிகரித்து வருகின்ற மது, போதைப்பொருட்கள், புகைத்தல் பாவனைகள் இதன் தொடர்ச் சியால் மேற் கிளம்புகின்ற பாலியல் வன் முறைகள், கொலை, களவு, குழுச்சண்டை கள், குடும்ப வன்முறைகள் முதலிய பல் வேறு சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். எனவே நமது பாரம்பரிய கலைமரபான யோகக்கலையை இன, மத பேதம் கடந்து பேணுவதனூடாக ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி யெழுப்ப முடியும் என்ற கருத்துரு வாக்கச் சிந்தனையை அனைவரிடத்திலும் வலுப் படுத்திச் செயலாற்ற முன்வர வேண்டியது அவசியமாகும்.

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு – 28

28வது நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டு விழா 31.07.2020 அன்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.இ.த.ஜெயசீலன் தலைமையில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது மலரின் ஆய்வுரை கலாநிதி திரு.இ.சர்வேஸ்வரா விரிவுரையாளர், கல்வியியற்துறை, யாழ் பல்கலைக்கழகம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயங்களே சட்டங்களின் விளைநிலங்கள்

பா. பிரசாந்தனன்
55/19 A , சபாபதி வீதி, தலையாளி,
கொக்குவில்.

நாம் வாழ்கின்ற பூமியில் உள்ள உயிரினங்கள் எல்லாம் இறைவனின் படைப்பு என்பார்கள் ஆஸ்திகர்கள். எனினும் உயிரினங்கள் யாவும் இரு உயிர்களின் புணர்ச்சியால் உருவாகின்றன என விஞ்ஞானிகள் குறிப்பிடுவார்கள். எதுஎவ்வாறாக இருந்த போதிலும் ஔவையாரின் கூற்றின்பிரகாரம் அரிதாகக்கிடைக்கின்ற ஆறறிவு உள்ள உயிரினமாகிய மனித சமுதாயத்தினை நல்வழிப்படுத்தி அச்சமுதாயத்தின் மேன்மைக்காக உருவாக்கப்பட்டவை சமயங்கள் ஆகும். இவ்வாறு மனித குலத்தினை நல்வழிப்படுத்தும் நோக்கத்திற்காக இந்த உலகில் பல சமயமார்க்கங்கள் உருவாகியுள்ளன. அந்தவகையில் இந்துமதம், கிறிஸ்தவ மதம், பௌத்தமதம், இஸ்லாமிய மதம், சீக்கியமதம், ஜைனமதம் எனப் பல வகையான சமயமார்க்கங்கள் உலகில் விளங்குகின்றமை நாமெல்லாம் அறிந்ததாகும்.

இந்த சமய மார்க்கங்கள் அவற்றைப் பின்பற்றும் மக்களை நல்வழிப்படுத்தும் முறைகள் வேறுபட்டிருந்தாலும் அவற்றின் நோக்கம் எல்லாம் மனித வாழ்வினை மேம்படுத்துவதாகும் என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. இதனை வேறு வார்த்தையில் சொல்வதானால் பாதைகள் வேறுறென்றாலும் செல்லுமிடம் ஒன்று எனலாம். அதனடிப்படையில் இந்த சமயங்கள் மக்களின் மேம்பாட்டிற்காகத் தத்தமது கடவுளர்களின் மீது பற்று, அன்பு, பயமுறுத்தல் போன்ற பலதரப்பட்ட உத்திகளின் வாயிலாக மனிதர்களுக்கான ஒழுக்கவிழுமியங்கள், கடப்பாடுகள், உறவுகளுக்கிடையிலான கடமைகள் போன்ற பல பெறுமதிமிக்க விடயங்களை வலியுறுத்தி வந்துள்ளன. இவ்வாறான எண்ணங்களை, கருத்துக்களை ஒவ்வொரு சமயங்களிலும் உரிய காலங்களில் வாழ்ந்த சமயகுரவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், அருளாளர்கள், புனிதர்கள், அவதாரபுருஷர்கள், மகான்கள், இறைதூதர்கள் போன்றோர் அந்தந்த சமயங்களைப் பின்பற்றுவோர் மத்தியில் விதைத்துச் சென்றுள்ளனர். அதாவது பஞ்சபுராணங்கள் வெளிப்படுத்தியதும், திருக்குரான் ஓதும்போது உணரப்பட்டதும், திருமூலர் பாடியதும், பைபிளில் உச்சரித்தும் மேலே சொன்ன பெறுமதியான விடயங்களாகும். மேற்கூறப்பட்ட மனிதகுல மேம்பாட்டிற்கான விடயங்கள் காலாதிகாலமாக மக்கட் சமுதாயத்தினால் பரம்பரை பரம்பரையாக நம்பிக்கையின் அடிப்படையில் பின்பற்றப்படுவதன் காரணமாகவே இன்றும் மனித குலம் தன் தனிச்சிறப்பினை இழக்காது நிலைத்து நிற்கின்றமையைக் காணலாம்.

இனி நவீன உலகில் மனித சமுதாயத்தினை ஒழுங்குபடுத்தவும், சமுதாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

